SHANKAR IAS ACADEMY™

Best Academy for Civil Services Exam Coaching

SINCE 2004



# TNPSC
# தேர்வுப் பெட்டகம்

tnpscthervupettagam.com






## மைக்ரோ நடப்பு நிகழ்வுகள்

**பிப்ரவரி 2025**

www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ....2
தமிழ்நாடு செய்திகள் ....18
தேசியச் செய்திகள் ....28
சர்வதேசச் செய்திகள் ....56
பொருளாதாரச் செய்திகள் ....66
அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ....67
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ....72
சுற்றுச்சூழல் செய்திகள் ....82
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ....88
மாநிலச் செய்திகள் ....92
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....99
விளையாட்டுச் செய்திகள் ....101
முக்கிய தினங்கள் ....103
இராணுவ பயிற்சிகள் ....105
இதரச் செய்திகள் ....105

# TNPSC துளிகள்

- தூர்தர்ஷன் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனமானது, வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் கல்வி குறித்த விரிவான ஒரு பிரச்சாரத்திற்காக வேண்டி மின்னணு ஊடகப் பிரிவில் விருதினைப் பெற்றுள்ளது.
- திருக்குறளை பஞ்சாபி மொழியில் மொழிபெயர்த்த மூத்தக் கல்வியாளரும், ககன்தீப் சிங் பேடியின் தந்தையுமான தர்லோச்சன் சிங் பேடி என்பவர் சமீபத்தில் பஞ்சாபின் லூதியானாவில் காலம் ஆனார்.
    - இது 2012 ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள மத்திய செம்மொழி தமிழ் ஆராய்ச்சி மையத்தால் வெளியிடப் பட்டது.
- கடலூர் மாவட்டம் மருங்கூரில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சி தளத்தில் 13 செ.மீ நீளமுள்ள இரும்புக் கத்தியைத் தமிழக மாநிலத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.
- நான்கு மடங்களின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக என்று நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் (HR&CE) முடிவுக்கு எதிராக நித்யானந்தா தாக்கல் செய்த ஒரு நீதிப் பேராணை மேல்முறையீட்டினை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- சென்னை மாநகராட்சி (GCC) பிராந்தியத்தின் செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்கள் அவர்களின் செல்லப்பிராணிகளுக்கு நுண்சில்லுகளைப் பொறுத்துவதைக் கட்டாயம் ஆக்குவதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
- இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது, சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலையில் அவசர அழைப்புகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட "Save Our Souls" (SOS) பெட்டிகளின் புதுப்பிக்கப்பட்ட பெட்டிகளை அமைக்கத் தொடங்கி உள்ளது.
- வேலூர் மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சுத்திகரிக்கப்படாத அல்லது பகுதியளவு சுத்திகரிக்கப்பட்டக் கழிவுநீரை பாலாற்றில் வெளியேற்றியதன் மூலம் "நீர்நிலைகள், நிலத்தடி நீர் மற்றும் வேளாண் நிலங்களுக்கு மீளமுடியாத ஒரு சேதத்தை" ஏற்படுத்தியுள்ளன என்று உச்ச நீதிமன்றமானது தீர்ப்பளித்து, அதற்கான இழப்பீடுகளை வழங்குமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.
- பிர்லா மேலாண்மைத் தொழில்நுட்ப நிறுவனம் (BIMTECH) ஆனது, 'BIMCOIN' எனப்படும் இந்தியாவின் முதலாவது உள்வளாகப் பயன்பாட்டுத் தொடர் சங்கிலி தொழில்நுட்பம் சார்ந்த நாணயத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கட்ச் மாவட்டத்தில் உள்ள குணேரி கிராமத்தின் 32.78 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட, கடல் பகுதி சாராத நிலத்தில் அமைந்த இயற்கையான சதுப்புநிலக் காடுகள் நிறைந்த பகுதியானது, குஜராத் மாநிலத்தின் முதல் பல்லுயிர்ப்பெருக்கப் பாரம்பரியத் தளமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு நடவடிக்கை உச்சிமாநாட்டில் வெளியிடப் பட்ட முதல் தற்சார்பு சர்வதேச செயற்கை நுண்ணறிவுப் பாதுகாப்பு என்ற அறிக்கையானது, செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு மீதான மதிப்பீட்டிற்கான புதிய உலகளாவியத் தரத்தினை அமைத்துள்ளது.

- டெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் ஐதராபாத் ஆகிய ஆறு முக்கியப் பெருநகரங்களில் மனிதக் கழிவகற்றல் தொழிலாளர் மற்றும் கழிவுநீர்த் தொட்டி சுத்திகரிப்புத் தொழிலாளர் முறைகளை முழுமையாகத் தடை செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- நாட்டிலேயே முதல் முறையாக, ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, சுமார் 161 வகையான குடிமைச் சேவைகளை வழங்கக் கூடிய 'மன மித்ரா' என்ற பெயரில் அமைந்த வாட்ஸ்அப் ஆளுகை விவகாரங்கள் சார்ந்த ஒரு வசதியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- மத்திய அரசானது, மேற்கு காசி மலைக் குன்றுகள் மற்றும் கிழக்கு ஜெயின்சியா ஹில்ஸ் மாவட்டங்கள் ஆகிய மேகாலயா மாநிலத்தின் இரண்டு மாவட்டங்களில் அறிவியல் பூர்வமான நிலக்கரிச் சுரங்கத்தைத் தொடங்குவதற்காக என்று மூன்று உள்ளூர் சுரங்கத் தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு உள்ளது.
- இரயில்வே அமைச்சகம் ஆனது, பயணச் சீட்டு முன்பதிவு, இரயில்களில் உணவு வாங்குவதற்கானச் சேவைகள் மற்றும் PNR விசாரணைகள் போன்றப் பொதுச் சேவைகளை வழங்குவதற்கான ஒற்றைத் தீர்வு மையமாக SwaRail என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் அல்லூரி சீதாராம ராஜு என்ற மாவட்டத்தின் அரக்குப் பள்ளத்தாக்குப் பகுதியில் மூன்று நாட்கள் அளவிலான 'சாலி' எனப்படும் அரக்கு உத்சவ் நடைபெற்றது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் டேராடூன் என்ற நகரில் நடைபெறும் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகளைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ஒடிசா வாரியர்ஸ் அணியானது ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற முதல் மகளிர் ஹாக்கி அணியாக மாறியுள்ளது.
- சில நீர்வழிகளுக்கு அருகில் வாழும் மக்களை அதிகளவில் பாதித்த ஆற்றுக்குருடு நோயினை முற்றிலுமாக ஒழித்த முதல் ஆப்பிரிக்க நாடாக நைஜர் மாறியுள்ளது.
- முதலாவது ரைசினா மத்தியக் கிழக்கு மாநாடு ஆனது ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்றது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபரானவர் 2025 ஆம் ஆண்டினைச் சமூக ஆண்டாக அறிவித்து, சமூகம் முழுவதும் ஒற்றுமையையும் உள்ளடக்கத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்தார்.
- தடகளத்தில் (1956) ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற அதிக வயதான அமெரிக்க நீளம் தாண்டுதல் வீரர் கிரெக் பெல் சமீபத்தில் காலமானார்.
- நிதி தொழில்நுட்பத் தளங்களான மொபிக்விக் மற்றும் CRED ஆகியவை மத்திய வங்கியின் எண்ணிம நாணயத்தினை (CBDC) வழங்கச் செய்கின்ற முதலாவது வங்கி அல்லாத நிறுவனங்களாக உருவெடுத்து, தனது தளங்களில் பயனர்களுக்காக வேண்டி e-ரூபி எனும் பணக்கோப்பினை வெளியிட்டு உள்ளன.
- பொது விவகாரங்களில் ஆற்றியப் பங்களிப்புகளுக்காகவும் உலகளாவியத் தளத்தில் இந்தியாவின் கௌரவத்தை மேம்படுத்தியதற்காகவும் டிரினிடாட் மற்றும் டொபாகோவின் அதிபர் கிறிஸ்டின் கார்லா கங்கலூவுக்கு பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங்கப்பட்டு உள்ளது.
- சுமார் 48,000 சதுர கிலோமீட்டர் பசிபிக் பெருங்கடல் பரப்பினை உள்ளடக்கிய பகுதியினை மார்ஷல் தீவுகள் (மத்திய பசிபிக் பெருங்கடல் பகுதி) அதன் முதலாவது தேசியக் கடல் சரணாலயத்தினை அறிவித்துள்ளன.

- மத்திய ஜவுளித் துறை அமைச்சகமானது, கைத்தறி நெசவாளர்கள் E-Pehchaan இணைய தளத்தையும் மற்றும் கைத்தறி விருதுகளுக்கான ஒரு இயங்கலைத் தொகுதியை அறிமுகப்படுத்தி உள்ளது.
- தொழில்நுட்பக் குறைபாடுகள் குறித்த ஒரு மூலக் காரணப் பகுப்பாய்வு (RCA) அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக தொழில்நுட்பக் குறைபாடுகளுக்கான (iSPOT) ஒரு ஒருங்கிணைந்த SEBI இணைய தளம் என்ற இணையதளம் அடிப்படையிலான ஒரு தளத்தினை SEBI அமைப்பு அறிமுகப் படுத்தி உள்ளது.
- ஹைட்ரஜனைக் கொண்டு செல்வதற்காக வடிவமைக்கப்பட்டக் குழாய்களை உருவாக்கிய முதல் இந்திய நிறுவனமாக டாடா ஸ்டீல் நிறுவனம் மாறி உள்ளது என்ற ஒரு நிலைமையில் இந்தியாவின் மிக தூய்மையான எரிசக்தி முன்னெடுப்புகளில் மிகவும் முக்கியமான ஒரு படிநிலையைக் குறிக்கிறது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகத்தின் (MeitY) எண்ணிம இந்தியா பாஷினி பிரிவு (DIBD) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதல் வடகிழக்கு மாநிலமாக திரிபுரா மாறியுள்ளது.
- ஜோஹோ கார்ப் நிறுவனத்தின் ஒரு இணை நிறுவனரான ஷைலேஷ் குமார் தேவே, அதன் புதிய குழுவின் தலைமை நிர்வாக அதிகாரியாக, ஸ்ரீதர் வேம்புவிற்குப் பதிலாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது இந்திய நாட்டின் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு, " Dharohar - Milestones in the Indian securities market- தரோஹர் - இந்தியப் பத்திரச் சந்தையில் புதிய மைல்கற்கள்" என்ற ஒரு எண்ணிம அறிவுக் களஞ்சியத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்திய மகளிர் கிரிக்கெட் அணியானது மலேசியாவில் (கோலாலம்பூர் நகரம்) நடைபெற்ற 19 வயதிற்கு உட்பட்டோருக்கான 2025 ஆம் ஆண்டு T20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் தென்னாப்பிரிக்க மகளிர் அணியை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிக் கோப்பையை வென்றது.
- நெதர்லாந்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு டாடா ஸ்டீல் மாஸ்டர்ஸ் போட்டியில் கிராண்ட்மாஸ்டர் R. பிரக்ஞானந்தா உலக சாம்பியனான D. குகேஷைத் தோற்கடித்து பட்டத்தினை வென்றார்.
- அவாடா குழுமம் ஆனது, ஒடிசாவின் கோபால்பூரில் ஒரு நாளைக்கு 1,500 டன் உற்பத்தி திறன் கொண்ட இந்தியாவின் மிகப்பெரியப் பசுமை நுட்பம் சார்ந்த அம்மோனியா உற்பத்தி ஆலையினை உருவாக்க உள்ளது.
- கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனமானது ஆளில்லா விமானங்கள் தொழில்நுட்பத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில், ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் இந்தியாவின் முதல் 'ஆளில்லா விமான நகரினை' நிறுவுவதற்காக சுமார் 100 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.
- ஒரு புதிய தலைமுறை நுட்பத்திலான நிதித் துறை சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீட்டு வரம்பினை 74 சதவீதத்திலிருந்து 100% ஆக உயர்த்துவதற்கு 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முன்மொழியப்பட்டது.
- மத்தியப் பிரதேச மாநிலத்தின் ரேவா மாவட்டத்தில் இந்தியாவின் முதல் வெள்ளைப் புலிகளின் ஒரு இனப்பெருக்க மையத்தினை நிறுவுவதற்கு மத்திய உயிரியல் பூங்கா ஆணையம் (CZA) அங்கீகாரம் அளித்துள்ளது.

- ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹாவுக்கு மகாராஜா ஹரி சிங் விருது வழங்கப்பட்டுள்ளது.
- குழந்தைகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தச் செய்தல் / குழந்தைகளின் பாலியல் ரீதியிலான படங்களை உருவாக்கப் பயன்படுத்தப்படும் சில செயற்கை நுண்ணறிவு கருவிகளுக்கு எதிராக கடும் சட்டங்களை அறிமுகப்படுத்தும் முதல் நாடாக ஐக்கியப் பேரரசு மாற உள்ளது.
- ஒரு சமூக ஊடகத் தளமான எக்ஸ் (X) நிறுவனம் விசா என்ற பண வழங்கீட்டு அட்டை நிறுவனத்துடன் இணைந்து X money என்ற எண்ணிம பணக்கோப்பு மற்றும் நிகரிணை / சக கட்டணச் சேவைகளை அறிமுகப் படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- கோடக் மஹிந்திரா சொத்து மேலாண்மை நிறுவனம் ஆனது, MSCI (Morgan Stanley Capital International) இந்தியக் குறியீட்டைக் கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட கோடக் MSCI இந்தியா ETF எனப்படுகின்ற நாட்டின் முதல் பரிமாற்ற-வர்த்தக நிதியினை (ETF) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஐதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள பாதுகாப்புசார் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தொழில்துறை-கல்வித்துறை சார் சிறப்பு மையம் (DIA-CoE) ஆனது முப்பரிமாண அச்சிடல் முறையிலான பெரிய மாதிரிகளின் உற்பத்தி (LAAM) அமைப்பின் பயன்பாட்டுச் செயல்விளக்கத்தினை மேற்கொண்டது.
- குஜராத் மாநிலத்தில் உள்ள ஆனந்த் ஊரக மேலாண்மை கல்வி நிறுவனத்தில் (IRMA) இந்தியாவின் முதல் தேசியக் கூட்டுறவுப் பல்கலைக்கழகமான திரிபுவன் சஹ்காரி பல்கலைக் கழகம் ஆனது நிறுவப்பட உள்ளது.
- இணையவழி மூலம் திரட்டப்படும் தொழிலாளர்கள் (GIG) ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (PMJAY) திட்டத்தின் கீழ் சுகாதார நல வசதிகளைப் பெற தகுதியுடையவர்கள் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 3,000 மில்லியன் டன் (மெட்ரிக் டன்) சரக்குகளை ரயில் மூலம் கொண்டு செல்வதை மத்திய அரசு இலக்காகக் கொண்டுள்ளது.
- ஐதராபாத்தில் உள்ள இந்தியத் தேசியப் பெருங்கடல் தகவல் சேவை மையம் (INCOIS) ஆனது நிறுவனப் பிரிவில் 2025 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க சுபாஷ் சந்திரபோஸ் பேரிடர் மேலாண்மை விருதைப் பெற்றுள்ளது.
- துறையூரில் உள்ள உலகளாவிய இயற்கை அறக்கட்டளையானது, தமிழ்நாடு பருவ நிலை உச்சி மாநாடு 3.0 நிகழ்வில் 'சுற்றுச்சூழல் சுடரொளி' விருதினை (இரண்டாம் பரிசு, அமைப்பு பிரிவு) பெற்றுள்ளது.
- சென்னையைத் தலைமையகமாக கொண்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) ஆனது, கார்பன் கணக்கீட்டு நிதியியல் மீதான கூட்டாண்மையில் (PCAF) கையொப்பதாரராக மாறியுள்ளது.
- இந்தூருக்கு அடுத்தபடியாக, போபால் மாவட்ட நிர்வாகம் ஆனது மத்தியப் பிரதேச தலைநகரில் பிச்சை எடுத்தல், பிச்சை இடுதல் மற்றும் பிச்சைத் தொழில் செய்யும் நபர்களிடமிருந்து எந்தப் பொருட்களையும் வாங்குவதற்குத் தடை விதித்துள்ளது.
- உள்நாட்டில் விற்கப் படும் மொத்த கைபேசிகளில் 99.2% உற்பத்தி செய்யும் உலகின் இரண்டாவது பெரிய கைபேசி உற்பத்தியாளராக இந்தியா மாறியுள்ளது.
- தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் தெற்கு அரைக்கோளத்தின் மிகப் பெரிய இந்து கோயில் மற்றும் கலாச்சார வளாகம் திறக்கப்பட்டுள்ளது.

- மறைந்த சாமன் அரோரா, டோக்ரி மொழியில் எழுதப்பட்ட 'இக் ஹோர் அஸ்வதாமா' என்ற அவரது புத்தகத்திற்காக 2024 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- துபாய் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முதலாவது உலகளாவிய நீதி, அன்பு மற்றும் அமைதி உச்சி மாநாட்டினை நடத்த உள்ளது.
- ஜவுளி அமைச்சகம் ஆனது, 'தொழில்நுட்பம் சார்ந்த ஜவுளித் துறையில் ஈடுபாடு மிக்க கண்டுபிடிப்பாளர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவோருக்கான மானியம் (GREAT)' திட்டத்தின் கீழ் தோராயமாக 50 லட்சம் ரூபாய் மானியத்துடன் 04 புத்தொழில் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மகாராஷ்டிரா மாநிலமானது கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை மேம்படுத்தச் செய்வதற்காக இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவுப் பல்கலைக்கழகத்தினை நிறுவ உள்ளது.
- புது டெல்லி ஆனது சமீபத்தில் 15வது சர்வதேச உலக மருந்தியல் மீதான விதிமுறை தொகுப்புகள் கூட்டத்தினை நடத்தியது.
  - மருந்தியல் விதிமுறைத் தொகுப்புகள் என்பது ஒரு நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கான தரநிலைகள் மற்றும் தர விவரக்குறிப்புகளின் சட்டப்பூர்வத் தொகுப்பாகும்.
- அகில இந்திய வானொலியில் (AIR) இந்தியா சுதந்திரம் பெற்றதனைத் தமிழர்களுக்கு அறிவித்த, 102 வயதான செய்தி வாசிப்பாளர் R.S.வெங்கட்ராமன் காலமானார்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்டான் SIPCOT தொழில்துறைப் பூங்காவில் TP சோலார் லிமிடெட் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் ஒரே தொகுதியில் அமைந்த 4.3 GW சூரிய மின்கலம் மற்றும் உற்பத்தி ஆலையினை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- குஜராத் மாநில அரசானது, மதிப்பீட்டினை மேற்கொண்டு மாநிலத்திற்கான பொது உரிமையியல் சட்ட (UCC) வரைவினை உருவாக்குவதற்காக ஓர் உயர் மட்டக் குழுவை அமைப்பதாக அறிவித்துள்ளது.
- இந்திய நாடானது, தொற்று மற்றும் தொற்றாத நோய்களை ஆராய்ச்சி செய்வதற்காக ஃபரிதாபாத்தில் (அரியானா) உள்ள மருத்துவத் தகவல் பரிமாற்றம் சார்ந்த சுகாதார அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் (THSTI) மர நாய்களை ஒரு விலங்கு சோதனை மாதிரியாகப் பயன்படுத்தும் தனது முதல் ஆராய்ச்சி மையத்தினைத் தொடங்கியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பு மற்றும் பிற பங்குதாரர் நாடுகள் உகாண்டாவில் எபோலா பாதிப்பிற்கு எதிரான தடுப்பூசிக்கான முதல் மருத்துவச் செயல்திறன் சோதனையைத் தொடங்கியுள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் வழக்கமான நிதிநிலை மீதான ஒதுக்கீட்டிற்கு இந்தியா 37.64 மில்லியன் அமெரிக்க டாலர்களை செலுத்தியுள்ளதுடன், ஐக்கிய நாடுகள் சபைக்கு தங்கள் வழக்கமான நிதி ஒதுக்கீடுகளை முழுமையாகவும் சரியான நேரத்திலும் செலுத்திய 35 உறுப்பினர் நாடுகளின் "மதிப்புமிக்க பட்டியலில்" இந்தியா இணைகிறது.
- அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, அர்ஜென்டினாவும் உலக சுகாதார அமைப்பில் இருந்து (WHO) விலகுவதாக அறிவித்துள்ளது.

- சீனாவின் டியாங்காங் விண்வெளி நிலையத்தில் உள்ள விண்வெளி வீரர்கள் செயற்கை ஒளிச்சேர்க்கையைப் பயன்படுத்தி, ஆக்ஸிஜன் மற்றும் விண்வெளி ஏவுகல எரிபொருளை வெற்றிகரமாக உற்பத்தி செய்துள்ளனர்.
- மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதற்காக ஒன்றிணைவதன் பெரு மதிப்பையும், பல்வேறு வகைகளிலான ஒற்றுமையின் பெரு முக்கியத்துவத்தையும் கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் பிப்ரவரி 04 ஆம் தேதியன்று சர்வதேச மனித சகோதரத்துவ தினம் அனுசரிக்கப்படுகிறது.
- திருநெல்வேலி மாவட்டத்திண் நாங்குநேரியிலும் மூலக்கரைப்பட்டியிலும் என மேலும் இரண்டு தொழிற்பேட்டைகள் நிறுவப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- கடல் ஆமைகளைப் பாதுகாக்க உதவும் வகையில் மீன்பிடிப் படகுகளில் 50 ஆமைகள் தப்பிக்க உதவும் சாதனங்கள் (TED) பொருத்தும் சோதனையைத் தொடங்குவதற்கு தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை திட்டமிட்டுள்ளது.
- தமிழ்நாடு துணை முதல்வர், திருச்சி பறவைப் பூங்கா மற்றும் காவேரி நதிக்கரையில் அமைந்துள்ள கம்பரசம்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பறவைக் கூடத்தை/ பண்ணையினைத் திறந்து வைக்க உள்ளார்.
- 108 மருத்துவ அவசர ஊர்திகளின் பெரும் வலையமைப்பானது, மருத்துவ அவசர நிலைகளுக்காக வேண்டி மருத்துவ அவசர ஊர்தி சேவைகளை தேடுபவர்கள் தங்கள் கைபேசிகளில் அந்த வகை வாகனங்களைக் கண்டறிய உதவும் வகையில் சோதனை ஓட்டத்திற்குப் பிறகு 'அவசரம் 108 தமிழ்நாடு' என்ற செயலியினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- அரிய, அருகி வரும் மற்றும் அச்சுறுத்தல் நிலையில் உள்ள தாவர இனங்களை மிகை குளிரூட்டல் பதங்காப்பு மூலம் வளங்காப்பதற்காக வேண்டி, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு மாநில வேளாண் பல்கலைக்கழகத்தில் (TNAU) குளிர்முறைப் பதனூட்டல் வசதிகளுடன் கூடிய உள்நாட்டு தாவர இனங்களின் விதை சேகரிப்பு பெட்டகத்தினை நிறுவுவதற்கு தமிழ்நாடு ஒப்புதல் அளித்துள்ளது.
- அரசியலமைப்பின் 75 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில், சங்கரா கண் மருத்துவமனை நிறுவனமானது, பெங்களூருவில் உள்ள CII யங் இந்தியன்ஸ் (Yi) என்ற நிறுவனத்துடன் இணைந்து, பார்வைத் திறன் அற்றவர்களுக்கான பிரெய்லி எழுத்து முறையில் உருவாக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பின் பதிப்பை வெளியிட்டுள்ளது.
- GMR ஏர்போர்ட்ஸ் லிமிடெட் (GAL) நிறுவனமானது, பெருநிறுவன நிலைத்தன்மைக்கான அதன் உறுதிப்பாட்டை மிக நன்கு வலுப்படுத்தும் விதமாக ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய ஒப்பந்தத்தில் இணைந்துள்ளது.
- சோலன் மாவட்டத்தில் உள்ள தபோட்டாவில் அமைக்கப்பட உள்ள வட இந்தியாவின் முதல் 1 மெகாவாட் திறன் கொண்ட பசுமை ஹைட்ரஜன் ஆலைக்கு இமாச்சலப் பிரதேச முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- இந்தியாவின் விரைவு வர்த்தகப் புத்தொழில் நிறுவனமான செப்டோ, சென்சார் டவர் நிறுவனத்தின் ஆய்வின் படி, KFC மற்றும் டோமினோஸ் ஆகிய நிறுவனங்களை விஞ்சி உலகிலேயே அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட இரண்டாவது உணவு மற்றும் பான விற்பனைச் செயலியாக மாறியுள்ளது.
- உலகின் மிகப்பெரிய கைவினைப் பொருட்கள் கண்காட்சிகளில் ஒன்றான 38வது சூரஜ்குண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் மேளாவானது, ஹரியானா மாநிலம் ஃபரிதாபாத்தில் உள்ள சூரஜ்குண்ட் எனுமிடத்தில் நடைபெற்று வருகிறது.

- அமெரிக்காவைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இருந்து (UNHRC) விலகுவதாக இஸ்ரேல் அரசும் அறிவித்துள்ளது.
- ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணியானது தொடர்ந்து மூன்றாவது முறையாக 2025 ஆம் ஆண்டு ICC மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.
- வருண் சக்ரவர்த்தி, ஃபரோக் இன்ஜினியருக்கு (36 வயது, 138 நாட்கள்) அடுத்தபடியாக, ஒருநாள் போட்டிகளில் அறிமுகமான இந்தியாவின் இரண்டாவது வயதான கிரிக்கெட் வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- மணிப்பூர் மாநிலத்தில் இன வன்முறை வெடித்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அம்மாநிலத்தின் முதல்வர் N. பிரேன் சிங் இராஜினாமா செய்துள்ளார்.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஐந்து நாட்கள் அளவிலான 16வது ஏரோ இந்தியா 2025 கண்காட்சியானது பெங்களூருவில் உள்ள ஏலஹங்கா இந்திய விமானப்படை நிலையத்தில் நடைபெற்று வருகிறது.
- மனுஷ் ஷா மற்றும் தியா சிட்டாலே ஆகியோர் முறையே 2025 ஆம் ஆண்டு தேசிய சீனியர் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவில் பட்டங்களை வென்றனர்.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், மெக்சிகோ வளைகுடாவினை "அமெரிக்க வளைகுடா" என்று அதிகாரப்பூர்வமாக மறுபெயரிட்டுள்ளதோடு, பிப்ரவரி 09 ஆம் தேதியினை "அமெரிக்க வளைகுடா தினம்" என்றும் அறிவித்துள்ளார்.
- OpenAI நிறுவனத்தின் ChatGPT Gov என்பது அமெரிக்க அரசு நிறுவனங்களுக்கு OpenAI நிறுவனத்தின் மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை அணுகுவதற்கான சில கூடுதல் வாய்ப்புகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ChatGPT வசதியின் புதிய வடிவமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்திய-திபெத்திய எல்லைக் காவல்படை (ITBP) ஆனது, சத்தீஸ்கரின் அபுஜ்மத் என்ற பகுதியில் அமைந்துள்ள குதுல் எனுமிடத்தில் அதன் புதிய முதன்மைச் செயல்பாட்டுத் தளத்தினை (COB) நிறுவியுள்ளது.
- சர்வதேசப் பௌத்த/புத்தக் கூட்டமைப்பு (IBC) ஆனது இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கையின் ஆயுதப் படைகளை ஒன்றிணைக்கும் வகையிலான ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க முன்னெடுப்பான மூன்று நாடுகளின் முப்படை பயணத்தைத் தொடங்க உள்ளது.
- பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடாவின் முன்னெடுப்பு அமைப்பின் (BIMSTEC) முதல் இளையோர் உச்சி மாநாடு 2025 ஆனது குஜராத்தின் காந்திநகரில் "Youth as a Bridge for Intra-BIMSTEC Exchange" என்ற கருத்துருவில் நடைபெற்றது.
- INS சுஜாதா, INS ஷார்துல் மற்றும் ICGS வீரா ஆகியவற்றைக் கொண்ட இந்தியக் கடற் படையின் முதல் பயிற்சிப் படை (1TS) ஆனது, ஒரு தொடர் கூட்டுப் பயிற்சி மீதான நடவடிக்கைகளுக்காக சிங்கப்பூரின் சாங்கி கடற்படைத் தளத்திற்குச் சென்றுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாட்டில் வங்கி வாடிக்கையாளர்கள் பயன்படுத்தும் களங்களில் நம்பிக்கையை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள .bank.in என்ற புதியதொரு வலைதளத்தினை அறிமுகப்படுத்த உள்ளது.
- பிரான்சு நாட்டின் டென்னிஸ் வீரர் கைரியன் ஜாக்கெட் 2025 ஆம் ஆண்டு சென்னை ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் பட்டத்தை வென்று தனது முதல் ATP பட்டத்தைக் கைப்பற்றினார்.

- HAL நிறுவனத்தின் ஒரு முதன்மைப் பயிற்சி விமானமான ஹிந்துஸ்தான் ஜெட் பயிற்சி விமானம் HJT-36 ஆனது, சில மிகப்பெரிய மாறுதல்களுக்குப் பிறகு 'யாஷாஸ்' என மறு பெயரிடப் பட்டுள்ளது.
- நாடு முழுவதும் நிலவும் அமைதியின்மையைக் கட்டுப்படுத்துவதற்காகவும், பொது மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவும் வங்காள தேசத்தின் இடைக்கால அரசாங்கம் ஆனது 'டெவில் ஹண்ட்' என்ற ஒரு சிறப்பு நடவடிக்கையினைத் தொடங்கி உள்ளது.
- 39வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை (2027) நடத்துவதற்கு மேகாலயா மாநிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- தெற்கு இரயில்வே நிர்வாகத்தின் சென்னைக் கோட்டத்திற்கான குளிர் சாதன வசதிகள் கொண்ட இரயில் பெட்டிகளை ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற் சாலை (ICF) அறிமுகப்படுத்தியுள்ளது.
- "ஸ்ரஜனம்" என்று பெயரிடப்பட்ட இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட தானியங்கி உயிரி மருத்துவக் கழிவுச் சுத்திகரிப்பு நிலையம் ஆனது புது டெல்லியில் உள்ள AIIMS மருத்துவமனையில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவுடனான ஒத்துழைப்பைப் பெருக்குவதற்காக ஐக்கியப் பேரரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்குள் "Defence Partnership–India" அல்லது DP-I எனப்படும் ஒரு பிரத்தியேக பிரிவானது அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்துவதாக ஐக்கியப் பேரரசு அறிவித்து உள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் இஸ்ரோ ஆகியவை இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விண்வெளிப் பயன்பாடுத் தரத்திலான SHAKTI அமைப்பு அடிப்படையிலான குறைகடத்தி சில்லினை உருவாக்கி உள்ளன.
- இந்தியாவைச் சேர்ந்த பங்கஜ் அத்வானி, மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் யஷ்வந்த் கிளப் போட்டிகளில் 36வது தேசியப் பட்டத்தையும் 10வது ஆடவர் ஸ்னூக்கர் பட்டத்தினையும் வென்றுள்ளார்.
- துபாயில் சமீபத்தில் நடைபெற்ற உலக அரசு உச்சி மாநாட்டின் (WGS) போது, 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சிறந்த M-Gov விருது விழாவில் புது டெல்லியைச் சேர்ந்த மூன்று இந்தியக் கணினி அறிவியல் மாணவர்கள் அதன் வெண்கலப் பதக்கத்தினை வென்றனர்.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் (MoHUA) ஆனது, உணவு, பாரம்பரியக் கலைகள் மற்றும் புகைப்படக் கலை மூலம் இந்தியாவின் கலாச்சாரச் செழுமையை எடுத்துக்காட்டும் வகையில், 'Culinary, Crafts & Clicks – Moods & Magic - சமையல், கைவினைப் பொருட்கள் மற்றும் புகைப்படத் துணுக்குகள் – மன நிலைகள் & மாயம்' என்ற தலைப்பிலான விழாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மக்களவையில் தற்போது உள்ள 10 மொழிகளுக்கான மொழிபெயர்ப்புச் சேவைகளை போடோ, டோக்ரி, மைதிலி, மணிப்பூரி, சமஸ்கிருதம் மற்றும் உருது ஆகிய ஆறு புதிய மொழிகளுக்கும் விரிவுபடுத்த உள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.
- எதிர்கால அரசாங்கங்களை வடிவமைத்தல் என்ற தலைப்பிலான 2025 ஆம் ஆண்டு உலக அரசாங்க உச்சி மாநாடு (WGS) ஆனது துபாயில் நடைபெற்றது.
- உலகப் போர்களின் போது வெளிநாட்டு நிலங்களைப் பாதுகாக்கும் பணியில் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த இந்திய வீரர்களின் நினைவாக பிரான்சின் மார்சேயில் உள்ள மசார்கியூஸ் போர் கல்லறைக்கு இந்தியப் பிரதமர் விஜயம் செய்தார்.

- இராஜஸ்தானிலுள்ள 132 ஆண்டுகள் பழமையான ஃபோய் சாகர் ஏரி தற்போது வருண் சாகர் என்றும், 113 ஆண்டுகள் பழமையான மன்னர் எட்வர்ட் நினைவு பவன் ஆனது தற்போது மகரிஷி தயானந்த் விஷ்ராந்த் கிரி என்றும் மறுபெயரிடப் பட்டுள்ளன.
- துளசி கப்பார்ட் அமெரிக்க தேசியப் புலனாய்வு இயக்குநராக பதவியேற்றதையடுத்து, அமெரிக்க உளவுத்துறைக்கு தலைமை தாங்கிய முதல் இந்து என்ற பெருமையினைப் பெற்றுள்ளார், ஆனால் இவருக்கு இந்தியாவுடன் எந்த தொடர்பும் இல்லை.
- கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள மருங்கூரில் வளையல்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட ஒரு சங்கு ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- கோவில் அறங்காவலர்களை நியமிப்பதற்காக சாதியினை ஒரு பெரும் மதிப்புருவாக கருதாமல் மாறாக மத நம்பிக்கை, கடவுள் மீதான ஆழ்ந்த பக்தி மற்றும் நல்லொழுக்க நடத்தை ஆகியவற்றை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- சர்வதேச நிர்வாக அறிவியல் நிறுவனம் (IIAS) மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறைகள் துறை (DARPG) ஆகியவை இணைந்து 2025 ஆம் ஆண்டு IIAS-DARPG இந்தியா மாநாட்டினை வெற்றிகரமாக நாடத்தியுள்ளன.
- 2025 ஆம் ஆண்டின் யுனானி தினத்தின் ஒரு பகுதியாக "ஒருங்கிணைந்தச் சுகாதாரத் தீர்வுகளுக்காக என்று யுனானி மருத்துவத்தில் புதுமைகள் – எதிர்கால வழிகள்" என்ற சர்வதேச மாநாடு ஆனது புது டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- எண்ணெய் சந்தைப்படுத்துதல் நிறுவனங்கள் ஆனது, பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்காக என 286 விண்ணப்பங்களில் இருந்து சுமார் 26 முதன்மை வேளாண் கடன் சங்கங்களை (PACS) தேர்ந்தெடுத்துள்ளன.
- இந்திய ரிசர்வ் வங்கி, அதன் ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ராவின் கையொப்பத்துடன் கூடிய புதிய 50 ரூபாய் நோட்டுகளை வெளியிட உள்ளது.
- ஆசியாவின் முதல் மிகவும் தத்ரூபமான இயற்கை வடிவிலான மின்னணுத் தொலைக் கட்டுப்பாட்டு வடிவிலான எல்லி எனும் யானையானது, பெங்களூருவின் செயிண்ட் ஜோசப் பள்ளியில் அறிமுகப்படுத்தப் பட்ட நிலையில் இது விலங்குகள் நலன் குறித்த செய்தியை வழங்குவதோடு மாணவர்களையும் வெகுவாக கவர்ந்தது.
- பாரிசு நகரில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு மீதான செயல் உச்சி மாநாட்டில் நடைபெற்ற முக்கிய விவாதங்களைத் தொடர்ந்து, அடுத்த உலகளாவியச் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டினை இந்தியா நடத்தும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்து உள்ளார்.
- ஹிந்துஜா குழுமத்தின் தலைவர் கோபிசந்த் P. ஹிந்துஜா தொகுத்த "I Am?" என்ற புத்தகத்தினை இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வெளியிட்டார்.
- இந்தியாவானது, சிங்கப்பூர் மற்றும் ஓமன் போன்ற அதன் இந்தியப் பெருங்கடல் பங்கு தாரர் நாடுகளுடன் இணைந்து ஓமன் நாட்டின் தலைநகரான மஸ்கட்டில் எட்டாவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டினை (IOC) நடத்துகின்றது.
- அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், யுனெஸ்கோ அமைப்பானது, "Imagine a world with more women in science" என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- மத்தியப் பிரதேச அரசானது, பன்னாட்டு நிறுவனங்களை ஈர்ப்பதற்கும் மத்தியப் பிரதேசத்தினை எண்ணிம மற்றும் தொழில்நுட்ப மையமாக நிறுவுவதற்குமான ஒரு உலகளாவிய திறன் மையக் கொள்கை 2025 என்ற கொள்கையினை வெளியிட்டுள்ளது.

- மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (CCPA) ஆனது, கைபேசிகளின் இயங்கு தள (OS) அடிப்படையில் நுகர்வோரிடமிருந்து வெவ்வேறு கட்டணங்களை வசூலித்ததாகக் கூறப்படும் நிலையில் அது ஓலா மற்றும் ஊபர் நிறுவனங்களுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது.
- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது, செயலற்ற அல்லது உரிமை கோரப்படாத பரஸ்பர நிதியக் குறியீடுகளைக் கண்காணிப்பதற்கும், அவற்றை மீட்டு எடுப்பதற்கும் என முதலீட்டாளர்களுக்கு உதவுவதற்காக வேண்டி MITRA எனும் புதிய எண்ணிமத் தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மீன் வளத் துறை அமைச்சகமானது PMMKSSY (Pradhan Mantri Matsya Kisan Samridhi Sah-Yojana) என்ற ஒரு திட்டத்தின் கீழ் ஏராளமான பலன்களைப் பெறத் தகுதியுள்ள பங்கு தாரர்களை ஊக்குவிப்பதற்காக என்று, தேசிய மீன்வள எண்ணிமத் தளத்தில் (NFDP) பதிவு செய்வதற்கான தேசிய அளவிலான சிறப்புப் பிரச்சாரத்தினை ஏற்பாடு செய்து வருகிறது.
- ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர் நலத் துறையானது, 16 துறைகள்/அமைச்சகங்களில் 120 நாட்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள நீண்டகால ஓய்வூதிய வழக்குகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துவதற்காக 12வது நாடு தழுவிய ஓய்வூதிய மன்றத்தினை நடத்தியது.
- தேசிய அனல் மின் கழக நிறுவனமானது (NTPC), இடர்களை எதிர்கொள்வதற்கான நீர் வளத்தின் நெகிழ்திறன் பிரிவில் மிக மதிப்புமிக்க 2025 ஆம் ஆண்டிற்கான நிலைத் தன்மையை நோக்கிய விரைவான முன்னேற்றத்திற்கான விருதைப் பெற்றுள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், பெங்களூருவில் The Art of Living அறக்கட்டளை மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேசப் பெண்கள் மாநாட்டின் தொடக்க அமர்வில் கலந்து கொண்டார்.
- பாரத் டெக்ஸ் 2025 எனப்படுகின்ற இரண்டாவது ஜவுளி வர்த்தகக் கண்காட்சி மற்றும் அறிவுப் பகிர்வு நிகழ்வுகள் ஆனது புது டெல்லி மற்றும் கிரேட்டர் நொய்டா ஆகிய பகுதிகளில் நடைபெற்றன.
- ஜவுளி அமைச்சகத்தின் கைத்தறி மேம்பாட்டு ஆணைய அலுவலகம் ஆனது, 2025 ஆம் ஆண்டு பாரத் டெக்ஸ் நிகழ்ச்சியில் "Breathing Threads" என்ற தலைப்பிலான ஒரு ஆடை வடிவமைப்பு நிகழ்வினை ஏற்பாடு செய்தது.
- பழங்குடியின விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழ் உள்ள பழங்குடியினக் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பின் (TRIFED) முதன்மை முயற்சியான ஆதி மஹோத்சவ்-2025 ஆனது புது டெல்லியில் நடைபெற்று வருகிறது.
- உகாண்டாவைச் சேர்ந்த ஜேக்கப் கிப்லிமோ பார்சிலோனாவில் நடைபெற்ற 21.0975 கி.மீ. ஓட்டப் பந்தயத்தினை 56 நிமிடங்கள் 42 வினாடிகளில் நிறைவு செய்து உலக அரை மராத்தான் போட்டியின் சாதனையை முறியடித்துள்ளார்.
- உலகளாவிய பொது வாக்கெடுப்புக்குப் பிறகு, ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் வீராங்கனை மனு பாக்கர் 2024 ஆம் ஆண்டிற்கான BBC பத்திரிகை சிறந்த இந்திய விளையாட்டுப் பெண்மணியாக அறிவிக்கப்பட்டார்.
- இந்திய தேசிய இணையப் பரிமாற்ற ஆணையம் (NIXI) ஆனது இந்தியக் குடிமக்கள் இடையே இணைய வழி ஆளுகையில் (IG) விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும், நிபுணத்துவத்தை வளர்ப்பதற்கும் அதன் இணைய ஆளுகைப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- தமிழக முதல்வர், திருச்சி மற்றும் மதுரையில் மொத்தம் 717 கோடி ரூபாய் செலவில் TIDEL தொழில்துறைப் பூங்காக்களை நிறுவுவதற்கான அடிக்கல்லை நாட்டினார்.
- ஐக்கியப் பேரரசு அரசானது, ஐக்கியப் பேரரசு - இந்தியா இடையிலான முக்கிய வணிக உறவுகளுக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்காக வேண்டி டாடா குழுமத் தலைவர் N.சந்திரசேகரனுக்கு கௌரவ வீரத்திருத்தகை (நைட்ஹூட்) விருதை வழங்கியுள்ளது.
- இந்தியாவின் நான்காவது தலைமுறை நுட்பத்திலான ஆழ்கடல் நீர்மூழ்கிக் கப்பல் ஆன 'மத்ஸ்யா-6000' ஆனது, மனிதப் பாதுகாப்பு, அமைப்பின் நம்பகத்தன்மை மற்றும் அறிவியல் சாதனங்களின் தாங்கு திறன் சோதனை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஈரப்பத சோதனையை வெற்றிகரமாக நிறவு செய்துள்ளது.
- கேரள மாநில அரசானது, கடலடி சூழல் சார்ந்த அவசரநிலைகளுக்கு நடவடிக்கையை மேற்கொள்வதற்காகத் தயாராக உள்ள அதிகப் பயிற்சி பெற்ற 17 அதிகாரிகளைக் கொண்ட "கனெட்ஸ்" எனப்படும் இந்தியாவின் முதல் அனைத்து மகளிர் ஸ்கூபா டைவிங் தீயணைப்பு குழுவினைத் தொடங்கி வரலாறு படைத்துள்ளது.
- இந்தோனேசிய நாட்டு அணியானது, சீன மக்கள் குடியரசை வீழ்த்தி, 2025 ஆம் ஆண்டு பேட்மிண்டன் ஆசியக் கலப்பு அணி சாம்பியன்ஷிப் போட்டியில் முதன்முறையாக வென்றுள்ளது.
- உலகின் அதிகளவில் செயல்பாட்டில் உள்ள எரிமலைகளில் ஒன்றான இத்தாலியில் உள்ள மவுண்ட் எட்னா சமீபத்தில் வெடித்தது
- ‘தமிழ் தாத்தா’ என்று பிரபலமாக அழைக்கப் படும் உ. வே. சுவாமிநாதரின் பிறந்த நாள் (பிப்ரவரி 19) ஆனது தமிழ்நாட்டில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி தினமாக வெகுவாகக் கொண்டாடப் பட்டது.
- பிலிப்பைன்ஸ் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள பிரபல தமிழ் கவிஞரும் ஒரு தத்துவ ஞானியுமான திருவள்ளுவரின் சிலையை இந்தியத் தூதர் திறந்து வைத்துள்ளார்.
- T20 உலகக் கோப்பை போட்டியில் வென்ற இந்தியாவின் 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணியின் உறுப்பினரான சென்னையைச் சேர்ந்த G. கமலினி, மகளிர் பிரீமியர் லீக் (WPL) போட்டியில் அறிமுகமான மிகவும் இளம் வீராங்கனை என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான 23வது தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 30 அணிகளில் சுமார் 1,476 மாற்றுத் திறனாளி தடகள வீரர்கள் 155 போட்டிகளில் போட்டி இடுவதன் மூலம் 2025 சென்னை பதிப்பு ஒரு புதிய சாதனையினை படைத்துள்ளது.
- இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) 150 ஆண்டுகால சாதனைப் பயணத்தைக் கொண்டாடும் மிகவும் ஒரு தனித்துவமான திறந்தவெளி ஓவிய அருங்காட்சியகமான இந்தியாவின் முதல் “திறந்தவெளி சுவரோவிய அருங்காட்சியகம்” ஆனது டெல்லியில் உள்ள “மௌசம் பவனில்” திறக்கப்பட்டுள்ளது.
- இந்திய மறுசுழற்சி மற்றும் சுற்றுச்சூழல் தொழில்துறை மீதான சங்கமானது (REIAI) புது டெல்லியில் “கழிவு மறுசுழற்சி மற்றும் பருவநிலை மாற்றம் 2025” குறித்த ஒரு தேசிய மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- வேளாண் மற்றும் நன்கு பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது, ஜெர்மனியில் நடைபெற்ற BIOFACH 2025 நிகழ்வில் இந்தியா முழுவதும் உள்ள முன்னணி இயற்கை வேளாண் பொருட்கள் ஏற்றுமதி நிறுவனங்கள் உடனான இந்தியாவின் இயற்கை முறை மரபைக் காட்சிப்படுத்தியது.

- இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள அஜ்மீர் நகரின் திருநர் சமூகத்தைச் சேர்ந்த காடிபதி சலோனி நாயக்கின் முக்கிய ஒரு வழிகாட்டியான அனிதா பாயின் நினைவாக அஜ்மீர் நகரானது முதலாவது அகில இந்தியத் திருநர்கள் மாநாட்டை நடத்தியதில் 2,000 பேர் கலந்து கொண்டனர்.
- முன்னணிக் கடன் மேலாண்மை தளமான CheQ ஆனது, செயற்கை நுண்ணறிவினால் இயங்கும் CheQ Wisor எனப்படும் நாட்டின் முதல் கடன் அட்டை நிபுணரை அறிமுகப் படுத்தி யுள்ளது.
- மத்தியப் பட்டு வாரியம் ஆனது, பட்டுத் துறையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த SILKTECH-2025 எனப்படும் ஒரு சர்வதேச மாநாட்டினைப் புது டெல்லியில் நடத்தி வருகிறது.
- இந்தியக் கடற்படையானது, LSAM 11 எனப்படுகின்ற படைத் தடவாளத்துடன் கூடிய ஒரு எறிகணையைக் கொண்ட தனது எட்டாவது இழுவைப் படகினை மகாராஷ்டிராவில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- பிரதமர், சமூகத்தில் அரசாங்கத்தின் தலையீட்டைக் குறைப்பதற்காக "கட்டுப்பாட்டு குறைப்பு ஆணையம்" அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.
- வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது, இந்தியாவில் மிக முதல் முறையாக, முறையே உயர் தர சங்கோலா மற்றும் பக்வா ரக மாதுளைகளின் வணிக ரீதியான சில சோதனைத் தொகுப்புகளை கடல் வழியாக ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பியுள்ளது.
- டெல்லியில் உள்ள இந்துக் கல்லூரி சமீபத்தில் தனது 126வது ஸ்தாபனத் தினத்தைக் கொண்டாடியது.
- முதலாவது ஒலிம்பிக் மின்னணு விளையாட்டுப் போட்டிகள் ஆனது, 2027 ஆம் ஆண்டில் சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற உள்ளது.
- சுற்றுச்சூழல் ரீதியாக நீடித்த நிலைத்தன்மை கொண்ட செயற்கை நுண்ணறிவுக்கான கூட்டணியின் கீழ் 37 தொழில்நுட்ப நிறுவனங்கள், 11 நாடுகள் மற்றும் 5 சர்வதேச அமைப்புகள் உட்பட 100க்கும் மேற்பட்ட பங்குதாரர்கள் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்துள்ளனர்.
- பிரதமர் புது டெல்லியில் முதலாவது SOUL தலைமைத்துவ மாநாட்டினை தொடங்கி வைத்தார்.
- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது, 1938 ஆம் ஆண்டு காப்பீட்டுச் சட்டத்தின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து திருத்தங்களை பரிந்துரைப்பதற்காக தினேஷ் காரா தலைமையிலான ஓர் உயர் அதிகாரக் குழுவை அமைத்துள்ளது.
- கத்தார் நாட்டின் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு இரண்டாவது முறையாக இந்தியாவிற்கு 2 நாட்கள் பயணத்தினை மேற்கொண்டார்.
- மத்திய அரசானது, வங்காளதேசம் மற்றும் பூடான் ஆகிய இரண்டு நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்க உள்ள அசாம் மாநிலத்தின் ஜோகிகோபாவில் அமைக்கப் பட்டுள்ள ஒரு உள்நாட்டு நீர்வழி முனையத்தினை (IWT) திறந்து வைத்துள்ளது.
- இந்தியத் தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) ஆனது, இந்தியாவின் விண்வெளிசார் புத்தொழில் நிறுவனங்களின் ஒரு பெரும் வளர்ச்சியை

ஆதரிப்பதற்காக 500 கோடி ரூபாய் மூலதன நிதியுடன் ஒரு புதிய நிதியைத் தொடங்கி உள்ளது.

❖ மத்திய அரசாங்கமானது, தலைமைப் பொருளாதார ஆலோசகரான (CEA) V.அனந்த நாகேஸ்வரனின் பதவிக் காலத்தினை 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

❖ முதல்வர் ரேகா குப்தா தலைமையிலான டெல்லி அமைச்சரவையானது, புதிய சட்ட மன்றத்தின் முதல் அமர்வில் மத்திய அரசாங்கத்தின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினை அமல்படுத்துவதற்கும் 14 CAG அறிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கும் என்று ஒப்புதல் அளித்துள்ளது.

❖ ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனமானது, போர் விமானங்கள் ஒருங்கிணைப்பு அமைப்பு (CATS) - Warrior என்ற முழு அளவிலான சோதனை இயந்திர தரை வழி ஓட்டச் சோதனையினை நடத்துவதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லை எட்டியுள்ளது.

❖ கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மீத்தேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடை மெத்தனோட்ரோபிக் (சாணவளியுண்ணி) பாக்டீரியாவைப் பயன்படுத்தி தூய்மையான உயிரி எரிபொருளாக மாற்றுவதற்கான மேம்பட்ட உயிரியல் முறையை உருவாக்கியுள்ளனர்.

❖ கூகிள் நிறுவனத்தின் டீப் மைண்ட் ஆய்வக நிறுவனமானது, தற்போதுள்ள மிகவும் பெரும்பாலான கருவிகளை விடவும், அதிக நாட்களுக்கு முன்னதாகவும் வானிலையை முன்னறிவிக்கக்கூடிய GenCast எனப்படும் செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரியினை வெளியிட்டுள்ளது.

❖ ரூர்க்கி இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், டை எத்தில் ஹெக்ஸைல் தாலேட் (DEHP) நெகிழியாக்கியினை சிதைப்பதற்காக வேண்டி சல்போபாசிலஸ் அமிலோபிலஸால் எனப்படும் மண் பாக்டீரியாவினால் உற்பத்தி செய்யப்படும் ஈஸ்டெரேஸ் நொதியை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

❖ பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) 2025 ஆம் ஆண்டின் வரைவு விதிமுறைகள் குறித்த இரண்டாவது தேசிய மாநாடு ஆனது, அந்த வரைவை எதிர்க்கின்ற வகையில் தெலுங்கானா, தமிழ்நாடு, கேரளா மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய சில மாநிலங்களின் பங்களிப்புடன் கேரளாவின் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.

❖ மத்திய அரசு ஆனது, புது டெல்லியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான தலைமைத் தகவல் அதிகாரி (CIO) மாநாட்டில் எண்ணிம நிறுவன அடையாளக் கையேட்டை (DBIM) அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ இந்தியக் கடற்படையின் INSV தரிணி என்ற கப்பல், நவிகா சாகர் பரிக்ரமா II எனப் படும் உலகளாவியச் சுற்றுப்பயணத்தின் மூன்றாவது மற்றும் மிகவும் சவாலான ஒரு கட்டத்தை முடித்து கனடாவின் போர்ட் ஸ்டான்லியில் நுழைந்துள்ளது.

❖ தீவிரவாதத்திற்கு நிதி உதவி வழங்கலை எதிர்த்தல் (NMFT) தொடர்பான நான்காவது மாநாடு ஆனது ஜெர்மனியில் நடைபெற்ற நிலையில் இதில் புது டெல்லியில் நிரந்தர NMFT செயலகத்தினை நிறுவ இந்தியா முன்மொழிந்துள்ளது.

❖ 28 வது கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பில், 543 இனங்களுடன் தொடர்ந்து மூன்றாவது முறையாக மேற்கு வங்காளம் முன்னிலை வகிக்கிறது.

❖ தொழில் துறை வல்லுநர்கள் குழுவால் 1924 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிறுவப் பட்ட மங்களூருவில் உள்ள கர்நாடகா வங்கி லிமிடெட் (KBL) நிறுவனமானது, சமீபத்தில் தனது 100 ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.

- புது டெல்லியில் நடைபெற்ற 100வது SKOCH உச்சி மாநாட்டில், நாகாலாந்து மாநில வன மேலாண்மை திட்டத்திற்கு (NFMP) 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க SKOCH விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- அசாம் மாநிலத்தில் பாம்பாக்ஸ் சீபா (சிவப்பு பட்டு பருத்தி மரத்தின்) என்ற மலர்களின் கண்கவர் அழகினை மிக நன்கு கொண்டாடும் விதமாக இரண்டு நாட்கள் அளவிலான 2வது சிமோலு திருவிழா கொண்டாடப்பட்டது.
- ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கல்வி பற்றிய தகவல்களை அறிய உதவும் வகையில், பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கத்திற்காக APPA (Anaithu Palli Parent Teachers Association) என்ற செயலியை தமிழ்நாடு முதல்வர் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- அடுத்த ஆண்டு பிப்ரவரி 19 ஆம் தேதி வரை ஒவ்வொரு நாளும் பல்வேறு இடங்களில் சுமார் 1,000 பேருக்கு உணவு வழங்கும் வகையிலான 'அமுத கரங்கள்' திட்டம் ஆனது கொளத்தூரில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் விளையாட்டுத் துறை வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில், இந்தியாவில் உருவாக்குதல் சவால் தொடர் 1 - Create in India Challenge Season 1 என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக பாரத் டெக் ட்ரையம்ப் திட்டம் (TTP) ஆனது தொடங்கப்பட்டுள்ளது.
- புது டெல்லியில் நடைபெறும் 98வது அகில பாரதிய மராத்திய சாகித்ய சம்மேளனம் என்பதனை (அகில இந்திய மராத்திய இலக்கிய மாநாடு) இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ஒரு இந்திய-அமெரிக்கரான காஷ் படேல் அமெரிக்காவின் புதிய மத்தியப் புலனாய்வு வாரிய (FBI) இயக்குநராக அதிகாரப்பூர்வமாகப் பதவியேற்றார்.
- மாலத்தீவின் மாலே எநனுமிடத்தில் நடைபெற்ற 13வது ஆளுகைக் குழுக் கூட்டத்தில், வங்காள விரிகுடாவில் அரசுகளுக்கிடையேயான அமைப்பின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றுள்ளது.
- குஜராத் நிதியமைச்சர் தேசிய eVidhan செயலி (NeVA) மூலமாக முதன்முறையாக சட்ட மன்றத்தில் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை முழுவதும் ஒரு எண்ணிம முறையில் தாக்கல் செய்துள்ளார்.
- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, எண்ணிம உலகிலும் நேரடி உலகிலும் பரிமாறப் படும் படங்கள் மற்றும் மொழி ஆகிய இரண்டையும் நன்கு புரிந்து கொண்டு, ஒரு செயலியைப் பயன்படுத்துதல் அல்லது ஒரு எந்திரத்தினை நகர்த்துதல் போன்ற சில பணிகளை மேற்கொள்ள மேக்மா எனப்படும் ஓர் அடிப்படை மாதிரியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- சமீபத்தில் இந்தோனேசியாவில் உள்ள அதிகளவில் செயலில் உள்ள எரிமலைகளில் ஒன்றான மவுண்ட் டுகோனோ சமீபத்தில் வெடித்தது.
- இராஜஸ்தான் மாநிலம் பருவநிலை மாற்றத் தகவமைப்புகள், காடுகள், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தும் முதல் "பசுமை சார் நிதிநிலை அறிக்கையினை" தாக்கல் செய்துள்ளது.
- அசாமின் வளங்கப்பாளர் பூர்ணிமா தேவி பர்மன், வனவிலங்கு வளங்காப்பில் அவர் ஆற்றிய சிறப்பானப் பங்களிப்பிற்காக டைம்ஸ் இதழின் 2025 ஆம் ஆண்டின் சிறந்தப் பெண்மணியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- அரசாங்கத்தின் வடிவமைப்பு சார் உள்கட்டமைப்புகளுக்கான ஊக்கத் தொகை (DLI) என்ற திட்டத்தின் கீழ் WiSig நெட்வொர்க் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 3GPP திட்டத்திற்கான ஒரு இணக்கமான இணைய சேவை இணக்க ஒற்றைச் சில் கட்டகம் (SoC) ஆனது குறிப்பிடத்தக்க நிதி வசதி இருந்த போதிலும் பல உற்பத்திச் சவால்களை எதிர் கொள்கிறது.

- டெல்லியின் இந்திரப்பிரஸ்தா தகவல் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, வயது முதிர்வினை ஆரோக்கியமானதாக மாற்றுவதற்கு என ஊக்குவிக்கக் கூடிய கூறுகளை அடையாளம் காண்பதற்காக வேண்டி வடிவமைக்கப் பட்ட AgeXtend என்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தளத்தினை உருவாக்கியுள்ளது.
- சர்வதேச எரிசக்தி முகமை (IEA) ஆனது செயற்கை நுண்ணறிவு மற்றும் எரிசக்தி குறித்த உலகளாவிய மாநாட்டை பாரிசு நகரில் நடத்தியது.
- பஞ்சாப் தேசிய வங்கி (PNB) ஆனது, Clari5 நிறுவனத்தின் தேசிய இணையவெளிக் குற்ற அறிக்கையிடல் தளமான (NCRP) ஒருங்கிணைப்புத் தீர்வு அமைப்பினை செயல்படுத்திய முதல் இந்திய வங்கியாக மாறியுள்ளது.
- நந்திவரத்தில் (செங்கல்பட்டு) உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையம் ஆனது, தமிழ்நாட்டில் குருதி கூழ்மப் பிரிப்பு (டயாலிசிஸ்) செயல் முறை மையத்தினைத் தொடங்கிய முதல் ஆரம்ப சுகாதார மையமாக மாறியுள்ளது.
- கேரள மாநில அரசானது, ரெமிடியோ நிறுவனத்துடன் இணைந்து, நாள்பட்ட கண் நோய்களைப் பரிசோதிப்பதற்கான செயற்கை நுண்ணறிவின் ஒரு உதவியுடன் கூடிய நயனமிர்தம் 2.0 என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவைச் சேர்ந்த 20 வயதான விஸ்வா இராஜகுமார் மெமரி லீக் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற மற்றும் செயற்கைக் கால் பொருத்தப்பட்ட மாற்றுத் திறனாளி வீரரான பிரிட்டன் நாட்டின் ஜான் மெக்ஃபால் என்பவர், சர்வதேச விண்வெளி நிலையத்தின் ஆய்வுக் பணிகளுக்கு அனுப்பப் படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட முதல் மாற்றுத் திறனாளி விண்வெளி வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 2025 ஆம் ஆண்டு சர்வதேச கலைக் கண்காட்சி ஆனது சமீபத்தில் ஐதராபாத் நகரில் நடத்தப்பட்டது.
- செயற்கை நுண்ணறிவு சில்லுத் தயாரிப்பு நிறுவனமான என்விடியா மற்றும் அதன் ஆராய்ச்சி பங்குதாரர் நிறுவனங்கள் ஆகியவை Evo2 எனப்படுகின்ற புதிய செயற்கை நுண்ணறிவு அமைப்பினை உருவாக்கியுள்ளன என்பதோடு இது அனைத்து வகையான உயிரினங்களிலும் உள்ள மரபணுக் குறியீட்டை ஆய்வு செய்து வடிவமைக்கும் திறன் கொண்டது.
- உயிரியல் பூங்காவில் அமைக்கப்பட்ட 'மரபணுப் பதப்படுத்துதல் பூங்கா' என்று அழைக்கப்படும் இந்தியாவின் முதல் 'உயிரி வங்கி' ஆனது மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் உயிரியல் பூங்கா என்று அழைக்கப் படுகின்ற பத்மஜா நாயுடு இமய மலை விலங்கியல் பூங்காவில் செயல்பட்டு வருகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரான சக்திகாந்தா தாஸ் பிரதமரின் முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- டெல்லியின் இந்திரபிரஸ்தா தகவல் தொழிநுட்பக் கல்வி நிறுவனமானது, நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்புத் திறனின் பல்வேறு வடிவங்களை நிகழ்நேரத்தில் நன்கு புரிந்து கொள்வதற்காக செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் AMRSense எனப்படும் தரவு ஒருங்கிணைப்பு மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வுக் கருவிகளை உருவாக்கி உள்ளது.
- கோவாவின் மனோகர் சர்வதேச விமான நிலையம் (GOX) ஆனது, இந்தியத் தேசியப் பாதுகாப்பு சபையின் (NSCI) 2024 ஆம் ஆண்டு பாதுகாப்பு விருது விழாவில் 'சேவைத் துறை' பிரிவின் கீழ் "சர்வஸ்ரேஷ்த சுரக்சா புரஸ்கார் (தங்கக் கோப்பை)" பெற்ற இந்தியாவின் முதல் விமான நிலையமாக மாறியுள்ளது.

- பல்வேறு கோயில் திருவிழாக்களில் ஆதிக்கச் சாதியினருக்கு மட்டும் வழங்கப்படும் தேர்ந்தெடுக்கப் பட்ட தெரிவுநிலை முறையானது (பெயருக்குப் பின் சாதியின் பெயர் சேர்ப்பது) தலித்துகளுக்கு சமூக மதிப்பு மற்றும் சமூகத்தில் அவர்களின் பங்கேற்பை மறுத்து, சமத்துவமின்மையை மிக நன்கு வலுப்படுத்துகிறது என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு கூறியது.
- ரங்கோலி (பூக்கோலங்கள்) கோலங்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியத்தில் நிபுணத்துவம் பெற்ற திருச்சியைச் சேர்ந்த மங்கலம் ஸ்ரீனிவாசனுக்கு, இத்துறையில் அவர் ஆற்றிய சிறந்த சாதனைகளுக்காக ஒன்பதாவது இராணி மா கைடின்லியு விருது வழங்கப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 1,000 முதலமைச்சர் 'முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்பட்டன.
  - இது நுகர்வோருக்கு சுமார் 20% முதல் 90% வரையிலான தள்ளுபடிகளுடன் கூடிய குறைவான விலையில் 25% வரை கூடுதல் தள்ளுபடியுடன் பொதுப்பெயர் கொண்ட மருந்துகளை வழங்குகிறது.
- இந்திய அரசாங்கத்திற்கு கடந்தப் பத்து ஆண்டுகளில் வாகனப் பாதுகாப்பு குறித்தத் தரங்களை மேம்படுத்தவதில் மேற்கொண்ட முயற்சிகளுக்காக, இந்தத் துறையின் மிக உயரிய விருதான 2025 ஆம் ஆண்டு பிரின்ஸ் மைக்கேல் தசாப்த சாலைப் பாதுகாப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டு சுழற்சிக்கான யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய தளப் பட்டியலில் சேர்ப்பதற்காக வேண்டி மராத்திய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட அசாதாரண கோட்டை மற்றும் இராணுவ அமைப்பைக் குறிக்கும் 'மராத்திய இராணுவ நிலப்பரப்புகளை' இந்தியா பரிந்துரைத்துள்ளது.
- ஐக்கியப் பேரரசிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான வணிக உறவுகளை மிக நன்கு மேம்படுத்தியதற்காக என்று பாரதி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் சுனில் பாரதி மிட்டல் கௌரவ வீரத் திருத்தகை (நைட்ஹூட்) பதக்கத்தைப் பெற்றுள்ளார்.
- மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில் (KNP) கூண்டில் வைக்கப்பட்டு பின் பாதுகாக்கப்பட்ட மேலும் ஐந்து சிவிங்கிப் புலிகள் "காட்டிற்குள்" விடப் பட்டன என்ற நிலையில் இதன் மூலம் தற்போது அங்கு காட்டில் விடுவிக்கப்பட்டுள்ள பெரும்பூனை இனங்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.
- சென்னையின் கோபாலபுரத்தில் அமைக்கப் பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமியை தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- புதுமைகளை வளர்ப்பதற்கும், தரவுப் பகுப்பாய்வு திறன்களை மேம்படுத்துவதற்கும், தொழில்நுட்பம் சார்ந்த நிர்வாக நடைமுறைகளுக்குப் பங்களிப்பதற்கும் இந்தியத் தலைமைக் கணக்காளர் (CAG) மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- "ஒடிசி நடனத்தின் தந்தை" என்று கருதப்படும் ஒரு புகழ்பெற்ற ஒடிசி நடனக் கலைஞர் மாயாதர் ரவுத் (92) சமீபத்தில் காலமானார்.
- ஆண்டுதோறும் நடைபெறும் கஜுராஹோ நடன விழா 2025 ஆனது, மத்தியப் பிரதேச கலாச்சாரத் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ஆளுகை, செயல்திறன் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் மிக கவனம் செலுத்தும் விதமாக, புது டெல்லியில் உள்ள AIIMS நிறுவனத்தினைச் சீரமைப்பதற்காக V.K. பால் தலைமையில் ஒரு குழுவை நிதி ஆயோக் அமைத்துள்ளது.

- பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகத்திடமிருந்து (DGCA) உரிமம் பெற்றதை அடுத்து, மத்தியப் பிரதேசத்தின் எட்டாவது விமான நிலையமாக டாடியா அதிகாரப் பூர்வமாக உருவெடுத்துள்ளது.
- IDEX எனப்படும் 17வது சர்வதேசப் பாதுகாப்புக் கண்காட்சி மற்றும் NAVDEX எனப்படும் 8வது கடற்படைப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்புக் கண்காட்சி ஆகியவை ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்றன.
- சாம்பார் திருவிழா 2025 உள்ள மிகப் புகழ்பெற்ற சாம்பார் ஏரியின் கலாச்சாரம், சாகசம் மற்றும் பாரம்பரியத்தின் கொண்டாட்டம் இராஜஸ்தானில் நடைபெற்றது.
- கொடிய நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மிகவும் கண்ணியத்துடன் இறக்க அனுமதிக்கும் உச்ச நீதிமன்றத்தின் அத்தீர்ப்பைச் செயல்படுத்த கர்நாடக சுகாதாரத் துறை உத்தரவு பிறப்பித்தது.
    - கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக இந்த முக்கியமான உத்தரவை செயல்படுத்தும் இரண்டாவது மாநிலம் கர்நாடகா ஆகும்.
- ஹரியானா மாநில அமைச்சரவையானது மிகச் சமீபத்தில், கிராமப்புறங்களில் அவ்வப் போது பயிர்களுக்கு அதிக அளவில் சேதம் விளைவிக்கின்ற நீலகை மான் (மரையான்) இனத்தினை கொல்வதற்கு அனுமதி அளித்துள்ளது.
- அனைவருக்கும் பாதுகாப்பான சாலைகள் என்ற கருத்தினைப் பரப்புவதற்காக 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் 31 ஆம் தேதி வரையில் தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “சடக் சுரக்சா - ஜீவன் ரக்சா” என்பதாகும்.
- மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு, விமானிகளுக்கான பொது விமானப் போக்குவரத்துத் துறை இயக்குநரகத்தின் (DGCA) மின்னணு வடிவப் பணியாளர் உரிமத்தினை (EPL) தொடங்கினார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கடற்படை ஆய்வானது (IFR) இந்தோனேசியாவின் பாலியில் தற்போது நடைபெற்று வருகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## பொருளாதார ஆய்வறிக்கை 2024-25 தமிழ்நாடு நிலவரம்

- காலணி உற்பத்தி மற்றும் இல்லம் தேடி கல்வி (வீடு தேடி கல்வி) ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான தமிழக அரசின் உத்தி சார் முயற்சிகளை 2024-25 ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வறிக்கை குறிப்பிட்டு காட்டியுள்ளது.
- பாரம்பரியத் தோல் பொருட்கள் உற்பத்தித் துறையில் தமிழ்நாடானது முன்னணியில் உள்ளது என்ற நிலையில் தற்போது தோல் பொருட்கள் அல்லாத காலணி உற்பத்தியின் வளர்ச்சியை ஆதரித்து வருகிறது.
- இந்தியாவின் காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் நமது மாநிலம் 38% பங்களிக்கிறது மற்றும் இந்தியாவின் மொத்தத் தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 47% பங்களிக்கிறது.

- இந்தத் துறையானது சுமார் 2 லட்சத்திற்கு அதிகமான அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது.
- தமிழக மாநிலம் 2022 ஆம் ஆண்டு பிரத்தியேக காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கையினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் எண்ணிம இடைவெளியால் கல்வியில் ஏற்பட்ட ஒரு இடைவெளியைக் குறைப்பதற்காக இல்லம் தேடி கல்வி திட்டம் ஆனது தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பானது நேரடியாகச் சென்றடையும் முறைகள் மூலம் கல்வியில் கவனம் செலுத்துகிறது.
- பெரிய மாநிலங்களுள், தமிழ்நாடு ஒரு நபருக்கு அதிகத் தொழிற்சாலைகள் கொண்ட தொகுப்பிலும் முன்னணியில் உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து குஜராத் மாநிலம் இடம் பெற்றுள்ளது.

## குழந்தைப் பருவ புற்றுநோய் பதிவேடு - முதல் அறிக்கை

- சென்னை PBCCR (Chennai Population-Based Childhood Cancer Registry) ஆனது நாட்டின் முதல் பிரத்யேக குழந்தைப் பருவ புற்றுநோய் பதிவேடு ஆகும்.
- இது 2022 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியில் 241 குழந்தைப் பருவப் புற்றுநோய் பாதிப்புகளை (19 வயதுக்குட்பட்ட 139 சிறுவர்கள் மற்றும் 102 சிறுமிகள்) அதில் பதிவு செய்தது.
- தமிழ்நாட்டில் ஓராண்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 96,000 புதிய நோயாளிகளில் 2,500 பேர் குழந்தைகள் ஆவர்.

## மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்கான பங்கு - 2025

- 2025-2026 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையின் படி, மத்திய வரிகளில் தமிழ்நாடு மாநிலமானது அதிகப் பங்குகளைப் பெற உள்ளது.
- 15வது நிதி ஆணையத்தினால் பரிந்துரைக்கப்பட்ட படி, மத்திய வரிகளில் தமிழ்நாடு மாநிலத்தின் பங்கு 4.079% ஆகும்.
- ஆரம்ப மதிப்பீடுகளில் 50,873.76 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்ட மத்திய வரிகளில் இந்த மாநிலத்திற்கான பங்கானது, 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மத்திய நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில், சுமார் 52,491.88 கோடி ரூபாயாக அதிகரிக்கப் பட்டு உள்ளது.
- 2025-2026 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு 58,021.50 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2023-2024 ஆம் ஆண்டு முதல் மாநிலங்களுக்கு 3% நிதிப் பற்றாக்குறையானது (மொத்த வரவுகளுக்கும் மொத்த செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடு) வரம்பானது அனுமதிக்கப் பட்டது.
- மின்சாரத் துறைச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்காக 2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகளுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 0.5% கூடுதலாகக் கடன் வாங்க அனுமதிக்கப்பட்டது.

## நெல் கொள்முதல் – தமிழ்நாடு

- பொது விநியோக அதிகாரிகள் தமிழக விவசாயிகளிடமிருந்து சுமார் எட்டு லட்சம் டன் நெல் கொள்முதல் செய்துள்ளனர்.
- கொள்முதல் செய்யப்பட்ட நெல்லில், சுமார் 6.2 லட்சம் டன் என்ற அளவிலான பெரும் பகுதி காவிரி டெல்டா மாவட்டங்களின் பங்காகும்.
- தஞ்சாவூர் சுமார் இரண்டு லட்சம் டன் பங்குடன் முன்னணியில் உள்ளது.
- தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக தோராயமாக 1.6 லட்சம் டன்கள் பங்குடன் திருவாரூர் இடம் பெற்றுள்ளது; 85,400 டன்கள் பங்குடன் மயிலாடுதுறையும் மற்றும் 70,500 டன்கள் பங்குடன் கடலூரும் அடுத்து இடம் பெற்றுள்ளன.
- காவிரி டெல்டா அல்லாத மாவட்டங்களைப் பொறுத்தவரையில், செங்கல்பட்டு சுமார் 36,000 டன்கள்; ஈரோடு, 31,000 டன்கள்; மற்றும் திருவள்ளூர், 23,300 டன்கள் என்ற அளவுப் பங்குடன் முன்னணியில் உள்ளன.
- மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் குழு மட்டும் 1.67 லட்சம் டன்களை வழங்கியுள்ளது.

## கூடலூர் ஜன்மம் நிலங்கள் சிக்கல்

- நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூரில் ஜன்மம் நிலங்களில் அடிப்படைக் கேளிக்கை வசதிகளை உருவாக்குவதைத் தடுக்கும் தற்காலிகத் தடையை நீக்குவதற்காக உச்ச நீதிமன்றத்தினை அணுக தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- தமிழ்நாடு கூடலூர் ஜன்மம் நிலப்பரப்பு (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி நிலங்களாக மாற்றுதல்) சட்டம், 1969 தொடர்பான சில வழக்குகளை நிலுவையில் உள்ள பிற வழக்குகளிலிருந்து அவற்றைப் பிரித்துத் தனித்தனியாக விசாரிக்க அனுமதிக்குமாறு உச்ச நீதிமன்றத்தை அரசு கோர உள்ளது.
- தற்போது நிலங்களின் குத்தகை காலம் முடிவடைந்ததால், அரசாங்கம் ஆனது 34,986 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ஜன்மம் நிலங்களை மீட்கத் தொடங்கியது.

## தமிழ்நாடு பருவநிலை உச்சி மாநாடு 3.0

- தமிழ்நாடு பருவ நிலை உச்சி மாநாடு 3.0 ஆனது சென்னையில் நடைபெற்றது.
- இந்த முக்கிய நிகழ்வின் போது, சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்தி பல்வேறு தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவற்றின் மீதான சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைக்க ஊக்குவிக்கும் வகையில், தொழில்துறைகளின் தன்னார்வ மதிப்பீட்டிற்கான வலை தளத்தினை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.
- தொழில்துறைகளுக்கான வழங்கீட்டுச் சான்றிதழ் திட்டத்தினை அறிமுகப் படுத்தும் 'Lifestyle for Climate' என்ற ஆவணத்தினையும் அவர் வெளியிட்டார்.
- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ராஜபாளையம் பகுதியில் கார்பன் மீது மிகை நீக்கம் செய்வதற்கான செயல் திட்டமும் இந்த நிகழ்வில் தொடங்கப்பட்டது.
- இது குறைவான கார்பன் உமிழ்வு சார்ந்த வளர்ச்சிக்கான ஒரு முன்மாதிரியாக இந்தப் பகுதியில் தொழில்துறையை முற்றிலும் மாற்றியமைப்பதற்கான ஒரு குறிப்பிட்டத் திட்டமாகும்.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சுற்றுச்சூழல் குழுமங்கள் நிறுவப் படும் என்றும் முதல்வர் அறிவித்தார்.
- இது பருவநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கம் குறித்து பள்ளி மாணவர்களுக்கு சிறு வயதிலிருந்தே கற்பிப்பதற்கான அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## பொற்பனைக்கோட்டை அகழ்வாராய்ச்சி 2025

- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொற்பனைக் கோட்டை என்ற தளத்தில் நெசவு செய்வதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படும் ஒரு எலும்பு முனை மற்றும் ஒரு சிறிய உடைந்த தங்கத் துண்டு ஆகியவை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- குறிப்பிடத்தக்க வகையில், 2023 ஆம் ஆண்டில் அகழ்வாராய்ச்சியின் முதல் தொடரில் அந்த இடத்தில் மலர் வடிவமைப்பிலான ஒரு தங்கக் காதணியினைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்தனர்.

## DRIP II திட்டத்தின் கீழ் அணை புனரமைப்பு – தமிழ்நாடு

- இந்த மாநிலத்தில் உள்ள 50 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான ஐந்து பெரிய அணைகள், உலக வங்கியின் உதவியுடன் இரண்டாவது அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் (DRIP) கீழ் விரைவில் புனரமைக்கப்பட உள்ளன.
- அணைப் பாதுகாப்பை உறுதி செய்வதையும் கட்டமைப்புகளின் செயல்பாட்டை மிக மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இத்திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.
- இதன்படி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆனைகுட்டம் அணை, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மிருகந்தாநதி அணை மற்றும் அமராவதி அணை ஆகியவற்றில் புதுப்பித்தல் பணிகளைத் தொடங்குவதற்கு உலக வங்கியின் ஒப்புதலுக்காக இந்தத் துறை காத்திருக்கிறது.
- இது வில்லிங்டனில் (கடலூர் மாவட்டம்) அணை புனரமைப்பு திட்டம் மற்றும் மேட்டூர் அணையில் நீர்ப்பிடிப்புப் பகுதி சுத்திகரிப்புப் பணிகளுக்கான திட்டங்களுக்கான முன்மொழிவினையும் உருவாக்கி வருகிறது.
- கெலவரப்பள்ளி மற்றும் நீரார் மேல்மட்ட அணை ஆகிய இரண்டு அணைகள் இதில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- 1959 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட வைகை அணையானது, இராமநாதபுரம் மற்றும் மதுரை உள்ளிட்ட மாவட்டங்களின் குடியிருப்பாளர்களுக்கு பயனளித்தது.
- பவானிசாகர் அணை பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

## பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பான குழு – தமிழ்நாடு

- தமிழக அரசானது, பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காக மூன்று பேர் கொண்ட குழுவினை அமைத்துள்ளது.
- இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ககன்தீப் சிங் பேடி, சென்னை பொருளியல் கல்வி நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் K.R. சண்முகம் ஆகியோர் இந்தக் குழுவின் சில உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- இக்குழுவானது ஒன்பது மாதங்களுக்குள் பரிந்துரைகளுடன் கூடிய மிகவும் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கும்.
- 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று அரசுப் பணியில் சேர்ந்த மாநில அரசு ஊழியர்களுக்குப் பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டம் (CPS) அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2004 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கு தேசிய ஓய்வூதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று மத்திய அரசு ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

## ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற இடைத்தேர்தல் 2025

- ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.
- 46 வேட்பாளர்கள் போட்டியிட்ட இந்தத் தேர்தலில் 6,109 வாக்காளர்கள் NOTA (மேலே உள்ளவர்கள் யாரும் இல்லை) விருப்பத் தேர்வினைத் தேர்ந்தெடுத்தனர்.
- ஈரோடு (கிழக்கு) தொகுதியில் வாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்கள் 2,27,546-1,10,128 ஆண்கள், 1,17,381 பெண்கள் மற்றும் 37 திருநர்கள் ஆவர்.
- இருப்பினும், 1,54,657 பேர் மட்டுமே வாக்களித்தனர், அதில் 74,260 ஆண்கள், 80,376 பெண்கள் மற்றும் 21 திருநர்கள் ஆவர்.

## பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம் 2025

- தமிழ்நாடு அரசானது, அதன் பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டத்தினை (SAPCC) இறுதி செய்து மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் ஒப்புதலுக்காக வேண்டி சமர்ப்பித்துள்ளது.
- பருவநிலை மாற்றத்திற்கான ஒரு பிரத்தியேக திட்டத்தினைத் தொடங்கி அதற்கு நிதி ஒதுக்கீட்டைச் செய்த முதல் இந்திய மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- தமிழ்நாடு மாநிலமானது, இந்தியாவின் நிலப்பரப்பில் 4% பங்கினை கொண்டுள்ளது என்பதோடு இந்தியாவின் மக்கள்தொகையில் 6% பேர் தமிழகத்தில் வசிக்கின்றனர், ஆனால் இம்மாநிலம் இந்தியாவின் நீர் வளங்களில் 2.5% பங்கினை மட்டுமே கொண்டு உள்ளது.
- மேற்பரப்பு நீர் வளங்களில் 95 சதவீதத்திற்கும் அதிகமானவை மற்றும் நிலத்தடி நீரில் 80% ஆனது ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு விட்டன.
- தேசியச் சராசரியான 2,200 மீ$^3$ என்ற அளவுடன் உடன் ஒப்பிடும் போது தமிழகத்தில் உள்ள நீர்வளங்களின் தனிநபர் கிடைக்கும் தன்மை 900 மீ$^3$ மட்டுமேயாகும்.

## CPCB வாரியத்தின் முன்னுரிமை நதி வழித் தடங்கள்

- நீர்வளத் தரத் தரவுகளின் அடிப்படையில் சென்னை மற்றும் சேலத்தில் உள்ள ஆறுகள் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் (CPCB) "முன்னுரிமை நதி வழித் தடங்கள்" ஆக அடையாளம் காணப்பட்டுள்ளன.

- CPCB வாரியத்தின் படி, தமிழ்நாட்டில் மிக மோசமாக மாசுபட்ட 10 நதி வழித் தடங்கள் உள்ளன என்பதோடு அவை முன்னுரிமை I முதல் V வரை வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இவற்றில், சென்னையில் உள்ள அடையாறு மற்றும் கூவம் நதிகள், சேலத்திற்கு அருகிலுள்ள திருமணிமுத்தாறு மற்றும் வசிஷ்ட ஆறுகள் முன்னுரிமை I எனும் பிரிவில் அடங்கும்.

## பணப்பரிசு சார்ந்த விளையாட்டுகளுக்கான விதிமுறைகள்

- தமிழ்நாடு இயங்கலை வழி விளையாட்டு ஆணையம் ஆனது, பணப்பரிசு சார்ந்த இயங்கலை வழி விளையாட்டுகளை மேலாண்மை செய்யும் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயங்கலை வழி விளையாட்டு ஆணையம் (பணப்பரிசு சார்ந்த இயங்கலை வழி விளையாட்டுகள்) விதிமுறைகள் ஆனது, 18 வயதிற்குட்பட்ட சிறார்கள் இந்த இயங்கலை வழியிலான பணப் பரிசுகள் சார்ந்த விளையாட்டுகளை விளையாடுவதைத் தடை செய்கிறது.
- பணப்பரிசு சார்ந்த இயங்கலை வழி விளையாட்டுகள் நள்ளிரவு முதல் காலை 5 மணி வரையில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்படும் என்பதோடு இந்த நேரங்களில் எந்த உள்நுழைவுகளும் அனுமதிக்கப்படாது.

## SC/ST மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றம் – தமிழ்நாடு

- 2020 மற்றும் 2022 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் பட்டியலிடப்பட்டச் சாதியினர் / பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் ஆகியோருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளன.
- பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு எதிராக 2020 ஆம் ஆண்டில் 1,274 குற்றங்களும், 2021 ஆம் ஆண்டில் 1,377 குற்றங்களும் பதிவு செய்யப்பட்டன.
- 2022 ஆம் ஆண்டில், பட்டியலிடப்பட்டச் சாதியினருக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்தன, இதன் விளைவாக 1,761 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.
- 2020 ஆம் ஆண்டில் 23 ஆக பதிவான வழக்குகள் ஆனது, 2021 ஆம் ஆண்டில் 30 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் 67 ஆகவும் அதிகரித்தது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர்/பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கு எதிரான குற்றங்களும் தமிழகத்தில் பதிவானது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் பிரிவினைச் சேர்ந்த பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை வழக்குகள் ஆனது 2020 ஆம் ஆண்டில் 116 ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 123 ஆகவும் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 166 ஆகவும் பதிவாகின.
- பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பிரிவினைச் சேர்ந்த பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை வழக்குகள் ஆனது, 2020 ஆம் ஆண்டில் 3 ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 6 ஆகவும் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 14 ஆகவும் பதிவாகியுள்ளன.

## தமிழ்நாட்டின் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் புதுப்பிப்பு

- பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் (BC) பட்டியலில் அகமுடையார் பிரிவிலிருந்து துளுவ வேளாளர் சமூகத்தினை நீக்குவதற்கு மாநில அரசு அனுமதித்துள்ளது.

- இதன் மூலம் கள்ளர்கள் மற்றும் மறவர்கள் ஆகிய சமூகப் பிரிவுகளை உள்ளடக்கிய 'முக்குலத்தோர்' எனப்படும் மூன்று பிரிவுகளில் ஒரு பிரிவான அகமுடையார் என்ற பிரிவுடனான இந்தச் சமூகத்தின் 80 ஆண்டுகால "தொடர்பு" முடிவுக்கு வருகிறது.
- மூத்த அரசு ஊழியர் A.N.சட்டநாதன் தலைமையிலான முதல் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் ஆணையம் ஆனது, 1969-70 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமைக்கப் பட்டது.
- J.A.அம்பாசங்கர் தலைமையிலான இரண்டாவது BC குழு (1982-85) அமைக்கப்பட்டது.

## மதக் கலப்புத் திருமணங்கள் மற்றும் 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம்

- சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு ஆனது, "இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவர் வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்ய விரும்பினால், அவர் அத்தகைய திருமணத்தினை 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளது.
- இது அந்தத் திருமணம் சட்ட விரோதமானது மற்றும் செல்லாது என்று அறிவிக்கப் படுவதைத் தவிர்க்கும்.

## தமிழ்நாடு சிறை விதிகள் 2024

- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமலுக்கு வந்த தமிழ்நாடு சிறை விதிகளின் 348வது விதியானது, தாங்கள் முன்கூட்டியே விடுதலை கோரும் ஆயுள் தண்டனை கைதிகளுக்கான விடுதலை கோரல் தகுதி அளவுருக்களை வரையறுக்கிறது.
- இந்தத் திருத்தப்பட்ட ஒரு விதியானது: "பாலியல் குற்றங்களுக்காக அல்லது 2012 ஆம் ஆண்டு POCSO சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற கைதிகள் முன்கூட்டியே விடுதலை செய்யப்படுவதற்கு பரிசீலிக்கப்பட மாட்டாது என்று குறிப்பிடுகிறது.

## சென்னையைச் சுற்றி 9 மேம்பாட்டு மையங்கள்

- சென்னையைச் சுற்றியுள்ள ஒன்பது மேம்பாட்டு மையங்களுக்காக என்று புதிய நகர மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தமிழக அரசு தொடங்கியுள்ளது.
- சென்னையைச் சுற்றி மீஞ்சூர், திருவள்ளூர், திருமழிசை, மாமல்லபுரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மறைமலைநகர், திருநின்றவூர் மற்றும் பரந்தூர் ஆகிய இடங்களில் புதிய நகர மேம்பாட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

## நான்காவது DISHA கூட்டம் - தமிழ்நாடு

- மாவட்ட மேம்பாடு, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு (DISHA) மீதான குழுவின் நான்காவது மாநில அளவிலான மறு ஆய்வுக் கூட்டம் ஆனது செயலகத்தில் நடத்தப் பட்டது.
- MGNREGA திட்டத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய 2,118 கோடி ரூபாய் ஊதிய நிலுவைத் தொகையினை மத்திய அரசு இன்னும் வழங்கவில்லை.
- 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசானது 59 நாட்கள் பணி வேலைகளை வழங்கியது என்ற ஒரு நிலையில் இது தேசியச் சராசரியான 52 நாட்களை விட அதிகமாகும்.

- பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசானது இந்தியாவில் முன்னோடியாக இருந்துள்ளது.
- 2021-2022 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 3,61,591 வீடுகளில் மொத்தம் 3,43,958 வீடுகள் பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில், 1,51,674 கர்ப்பிணிப் பெண்களுக்கு சுமார் 45.52 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.
- நடப்பு ஆண்டில், முதல் குழந்தை மற்றும் இரண்டாவது மகளைப் பெற்றெடுக்கும் தாய் மார்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

## பஞ்சாயத்து அதிகாரப் பகிர்வு குறியீடு 2024

- மாநிலங்களில் பஞ்சாயத்து அமைப்புகளுக்கான அதிகாரப் பகிர்வின் நிலை (2024)- ஆதார அடிப்படையிலான ஒரு தெரிவுநிலைத் தரவரிசை என்ற ஒரு அறிக்கையானது மத்திய பஞ்சாயத்து ராஜ் துறை இணை அமைச்சரால் வெளியிடப்பட்டது.
- பஞ்சாயத்து அதிகாரப் பகிர்வு குறியீட்டின் (PDI) கீழ் அகில இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- கர்நாடகா (72.23) மற்றும் கேரளா (70.59) ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு 68.38 மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.
- "செயல்பாடுகள்" என்ற பரிமாணத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மாநிலம் 60.24 மதிப்பெண்களுடன் தேசிய அளவில் அதிக மதிப்பெண்ணைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டில், 12,525 கிராமப் பஞ்சாயத்துகள், 388 பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் 37 மாவட்டப் பஞ்சாயத்துகள் உள்ளன.
- தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2021-22 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தின் சொந்த வருவாயில் பஞ்சாயத்து அமைப்புகளின் வருவாயின் பங்கு 0.31% ஆக இருந்தது.
- கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று தென் மாநிலங்கள் முறையே 2.84%, 2.42% மற்றும் 0.67% என்ற பங்குடன் அதிக பங்கைக் கொண்டிருந்தன.

## NAKSHA சோதனைத் திட்டம்

- நகர்ப்புற நிலப் பதிவுகளை நவீனமயமாக்குவதற்காக வேண்டி தேசியப் புவியிடத் தகவல் அடிப்படையிலான நகர்ப்புற வாழ்விடங்களின் நில ஆய்வு (NAKSHA) என்ற ஒரு சோதனைத் திட்டமானது தஞ்சாவூரில் தொடங்கப்பட்டுள்ளது.
- மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் நில வளத் துறையின் எண்ணிம இந்தியா நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டமானது மேற்கொள்ளப் படுகிறது.

## மகளிர் ஓட்டுனர்களுக்கு இளஞ்சிவப்பு நிற சீருடை

- தமிழக அரசானது 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் திருத்தம் செய்ய முன்வந்துள்ளது.
- ஒரு வரைவு திருத்தத்தின்படி, 'இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனம்' என்பது சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறையின் இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர

வாகனங்கள் சேவைத் திட்டத்தின் கீழ் சேவையாற்றும் மகளிர் ஓட்டுனர்களுக்கு என்று சொந்தமான மற்றும் மகளிரால் இயக்கப்படும் ஒரு மூன்று சக்கர வாகனங்கள் ஆகும் என்ற நிலையில் இவர்கள் இனி இளஞ்சிவப்பு நிறச் சீருடையை அணிவர்.

- இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனங்கள் ஆனது, அவசர காலங்களில் விரைவான எதிர் நடவடிக்கையினை உறுதி செய்வதற்காக என்று காவல்துறை உதவி எண்ணுடன் இணைக்கப்பட்ட GPS / VLTD வசதியுடன் இணைக்கப்படும்.

## ஐந்து பழங்குடியின சமூகங்களின் இனவரைவியல் ஆவணமாக்கம்

- தமிழ்நாடு மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, அதன் முதன்மையான தொல்குடி திட்டத்தின் கீழ், ஐந்து பட்டியலிடப்பட்ட பழங்குடியினச் சமூகங்களின் இனவரைவியல் / இனக்குழுவியல் ஆவணமாக்கலுக்காக வேண்டி சில வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது இருளர்கள், தோடர்கள், நரிக்குறவர்கள், காணிக்கரர்கள் மற்றும் குரும்பர்களின் மொழியியல் வளங்கள் மற்றும் உச்சரிப்பு/ஒலிப்பு வடிவங்களின் எண்ணிமப் பதிவை உள்ளடக்கியது.

## SC/ST ஆணையத்திற்குப் புதிய உறுப்பினர்கள் 2025

- மிகப் பிரபல எழுத்தாளரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான இமயம் என்ற V.அண்ணாமலை, தமிழ்நாடு மாநிலப் பட்டியலிடப்பட்ட சாதியினர் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆணையத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- S.செல்வகுமார் (கோவை மாவட்டம்), S.ஆனந்த ராஜா (தஞ்சாவூர்), M.பொன் தௌஸ் (நீலகிரி) மற்றும் P.இளஞ்செழியன் (திருநெல்வேலி) ஆகியோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இளஞ்செழியன் இந்த ஆணையத்தில் மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இந்த ஆணையத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் ஆகும்.
- நமது மாநில அரசானது 2021 ஆம் ஆண்டு SC / ST சட்டத்தின் கீழான தமிழ்நாடு மாநில ஆணையத்தின் விதிகளின் கீழ் இந்த ஆணையத்தை அமைத்துள்ளது.
- ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியான S. தமிழ்வாணனை இந்த ஆணையத்தின் தலைவராக அரசு நியமித்துள்ளது.
- 1955 ஆம் ஆண்டு உரிமையியல் சார் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் SC/ST (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான உரிமைகளின் மீறல்களுக்குப் பொதுத் தீர்வு காண்பதே இதன் முக்கியப் பணியாகும்.

## பாண்டியர் காலத்து கல்வெட்டுகள்

- இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) கல்வெட்டு அறிவியல் ஆய்வாளர்கள் மதுரை மாவட்டத்தின் மேலூர் தாலுக்காவில் உள்ள கம்பூர் அருகே அமைந்த மலைக் குன்றுகளில் கிடைத்த மூன்று கல்வெட்டுகளில் உள்ள சில தகவல்களைப் படியெடுத்து உள்ளனர்.
- இந்தக் கல்வெட்டுகள் ஆனது, 13 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பாண்டிய மன்னன் முதலாம் மாறவர்மன் சுந்தரப் பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.

- இதன் முதல் கல்வெட்டில் பாஸ்கரன் என்ற கிராமத் தலைவர் அங்கிருந்த ஒரு சிவன் கோவிலுக்கு நிலத்தினைத் தானமாய் அளித்ததை அது குறிப்பிடுகிறது.
- மற்ற இரண்டு கல்வெட்டுகளில் கம்பூர் மக்கள் பற்றியத் தகவலும், தென்ன கங்க தேவன் என்ற மற்றொரு கிராமத் தலைவன் சிறப்புப் பூஜைகளுக்காக நிலத்தினைத் தானமாக வழங்கிய தகவலும் இடம் பெற்றுள்ளது.
- இந்தக் கல்வெட்டுகள் கம்பூர் ஒரு காலத்தில் கம்பவூர் என்றும், நத்தத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் துவாரபதி நாடு என்றும் அழைக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்துகின்றன.

## தமிழ்நாடு கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் OBC பிரிவினர்

- கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (RLB) இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் ஒட்டு மொத்தப் பங்கு 12.39% ஆகும்.
- இந்தப் பிரிவினரின் பங்கு கிராமப் பஞ்சாயத்துகளில் 12.16% ஆகவும்; பஞ்சாயத்து ஒன்றியங்களில் 15.42% ஆகவும் மற்றும் மாவட்டப் பஞ்சாயத்துகளில் 17.25% ஆகவும் பிரிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, அனைத்து மட்டங்களில் மகளிருக்கான 57.3% அளவிலான இட ஒதுக்கீட்டைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- RLB அமைப்புகளின் மூன்று நிலைகளில், இந்தப் பங்குகள் ஆனது 57.2%, 58.07% மற்றும் 55.41% ஆகும்.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி நிலவரப்படி, "இடஒதுக்கீடு இல்லாத பொது மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகளின்" பங்கின் புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:
    - கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர் பதவிகளில் 65%;
    - கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளின் மன்ற உறுப்பினர்களில் 72%;
    - பஞ்சாயத்து தொழிற்சங்கங்களின் மன்ற உறுப்பினர்களில் 76%
    - மற்றும் மாவட்டப் பஞ்சாயத்துகளின் மன்ற உறுப்பினர்களில் 72%.

## இறந்த உடலில் இருந்து கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை 2025

- தமிழ்நாட்டின் மிகப்பெரிய அரசு மருத்துவமனையான இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை (RGGGH) ஆனது, இது வரை 15 இறந்த நபர்களின் உடலில் இருந்து 100% வெற்றி விகிதத்துடன் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 ஆம் தேதியன்று RGGGH, முதல் முறையாக இறந்த உடலில் இருந்து பெறப்பட்ட கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டது.
- அந்த ஆண்டு மட்டும் எட்டு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டில் மேலும் ஐந்து அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.
- இந்த ஆண்டு மட்டும் இது வரையில் இரண்டு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

### முதலமைச்சரின் மருந்தகங்கள்

- இந்த மாத இறுதிக்குள் மாநிலம் முழுவதும் 1,000 முதல்வர் மருந்தகங்களை (முதல்வர் மருந்தகங்கள்) திறப்பதற்கு தமிழ்நாடு மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- கூட்டுறவு, அம்மா, மற்றும் பிரதான் மந்திரி ஜன் ஔஷாதி மருந்தகங்களில் வழங்கப் படும் விலையை விட மிகவும் குறைந்த விலையில் மருந்துகளை வழங்குவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- தமிழ்நாடு மாநில அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை என்பதின் கீழ் இது நிறைவேற்றப் படும்.

# தேசியச் செய்திகள்

### பொருளாதார ஆய்வறிக்கை 2025

- பொருளாதார ஆய்வறிக்கை என்பது இந்தியப் பொருளாதாரத்தின் ஒரு செயல்திறன், இந்திய அரசாங்கக் கொள்கைகள் மற்றும் வரவிருக்கும் நிதியாண்டிற்கான நிதியியல் கண்ணோட்டத்தின் சுருக்கமானத் தகவல்களை வழங்கும் ஓர் ஆவணமாகும்.
- இந்தப் பொருளாதார ஆய்வறிக்கையானது தலைமை பொருளாதார ஆலோசகர் (CEA) தலைமையிலான பொருளாதாரங்கள் விவகாரத் துறையின் பொருளாதாரப் பிரிவால் தயாரிக்கப் படுகிறது.
- 2025-2026 (FY26) ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஆனது 6.4 சதவீதமாக இருக்கும் என்று இந்த ஆய்வறிக்கை கணித்துள்ளது.
- கடந்த நிதியாண்டில், கட்டுமானத் துறையில் அதிவேக வளர்ச்சிப் பதிவானது. பெருந் தொற்றுக் காலத்திற்கு முந்தையதாக இருந்த போக்கை விட சுமார் 15 சதவீதம் என்பது வளர்ச்சியடைந்துள்ளது.
- 2025 ஆம் நிதியாண்டில் 6.4 சதவீதமாக இருந்த இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது பத்தாண்டு கால சராசரிக்கு அருகில் உள்ளது.
- மொத்த கடன்கள் மற்றும் முன்பணங்களில் மொத்த வாராக் கடன்கள் ஆனது கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- கிராமப்புற தேவையில் ஏற்பட்ட மீட்சியால் இந்தியோ பொருளாதாரத்தில் மொத்தத் தேவையானது 7.3 சதவீதமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- மொத்த நிலையான மூலதன உருவாக்கம் (GFCF) (நிலையான விலையில்) ஆனது 6.4 சதவீதம் வளரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- வழங்கல் துறையில், உண்மையான மொத்த மதிப்புக் கூட்டல் (GVA) ஆனது 6.4 சதவீதம் வளரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- வேளாண் துறையானது 2025 ஆம் நிதியாண்டில் 3.8 சதவீதமாக மீண்டும் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2025 ஆம் நிதியாண்டில் தொழில்துறையானது சுமார் 6.2 சதவீதம் வளர்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- சேவைத் துறையின் வளர்ச்சியானது சுமார் 7.2 சதவீதமாக வலுவாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

- 2026 ஆம் நிதியாண்டில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி என்பது 6.3 முதல் 6.8 சதவீதம் வரை இருக்கும் என இந்த ஆய்வறிக்கை மதிப்பிட்டு உள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில் சுமார் 52.2 சதவீதமாக இருந்த இந்தியாவின் பணிநபர் வளத்தில் உள்ள சுயதொழில் செய்பவர்களின் சதவீதம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 58.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இந்திய நாடானது, 48 மணிநேரம் என்ற அதிகபட்ச அளவு வாராந்திர வேலை நேரத்தின் அடிப்படையில் ஜெர்மனி, வியட்நாம் மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகளுக்கு இணையானதாக உள்ளது.
- வாரத்திற்கு சராசரியாக 45 மணிநேர வேலை நேரத்துடன் மலேசியா இரண்டாவது இடத்தில் உள்ளது, அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- பள்ளி இடைநிற்றல் விகிதங்கள் ஆனது, சமீபத்திய ஆண்டுகளில் மிகப் படிப்படியாகக் குறைந்து, தொடக்கப் பள்ளிகளில் சுமார் 1.9 சதவீதமாகவும், மேல்நிலைத் தொடக்கப் பள்ளிகளில் சுமார் 5.2 சதவீதமாகவும், இடைநிலைப் பள்ளிகளில் 14.1 சதவீதமாகவும் உள்ளன.
- இந்தியாவின் பள்ளிக் கல்வி அமைப்பானது, 98 லட்சம் ஆசிரியர்களுடன் 14.72 லட்சம் பள்ளிகளில் 24.8 கோடி மாணவர்களுக்கு கல்விச் சேவையை அளிக்கிறது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையில் சுமார் 313 கிராம நியாயாலயங்கள் 2.99 லட்சத்திற்கும் அதிகமான வழக்குகளைத் தீர்த்து வைத்தன.
- 2024 ஆம் நிதியாண்டில் 5.4 சதவீதமாக இருந்த சில்லறை விற்பனை சார் பணவீக்கம் ஆனது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல்-டிசம்பர் மாதங்களில் 4.9 சதவீதமாகக் குறைந்தது.
- இந்தியாவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையானது 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2% ஆக இருந்தது.
- 2017-18 (ஜூலை-ஜூன்) ஆம் ஆண்டில் 6.0 சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2023-24 (ஜூலை-ஜூன்) ஆம் ஆண்டில் 3.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு, 2024 ஆம் ஆண்டு ஜூலை - நவம்பர் ஆகிய காலக் கட்டத்தில் மூலதனச் செலவினம் ஆனது ஆண்டிற்கு 8.2 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2023 ஆம் நிதியாண்டில் சுமார் 42 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவிற்கான நிகர FDI வரவு ஆனது 2024 ஆம் நிதியாண்டில் 26.5 பில்லியன் டாலராகக் குறைந்தது.

## 2025 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள்

- வரிவிதிப்பு, நகர்ப்புற மேம்பாடு, சுரங்கம், நிதித்துறை, மின்சாரம் மற்றும் ஒழுங்கு முறைச் சீர்திருத்தங்கள் என ஆறு துறைகளில் இந்த நிதிநிலை அறிக்கையானது சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சுமார் 50,65,345 கோடி ரூபாய் செலவினம் திட்டமிடப்பட்டுள்ளது, இது நடப்பு நிதியாண்டு செலவினத்தினை விட 7.4% அதிகமாகும்.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான செலவினம் (திருத்தப்பட்ட மதிப்பீடுகள்) 47.16 லட்சம் கோடி ரூபாயாகும்.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறையின் திருத்தப்பட்ட மதிப்பீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.8 சதவீதமாகும்.

- 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இனி புதிய வரிவிதிப்பு முறையில் 12 லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்திற்கு வருமான வரி இல்லை.
- புதிய வரிவிதிப்பு முறையில் 75,000 ரூபாய் என்ற நிலையான தொகைக் குறைப்புடன் 12.75 லட்சம் ரூபாய் வரையிலான வருமானத்திற்கு வருமான வரி செலுத்த வேண்டி இருக்காது.
- நிதிநிலை அறிக்கையில் வளர்ந்து வரும் வேளாண் மாவட்டங்களுக்கான பிரதான் மந்திரி தான் தன்ய கிரிஷி யோஜனா அறிவிக்கப்பட்டது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்கான ஒரு முதலீட்டு வரம்பு வகைப்பாடு ஆனது 2.5 மடங்கு அதிகரிக்கப்படும்.
- பீகாரில் புதிய மக்கானா (தாமரை விதை) வாரியம், தேசிய உணவுத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், தொழில்முனைவோர் மற்றும் மேலாண்மை நிறுவனம் ஆகியவை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டன.
- முதல் முறையாக தொழில்முனைவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பட்டியலிடப் பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடபட்ட பழங்குடியினர் பிரிவினைச் சேர்ந்த 5 லட்சம் பெண்களுக்காக ஒரு புதியத் திட்டம் தொடங்கப்படும்.
- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவின் கீழ் இணையவழியில் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கு சுகாதார நல சேவைகள் வழங்கப்படும்.
- அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பை வழங்குவதை ஒரு நோக்கமாகக் கொண்ட ஜல் ஜீவன் திட்டமானது 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.
- சுமார் 36 உயிர்காக்கும் மருந்துகளுக்குத் தற்போது சுங்க வரியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்படும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரசுப் பள்ளிகளில் சுமார் 50,000 அடல் மேம்படுத்தும் ஆய்வகங்கள் அமைக்கப்படும்.
- இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக அடுத்த தலைமுறை நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு வேண்டி மிக மேம்பட்ட தொழில்நுட்ப நிதிகளைப் பயன்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்படும்.
- பள்ளி மற்றும் உயர்கல்விக்கு எண்ணிம வடிவிலான இந்திய மொழிப் புத்தகங்களை வழங்குவதற்கு பாரதிய பாஷா புஸ்தக் திட்டம் அறிவிக்கப்படும்.

## தற்காலிக நீதிபதிகள் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளின் தேக்கத்தை நீக்குவதற்காக வேண்டி உயர் நீதிமன்றங்களில் தற்காலிக நீதிபதிகளை நியமிக்க வேண்டும் என்ற அதன் முந்தைய நிபந்தனையை உச்ச நீதிமன்றம் தளர்த்தியுள்ளது.
- "ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் 10 சதவீதத்திற்கு மிகாமல் இரண்டு முதல் ஐந்து வரையிலான தற்காலிக நீதிபதிகளை நியமிப்பதற்கு 224Aவது சரத்தினைப் பயன்படுத்தி தற்காலிக நீதிபதிகளை நியமிக்கலாம்" என்று உச்ச நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.
- 224Aவது சரத்தானது, உயர் நீதிமன்றங்களின் அமர்வுகளில் ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிப்பது தொடர்பானதாகும்.

## இரயில்வே துறையின் நிதிநிலை அறிக்கை 2025

- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான இந்திய இரயில்வே துறையின் நிதிநிலை ஒதுக்கீடு கடந்த ஆண்டு ஒதுக்கீட்டைப் போலவே 2.65 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.
- இதில் அரசு தனியார் கூட்டு முதலீடுகள் உட்பட மொத்தம் 2.65 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் இரயில்வே மூலதனம் ஆனது 2.52 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.
- இந்திய இரயில்வே நிர்வாகத்தில் வாடிக்கையாளர் வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடு ஆனது 2025-26 ஆம் நிதியாண்டில் 12,118.39 கோடியாக தொடர்ந்து குறைந்து வருகிறது.
- மேலும், 2024-25 ஆம் நிதியாண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சுமார் 27,570.77 கோடி ரூபாயாக இருந்த பொதுத்துறை அலகுகள் (PSU) மற்றும் கூட்டுத் துணிகர முதலீடுகள் (JV) ஆகியவற்றில் முதலீட்டிற்கான ஒதுக்கீடு ஆனது 2025-26 ஆம் நிதியாண்டில் 22,444.33 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், இந்திய இரயில்வே நிர்வாகமானது சுமார் 1.6 பில்லியன் டன் சரக்கு இரயில் திறனை மேம்படுத்தும் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டும்.
- இதன் மூலம், 3.7 பில்லியன் டன் கொள்ளளவு கொண்ட சீனாவிற்கு அடுத்தபடியாக, உலகிலேயே அதிகளவு சரக்கு இரயில் கொள்ளளவு திறனைக் கொண்ட இரண்டாவது இரயில்வே நிர்வாகமாக இது மாறும்.
- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை ஒதுக்கீட்டில் 'ஒரு அதிவேக விரைவு' இரயில் திட்டத்திற்கான ஒதுக்கீடு 19,000 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இரயில்வே நிர்வாகமானது அதன் வலையமைப்பினை 100% மின்மயமாக்கும் இலக்கை அடைய உள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இரயில்வே நிர்வாகமானது பயணிகள் வருவாயில் முதல் முறையாக 3 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இரயில்வே நிதிநிலை அறிக்கையானது முதன்முதலில் 1924 ஆம் ஆண்டில் பொது நிதி நிலை அறிக்கையிலிருந்துப் பிரிக்கப்பட்டது.
- 92 ஆண்டுகளுக்குப் பிறகு, அப்போதைய நிதியமைச்சர் அருண் ஜெட்லி அவர்கள் 2017-18 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த மத்திய நிதிநிலையைத் தாக்கல் செய்தபோது இந்த நடைமுறை முடிவுக்கு வந்தது.
- இந்த இரண்டு நிதிநிலை அறிக்கைகளையும் இணைக்கும் முடிவு விவேக் தேவ்ராய் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

## TEAM முன்னெடுப்பு

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் அமைச்சகமானது வர்த்தக செயல்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் (TEAM) என்ற முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளது.
- இது "MSME உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP)" என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இது MSME தொழில்துறைகளை எண்ணிம வர்த்தகத்தினை நன்கு ஏற்கவும், அவற்றின் சந்தை இருப்பை விரிவுபடுத்தவும் உதவும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

## ஜல் ஜீவன் திட்டம் நீட்டிப்பு

- 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ஜல் ஜீவன் திட்டமானது 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்படுவதாகவும், அதற்கான மொத்த நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப் படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு முதல், இந்தியாவின் கிராமப்புற மக்களில் 80 சதவீதத்தினை உள்ளடக்கிய 150 மில்லியன் குடும்பங்கள் குடிநீர் குழாய் இணைப்புகளைப் பெற்று உள்ளன.
- 100 சதவீத சேவை வழங்கீட்டினை அடைவதற்காக ஜல் ஜீவன் திட்டம் ஆனது 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ஜல் ஜீவன் திட்டமானது, 2024 ஆம் ஆண்டிற்குள் ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் குடிநீர்க் குழாய் இணைப்பினை வழங்குவதை இலட்சிய இலக்காகக் கொண்டு 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டது.

## பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீடுகள் 2025-26

- மத்திய அரசின் மொத்த நிதி ஒதுக்கீட்டில், 2024-25 ஆம் நிதியாண்டில் 6.8 சதவீதமாக இருந்த பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீட்டின் பங்கு ஆனது 2025-26 ஆம் நிதியாண்டில் 8.86% ஆக அதிகரித்துள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டின் பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீட்டு (GBS) அறிக்கையில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் நலனுக்காக 4.49 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு GBS ஒதுக்கீடானது, 2024-25 ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட 3.27 லட்சம் கோடி ரூபாயை விட 37.25% அதிகமாகும்.
- பகுதி A திட்டங்கள் (100% பெண்கள் சார்ந்தத் திட்டங்கள்) 1,05,535.40 கோடி ரூபாய் (மொத்த GBS ஒதுக்கீட்டில் 23.50%) பெற்றது.
- பகுதி B திட்டங்கள் (பெண்களுக்கான 30-99% ஒதுக்கீடு உள்ள திட்டங்கள்) 3,26,672.00 கோடி ரூபாய் (மொத்த GBS ஒதுக்கீட்டில் 72.75%) பெற்றது.
- பகுதி C திட்டங்கள் (பெண்களுக்கான 30 சதவீதத்திற்கும் குறைவான ஒதுக்கீடு உள்ளவை) 16,821.28 கோடி ரூபாய் (மொத்த GBS ஒதுக்கீட்டில் 3.75%) பெற்றது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் 38 அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் 5 ஒன்றியப் பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு மொத்தம் 49 அமைச்சகங்கள் / துறைகள் மற்றும் 5 ஒன்றியப் பிரதேசங்கள் ஒதுக்கீடுகளை அறிவித்துள்ளன.
- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 30 சதவீதத்திற்கும் அதிகமான ஒதுக்கீடுகளை அறிவித்த முதல் 3 அமைச்சகங்கள் / துறைகளாவன:
  - பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (81.79%),
  - ஊரக மேம்பாட்டுத் துறை (65.76%) மற்றும்
  - உணவு மற்றும் பொது விநியோகத் துறை (50.92%).
- பெண்களுக்கு 23% மட்டுமே வீடுகள் ஒதுக்கப் பட்டுள்ள நிலையில், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா–கிராமீன் (PMAY-G) திட்டத்தில் குறைவான அமலாக்கமே பதிவாகி உள்ளது.

## SC/ST சட்டம் - அறிவுசார் சொத்து

- 1989 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (வன் கொடுமைகள் தடுப்பு) சட்டம் மற்றும் அதன் 1995 ஆம் ஆண்டு விதிகளின் கீழ் அறிவு சார் சொத்து இழப்பு இழப்பீடு குறித்த மும்பை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- "சொத்து" என்ற சொல் ஆனது, தரவு, மின்னணுப் பொருட்கள் மற்றும் அறிவுசார் உரிமைகள், அவை புலனாகும் அல்லது புலனாகாதச் சொத்துக்கள் என்ற வகையில், அறிவுசார் சொத்துக்களையும் உள்ளடக்கியதாக மிகவும் பரந்த அளவில் விளக்கப்பட வேண்டும் என்று மும்பை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இதன்படி காப்புரிமைகள், பதிப்புரிமைகள் மற்றும் வடிவமைப்புகள் ஆகியன அமைப்பு ரீதியாக இல்லாவிட்டாலும், அவையும் சொத்துகளே ஆகும். என்பதோடு 1989 ஆம் ஆண்டு SC/ST சட்டத்தின் கீழ் இழப்பீட்டிற்கு மதிப்பிடப்படக் கூடியவை.
- மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், இச்சட்டத்தின் 8வது பிரிவானது, குற்றம் சாட்டப் பட்டவர்களே தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்கும் முக்கியப் பொறுப்பை இடமாற்றுகின்ற வகையில் தலைகீழ் நிரூபண/ ஆதார சமர்ப்பிப்புப் பொறுப்பினை கொண்டுள்ளது.

## GARBH-INi-Drishti

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் ஃபரிதாபாத்தில் உள்ள மருத்துவத் தகவல் பரிமாற்றம் சார்ந்த சுகாதார அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவை கர்பிணி-GA2 என்ற இந்தியாவிற்கான மிகவும் பிரத்தியேக செயற்கை நுண்ணறிவு மாதிரியை உருவாக்குவதற்காக ஒரு ஒத்துழைப்பினை மேற் கொண்டுள்ளன.
- இது தெற்காசியாவின் மிகப்பெரிய ஆய்விற்கான கர்ப்பிணிகள் குழு தரவுத் தொகுப்புகளில் ஒன்றின் விரிவான கண்ணோட்டத்தை வழங்கும் தரவு முகப்பு ஆகும்.
- GARBH-Ini GA-2 ஆனது மரபணு படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டது.

## பெண் தொழிலாளர் வளத்தின் பங்கேற்பில் அதிகரிப்பு 2024

- கடந்த ஏழு ஆண்டுகளில் பெண் தொழிலாளர் வளத்தின் பங்கேற்பு விகிதத்தில் (FLFPR) நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- கடந்த ஏழு ஆண்டுகளில், 2017-18 ஆம் ஆண்டில் 23.3% ஆக இருந்த FLFPR ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 41.7% ஆக அதிகரித்துள்ளது.
- கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் உட்பட பல்வேறு பிரிவுகளில் பொருளாதாரம் மீதான நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளது.
- தற்போது, 21 மாநிலங்களில் FLFPR 30 முதல் 40% வரையிலான வரம்பில் உள்ளது.
- ஏழு மாநிலங்கள் அல்லது ஒன்றியப் பிரதேசங்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமான FLFPR பதிவாகியுள்ளன என்ற நிலையில் சிக்கிம் மாநிலத்தில் அதிகபட்சமாக 56.9% விகித FLFPR பதிவாகியுள்ளது.

## 'ஞான் பாரதம் திட்டம்' 2025

- 2025 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் தேசியக் கையெழுத்துப் பிரதி திட்டத்தின் (NMM) கீழ் 'ஞான் பாரதம் திட்டம்' சேர்க்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் கையெழுத்துப் பிரதிகளின் மரபு குறித்த கணக்கெடுப்பு/ஆய்வு, ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்பிற்கான ஒரு சிறப்புத் திட்டமாகும்.
- தற்போது, NMM ஆனது இந்திரா காந்தி தேசியக் கலை மையத்தின் ஒரு பகுதியாக உள்ளது.
- NMM ஆனது 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## பாரதிய பாஷா புஸ்தக் திட்டம்

- 2025 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையானது பாரதிய பாஷா புஸ்தக் என்ற ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- இது பள்ளி மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கு இந்திய மொழிகளில் எண்ணிம வழியிலான புத்தகங்களை வழங்குவதற்கான ஒரு புதிய முன்னெடுப்பாகும்.
- இந்தத் திட்டம் ஆனது, பிராந்திய மொழிகளில் நூல்களை வழங்குவதன் மூலம் கல்வி கற்றலை மேலும் அணுகக் கூடியதாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய உற்பத்தித் திட்டம் 2025

- மத்திய அரசானது, தூய்மையான தொழில்நுட்ப உற்பத்தியில் கவனம் செலுத்தும் வகையில், குறு, நடுத்தர மற்றும் பெரிய தொழில்துறைகளுக்கான ஒரு திட்டத்தினை உருவாக்க உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், வணிகம் செய்வதை மிக எளிதாக்குதல் மற்றும் செலவினம், தேவைக்கேற்ற வேலைவாய்ப்புகளுக்கானத் திறன்களை மேம்படுத்துதல், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள், தொழில்நுட்பங்கள் கிடைக்கப்பெறும் தன்மை மற்றும் தரமானப் பொருட்கள் ஆகிய ஐந்து பகுதிகள் மீது மிக அதிக கவனம் செலுத்தப் படும்.
- இந்தத் திட்டம் ஆனது தோல் பொருட்களுக்கான ஆதரவைத் தவிர, தோல் பொருட்கள் சாராத தரம் வாய்ந்த காலணிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான முக்கிய வடிவமைப்பு திறன், கூறுகளின் உற்பத்தி மற்றும் இயந்திரங்களுக்கான ஆதரவினை அளிக்கும்.
- இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில் தற்போது 17 சதவீதமாக உள்ள உற்பத்தித் துறையின் மீதான பங்கை 25 சதவீதமாக உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

## SWAMIH நிதி 2.0

- மத்திய நிதிநிலை அறிக்கையில், நடுத்தர வர்க்கத்தினருக்கு மலிவான வீட்டு வசதி வழங்கும் சிறப்பு திட்ட நிதியின் (SWAMIH) கீழான இரண்டாவது தவணையாக 15,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இது ஒரு லட்சம் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்கு என்று உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- SWAMIH நிதியானது, நிதி அமைச்சகத்திடமிருந்து நிதியினைப் பெறுகிறது.
- இது நிதி நெருக்கடியில் உள்ள மற்றும் மிகவும் முன்னதாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்ட குடியிருப்புச் சொத்துகளுக்கான கடன் நிதியளிப்பிற்காக என்று உருவாக்கப்பட்டது.

## ஐந்தாண்டு பருத்தித் திட்டம் 2025

- இந்தத் திட்டம் ஆனது பருத்திகளின், குறிப்பாக கூடுதல் நீளம் கொண்ட தரமான இழை கொண்ட பருத்தி வகைகளின் உற்பத்தித் திறனை நன்கு அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவும் வழங்கப் படும்.
- இந்தத் திட்டமானது, 5F கொள்கைக்கு இணங்க உள்ளது மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதோடுத் தரமான பருத்தியின் நிலையான விநியோகத்தை அதிகரிக்கும்.
- வேளாண்-ஜவுளி, மருத்துவ ஜவுளி மற்றும் செயற்கை இழை சார் ஜவுளி போன்ற தொழில்நுட்ப ஜவுளிப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியை போட்டி விலையில் ஊக்குவிப்பதற்காக மிக முழுமையாக விலக்கு அளிக்கப்பட்ட ஜவுளி இயந்திரங்களின் பட்டியலில் மேலும் இரண்டு வகையான ஊடூசி இல்லாத தறிகள் சேர்க்கப்பட்டன.
- மத்திய நிதிநிலை அறிக்கையில், ஜவுளி அமைச்சகத்திற்கு 2025-26 ஆம் ஆண்டிற்காக 5272 கோடி ரூபாய் (நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகள்) ஒதுக்கீட்டை வழங்குவதாக அறிவித்தது.

## திறன் இந்தியா திட்டம் நீட்டிப்பு 2025

- மத்திய அரசின் திட்டமான 'திறன் இந்தியா திட்டத்தினை (SIP)' 2026 ஆம் ஆண்டு வரை தொடர்வதற்கும் மறுசீரமைப்பதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பின்வரும் மூன்று முக்கியக் கூறுகள், தற்போது "திறன் இந்தியா திட்டத்தின்" கூட்டு மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.
  - பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா 4.0 (PMKVY 4.0),
  - பிரதான் மந்திரி தேசியத் தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (PM-NAPS), மற்றும்
  - ஜன் சிக்சான் சன்ஸ்தான் (JSS) திட்டம்
- PMKVY 4.0 திட்டம் ஆனது, சிறப்பு திட்டங்கள் (SP) மற்றும் மறு திறன் வழங்கீடு மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட குறுகிய காலப் பயிற்சி (STT) மூலம் தேசிய திறன் தகுதிகள் கட்டமைப்பு (NSQF) உடன் நன்கு இணைக்கப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சியை வழங்குகிறது.
- JSS திட்டம் ஆனது ஒரு சமூகம் சாரந்த திறன் முன்னெடுப்பாகும்.
- இது தொழில் துறைப் பயிற்சியைக் குறிப்பாக பெண்கள், கிராமப்புற இளையோர்கள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழுக்களுக்கு மற்றும் 15 வயது முதல் 45 வயதுக்குட்பட்டவர்களுக்கு மிக அணுகக் கூடியதாகவும், தகவமைப்பு மிக்கதாகவும், உள்ளடக்கிய வகையிலானதாகவும் மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஸ்வவலம்பினி திட்டம்

- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சகம் (MSDE) ஆனது, நிதி ஆயோக் அமைப்புடன் இணைந்து அசாம், மேகாலயா மற்றும் மிசோரம் ஆகிய சில மாநிலங்களில் ஸ்வவலம்பினி திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்த மகளிர் தொழில்முனைவோர் திட்டம் ஆனது, வடகிழக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் (HEIs) மாணவிகளுக்குப் பெரும் அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இது அவர்களின் தொழில்முனைவுப் பயணத்தில் பெரும் வெற்றி பெற அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய தொழில்முனைவோர் மனநிலை, வளங்கள் மற்றும் வழி காட்டுதலுடன் அவர்களைச் சித்தப்படுத்தும்.

## புதிய வேளாண் தொழில்நுட்பத் திட்டங்கள் 2025

- அரசு புதிதாக அறிவித்த குறைந்தது ஒன்பது புதியத் திட்டங்கள் ஆனது வேளாண் துறையை மட்டுமே மையமாகக் கொண்டவையாகும்.
- பிரதான் மந்திரி தன்-தான்ய கிரிஷி யோஜனா என்ற ஒரு திட்டமானது, தற்போதுள்ள திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் மாநில அரசுகளுடன் இணைந்து செயல் படுத்தப் படும்.
- இது குறைந்த உற்பத்தித் திறன், மிதமான பயிர் வளர்ப்பு செறிவு மற்றும் சராசரிக்கும் குறைவான கடன் அளவுருக்கள் கொண்ட 100 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.
- காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான விரிவான இந்தத் திட்டமானது மாநிலங்களுடன் இணைந்து தொடங்கப்படும்.
- இது விவசாயிகளுக்கு அதன் உற்பத்தி, பயன்திறம் மிக்க விநியோகம், பதப்படுத்துதல் மற்றும் ஊதிய விலைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அதிக மகசூல் தரும் விதைகளுக்கான தேசியத் திட்டம் ஆனது 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட 100க்கும் மேற்பட்ட அதிக மகசூல் தரும், பூச்சி எதிர்ப்பு திறன் கொண்ட மற்றும் பருவநிலை-எதிர்ப்பு திறன் கொண்ட விதை வகைகளின் வணிக ரீதியாக கிடைக்கும் தன்மை, மேம்பாடு மற்றும் பரப்புதலை இலக்காகக் கொண்டது.
- மக்கானா (தாமரை விதை) உற்பத்தி, பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டல் மற்றும் அதன் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக பீகாரில் ஒரு மக்கானா வாரியம் நிறுவப் பட உள்ளது.
- திறன் பயிற்சி, முதலீடு மற்றும் தொழில்நுட்பம் மூலம் வேளாண்மையில் நிலவும் வேலைவாய்ப்பின்மையை நிவர்த்தி செய்வதற்காக மாநில அரசுகளுடன் இணைந்து 'கிராமப்புறச் செழிப்பு மற்றும் மீள்தன்மைத் திட்டம்' முன்னெடுப்பானது தொடங்கப் படும்.
- இது கிராமப்புற பெண்கள், இளம் விவசாயிகள், கிராமப்புற இளையோர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்றக் குடும்பங்கள் மீது கவனம் செலுத்தும்.
- யூரியா விநியோகத்தை மேலும் அதிகரிப்பதற்காக, அசாமின் நம்ரூப் எனுமிடத்தில் ஆண்டிற்கு 1.27 மில்லியன் டன் உற்பத்தி திறன் கொண்ட யூரியா ஆலை அமைக்கப் படும்.

## பருப்பு வகைகளில் சுய சார்பிற்கான திட்டம் 2025

- பருப்பு வகைகளில் சுய சார்பிற்கான ஒரு திட்டமானது, 2025-26 ஆம் நிதியாண்டில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டைப் பெற்ற ஆறு ஆண்டு காலத் திட்டமாகும்.
- இது துவரை பருப்பு, உளுந்து, மசூர் (சிவப்பு பயறு) ஆகியவற்றின் உற்பத்தியின் மீது கவனம் செலுத்துகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ், NAFED மற்றும் தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு போன்ற மத்திய அரசு நிறுவனங்கள் ஆனது அடுத்த நான்கு ஆண்டுகளில், இந்த நிறுவனங்களில் பதிவு செய்து ஒப்பந்தங்களில் பங்கேற்கும் விவசாயிகளிடமிருந்து அவர்களால் "உற்பத்தி செய்யக் கூடிய அளவினை" இந்தப் பருப்பு வகைகளை கொள் முதல் செய்யும்.

## அணுசக்தி திட்டம் 2025

- அணுசக்தி மேம்பாட்டை விரைவுபடுத்துவதற்கும், 2047 ஆம் ஆண்டிற்குள் மேம்பட்ட அணுசக்தி மீதான தொழில்நுட்பத்தில் இந்தியாவை உலகளாவிய முன்னணித்துவம் பெற்றதாக நிலைநிறுத்துவதற்கும் அணுசக்தி திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- 2047 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 100 GW அணுசக்தித் திறனை உருவாக்குவது நமது நாட்டின் ஆற்றல் மாற்ற முயற்சிகளுக்கு அவசியமாகும்.
- இந்த இலக்கினை அடைவதற்காக வேண்டி தனியார் துறையுடனான ஒரு தீவிரமான கூட்டாண்மைக்காக, அணுசக்திச் சட்டம் மற்றும் அணு சேதத்திற்கான உரிமையியல் பொறுப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.
- சுமார் 20,000 கோடி ரூபாய் செலவில் சிறிய மாதிரி உலைகள் (SMRs) குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஓர் அணுசக்தி திட்டம் ஆனது அமைக்கப்படும்.
- உள்நாட்டிலேயே என்று உருவாக்கப்பட்ட குறைந்தபட்சமாக 5 SMR உலைகள் 2033 ஆம் ஆண்டிற்குள் செயல்படுத்தப்படும்.
- 1962 ஆம் ஆண்டின் அணுசக்திச் சட்டமானது, இந்தியாவில் தனியார் துறை அணு மின் உற்பத்தியைத் தடை செய்கிறது.
- அரசாங்கத்திற்குச் சொந்தமான NPCIL மற்றும் பாரதிய நபிகியா வித்யுத் நிகாம் லிமிடெட் ஆகிய இரண்டு நிறுவனங்கள் மட்டுமே இந்தியாவில் அணு மின் உற்பத்தி நிலையங்களைச் சொந்தமாக வைத்திருக்கவும் அவற்றை இயக்கவும் வேண்டி சட்டப் பூர்வமாக அனுமதிக்கப்படுகின்றன.
- 2010 ஆம் ஆண்டு அணு சேதத்திற்கான உரிமையியல் பொறுப்புச் சட்டம் ஆனது, எந்த ஒரு அணு விபத்திற்குமான பொறுப்பை அணுசக்தி நிலைய இயக்க அமைப்பின் மீது நிர்ணயிக்கிறது மற்றும் இயக்க அமைப்பின் மொத்தப் பொறுப்பை வரையறுக்கிறது.
- ஆனால் இது, அணு உலை வழங்கீட்டு நிறுவனத்திடம் இருந்து எவ்வித வரம்புமின்றி அணுமின் நிலைய இயக்க அமைப்பானது சட்டப்பூர்வ உதவியைப் பெற்றிட வேண்டி அனுமதிக்கிறது.
- இந்திய நாடானது, தற்போது 8180 மெகாவாட்டாக உள்ள தனது அணுசக்தித் திறனை 2031-2032 ஆம் ஆண்டிற்குள் 22,480 மெகாவாட்டாக விரிவுபடுத்துவதற்காக செயலாற்றி வருகிறது.

## நீர்வடிகால் பகுதிகள் யாத்திரை

- மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் நீர்வடிகால் பகுதிகள் யாத்திரை எனப் படும் தேசிய அளவிலான ஒரு மாபெரும் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தினைத் தொடங்கி வைத்தார்.
- திட்டப் பகுதிகளில் பிரதான் மந்திரி கிருஷி சின்சாயி யோஜனா (WDC-PMKSY 2.0) திட்டத்தின் நீர்வடிகால் மேம்பாட்டு திட்டக் கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் நீர் வடிகால் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து மக்களின் பங்களிப்பை மிக நன்கு அதிகரிப்பதையும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

## குழந்தைகளின் சாலைப் பாதுகாப்பு நெருக்கடி

- யுனிசெஃப் அமைப்பானது, உலக சுகாதார அமைப்பின் காயங்கள் தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு மையத்துடன் இணைந்து, NIMHANS என்ற நிறுவனத்தில் இந்தியாவில் குழந்தைகள் மற்றும் வளர்இளம் பருவத்தினருக்காக வேண்டி சாலைப் பாதுகாப்பிற்கான தேசிய செயல் திட்டத்தினை வெளியிட்டது.
- இது குழந்தைகளிடையே சாலைப் போக்குவரத்து விபத்தினால் ஏற்படும் காயங்கள் (RTI) குறித்த மோசமான புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டுகிறது.
- இந்தியாவில் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரிடையே பதிவாகும் அதிகமான உயிரிழப்பிற்கு RTI தற்போது முக்கிய காரணமாக உள்ளது என்பதோடு இது அனைத்து சாலை விபத்து சார்ந்த உயிரிழப்புகளிலும் 10% ஆகும்.
- குறிப்பிடத்தக்க வகையில், இந்த உயிரிழப்புகளில் சுமார் 75% ஆனது 14 முதல் 17 வயது உடையவர்களிடையே பதிவாகியுள்ளன, மேலும் கடந்த பத்தாண்டுகளில் இந்த வயது குழுவில் இந்த எண்ணிக்கை இரு மடங்கிற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

## SARAT பதிப்பு 2

- புவி அறிவியல் துறை அமைச்சகம் ஆனது தேடல் மற்றும் மீட்பு உதவிக் கருவியின் (SARAT) சமீபத்திய இரண்டாம் பதிப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது கடலில் மிகவும் தொலைதூர அல்லது அதிக ஆபத்துள்ளப் பகுதிகளில் கப்பல்கள், விமானங்கள் மற்றும் தனிநபர்களுக்கு உதவும் செயற்கைக்கோள் அடிப்படையிலான இடர் எச்சரிக்கை அமைப்பாகும்.

## சிறந்த 50 சுற்றுலாத் தலங்கள் - 'சவால் சார்ந்த நடவடிக்கை'

- மத்திய நிதிநிலை அறிக்கையில், மாநில அரசுகளுடன் இணைந்து 'சவால் சார்ந்த நடவடிக்கை' என்பதின் அடிப்படையில் நாட்டின் சிறந்த 50 சுற்றுலாத் தலங்களின் உருவாக்கத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டது.
- அத்தியாவசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நிலம் வழங்கச் செய்வதற்கான ஒரு பொறுப்பினை மாநில அரசுகள் கொண்டுள்ளன.
- இந்த இடங்களில் உள்ள உணவு விடுதிகள் ஆனது, உள்கட்டமைப்புத் திட்டங்களின் உள்கட்டமைப்புக்கான முதன்மை இசைவுப் பட்டியலில் (HML) சேர்க்கப்படும்.

- கூடுதலாக, சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக என்று, இந்திய அரசானது இணைய வழி நுழைவு இசைவுச் சீட்டு வசதிகளை நெறிப்படுத்தி, தேர்ந்தெடுக்கப் பட்ட சுற்றுலாக் குழுக்களுக்கு நுழைவு இசைவுச் சீட்டுக் கட்டணத் தள்ளுபடிகளை வழங்கும்.
- புத்தரின் வாழ்க்கை மற்றும் காலங்களுடன் தொடர்புடைய இடங்களில் ஒரு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

## உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தி 2024

- 2013-14 ஆம் ஆண்டில் சுமார் 2,53,346 கோடி ரூபாயாக இருந்த நாட்டின் பாதுகாப்பு துறைக்கான நிதி ஒதுக்கீடானது, 2024-25 ஆம் ஆண்டில் 6,21,940.85 கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- 2023-24 ஆம் நிதியாண்டில், இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தியானது ஒரு சாதனை அளவிலான உச்சமாக 1.27 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- இது 2014-15 ஆம் நிதியாண்டில் பதிவான 46,429 கோடி ரூபாயினை விட தோராயமாக 174% அதிகமாகும்.
- நடப்பு நிதியாண்டில் பாதுகாப்பு உற்பத்தியில் சுமார் 1.75 லட்சம் கோடி ரூபாய் என்ற இலக்கை அடைவதற்கான பாதையில் இந்தியா உள்ளது.
- இந்தியா 2029 ஆம் ஆண்டிற்குள் சுமார் 3 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பாதுகாப்பு உற்பத்தியை எட்டுவதற்கும், மேலும் உலகளாவியப் பாதுகாப்பு உற்பத்தி மையமாக தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்திப் பொருட்கள் அதிகளவில் என்று ஏற்றுமதி செய்யப் படும் முதல் மூன்று இடங்கள் அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் அர்மேனியா ஆகியவையாகும்.

## தெற்குக் கடற்கரை இரயில்வே மண்டலம்

- புதியத் தெற்குக் கடற்கரை இரயில்வே மண்டலத்தினை உருவாக்கும் ஒரு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை முன்னோட்ட ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் விசாகப்பட்டினத்தில் அமைக்கப்பட உள்ள தெற்குக் கடற்கரை இரயில்வே மண்டலத்தின் தலைமையகத்திற்கு இந்தியப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- இந்த SCoR மண்டலம் ஆனது இந்திய இரயில்வே நிர்வாகத்தின் 18வது மண்டலமாக இருக்கும்.
- இதற்கான ஒரு அதிகார வரம்பு ஆனது, கிழக்குக் கடற்கரை இரயில்வே மற்றும் தென்-மத்திய இரயில்வே மண்டலங்களின் சில பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது.
- இது தெலுங்கானா மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகளுடன் ஆந்திரப் பிரதேசத்தின் குறிப்பிடத்தக்கப் பகுதியை உள்ளடக்கும்.
- அமைச்சரவையானது வால்டேர் இரயில்வே பிரிவையும் (முன்னர் கிழக்குக் கடற்கரை இரயில்வே மண்டலத்தின் கீழ் இருந்தது) இரண்டு பகுதிகளாகப் பிரித்தது.
- அரசாங்கம் ஆனது, அதன் காலனித்துவ காலப் பெயரை குறிப்பிட்டுக் காட்டி, முதல் பிரிவினை விசாகப்பட்டினம் இரயில்வே பிரிவு என மறுபெயரிட்டு அதனைப் புதிய மண்டலத்தின் கீழ் சேர்த்துள்ளது.

- மற்றொரு பிரிவானது, ஒடிசாவின் இராயகடாவில் ஒரு தலைமையகத்துடன் கிழக்குக் கடற்கரை இரயில்வே மண்டலத்தின் கீழான புதிய பிரிவாக மாற்றப்படும்.
- கிழக்குக் கடற்கரை இரயில்வே மண்டலமானது (ECoR) 2023-24 ஆம் நிதியாண்டில் சரக்கு ஏற்றுதலில் இந்திய இரயில்வேயின் அனைத்து சாதனைகளையும் முறியடித்து உள்ளது.

## பொட்டாசியம் இருப்புக்கள்

- இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) நடத்திய ஆய்வுகள் ஆனது, இராஜஸ்தானின் சில பகுதிகளிலும் பொட்டாசியம் இருப்புப் பகுதிகளை அடையாளம் கண்டுள்ளன.
- இராஜஸ்தானுக்கு அடுத்தபடியாக சில குறிப்பிடத்தக்க பொட்டாசியம் இருப்புகளைக் கொண்ட இரண்டாவது மாநிலம் பஞ்சாப் ஆகும்.
- பொட்டாசியம் இருப்புகளைக் கொண்ட கபர்வாலா (முக்த்சர் சாஹிப்), ஷெர்வாலா மற்றும் ராம்சாரா (ஃபாசில்கா) மற்றும் ஷெர்கர் மற்றும் டால்மீர் கெரா (ஃபாசில்கா) ஆகிய மூன்று சுரங்கத் தொகுதிகள் சுமார் 18 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவி உள்ளன.
- பொட்டாஷ் என்பது உரங்களில் முதன்மையாகப் பயன்படுத்தப்படும் ஒரு தாதுவான பொட்டாசியம் தாதுவினைக் கொண்டுள்ளது.

## 100 GW சூரிய மின்னாற்றல் திறன் மைல்கல்

- நிறுவப்பட்ட சூரிய மின்னாற்றல் திறனில் 100 GW (100.33 GW) என்ற ஒரு வரம்பினைத் தாண்டி இந்தியா ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.
- கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் சூரிய மின்னாற்றல் துறையின் திறன் என்பது மிக அசாதாரணமாக 3450% அதிகரித்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 2.82 GW ஆக இருந்த இது 2025 ஆம் ஆண்டில் 100 GW ஆக உயர்ந்து உள்ளது.
- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சியில் சூரிய மின்னாற்றல் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்ற நிலையில் இது நிறுவப்பட்ட மொத்த புதுப்பிக்கத் தக்க எரிசக்தி திறனில் 47% ஆகும்.
- 2024 ஆம் ஆண்டில், சாதனை அளவிலான 24.5 GW சூரிய மின்னாற்றல் திறன் உற்பத்தி செய்யப் பட்டது என்பதோடு இது 2023 ஆம் ஆண்டில் பதிவான உற்பத்தித் திறனுடன் ஒப்பிடும் போது சூரிய மின்னாற்றல் நிறுவல்களில் இரண்டு மடங்குக்கும் அதிகமான அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.
- கடந்த ஆண்டு 18.5 GW பயன்பாட்டு அளவிலான சூரிய மின்னாற்றல் உற்பத்தி திறன் நிறுவப் பட்டது என்பதோடு இது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சுமார் 2.8 மடங்கு அதிகரிப்பு ஆகும்.
- இராஜஸ்தான், குஜராத், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை மின்னாற்றல் உற்பத்தித் திறனில் சிறப்பான செயல்திறன் கொண்ட சில மாநிலங்களில் அடங்கும்.
- இந்தியாவில் மேற்கூரை சார்ந்த சூரிய மின்னாற்றல் துறையில், 2024 ஆம் ஆண்டில் 4.59 GW புதிய உற்பத்தி திறன் நிறுவப் பட்டதுடன் மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பதிவானது என்பதோடு இது 2023 ஆம் ஆண்டு பதிவான அளவுடன் ஒப்பிடும்போது 53% அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.

## NCSK ஆணையத்தின் பதவிக் காலம் நீட்டிப்பு

- தேசிய சஃபாய் கரம்சாரிகள் (தூய்மைப் பணியாளர்கள்) ஆணையத்தின் (NCSK) பதவிக் காலத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு வேண்டி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- இது நாடு முழுவதும் நிலவும் மனிதக் கழிவகற்றல் பணியாளர் முறைகளைத் தடை செய்யும் சட்டத்தின் விதிகளை அமல்படுத்துகிறது.
- இது 2013 ஆம் ஆண்டு மனிதக் கழிவகற்றல் பணியாளர்கள் பணியமர்த்தப்படுவதைத் தடைசெய்தல் மற்றும் மறுவாழ்வுச் சட்டத்தின் விதிகளை செயல்படுத்தும் முகமை ஆகும்.
- 1993 ஆம் ஆண்டு தேசியத் தூய்மைப் பணியாளர்கள் ஆணையச் சட்டத்தின் கீழ், 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முதல் NCSK ஆனது, இந்தச் சட்டம் 2004 ஆம் ஆண்டில் காலாவதியாகும் வரையில் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகச் செயல்பட்டு வந்தது.
- அப்போதிருந்து, அதன் பதவிக் காலம் ஆனது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, சமூக நீதி அமைச்சகத்தின் கீழான ஒரு சட்டப்பூர்வமற்ற அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

## உயர்கல்வி குறித்த நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை 2025

- நிதி ஆயோக் அமைப்பானது, 'மாநிலங்கள் மற்றும் மாநில அரசு/பொதுப் பல்கலைக் கழகங்கள் மூலம் தரமான உயர்கல்வியை விரிவுபடுத்துதல்' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை தயாரித்துள்ளது.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில், ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகபட்சமாக 8.11% சதவீதம் கல்விக்காக செலவிடுகிறது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து மணிப்பூர் (7.25%), மேகாலயா (6.64%) மற்றும் திரிபுரா (6.19%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- கேரளா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் இளையோருக்கான உயர்கல்வி செலவினத்தில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளன.
- இராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் சத்தீஸ்கர் போன்ற சில மாநிலங்கள் இதில் பின்தங்கி உள்ளன.
- உயர்கல்வி நிதியில் மகாராஷ்டிரா மாநிலம் 11,421 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் முன்னணியில் உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து பீகார் மாநிலம் (9,666 கோடி ரூபாய்) மற்றும் தமிழ்நாடு (7,237 கோடி ரூபாய்) ஆகியன இடம் பெற்றுள்ளன.
- சிக்கிம் (142 கோடி ரூபாய்), அருணாச்சலப் பிரதேசம் (155 கோடி ரூபாய்), நாகாலாந்து (167 கோடி ரூபாய்) போன்ற மாநிலங்கள் உயர்கல்விக்கான நிதி ஒதுக்கீட்டினை மிகக் குறைவாகக் கொண்டுள்ளன.
- மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) உயர்கல்வி செலவினங்களைக் கருத்தில் கொண்டால், பீகார் 1.56% பங்குடன் முன்னணி இடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து 1.53% பங்குடன் ஜம்மு & காஷ்மீரும், 1.45% பங்குடன் மணிப்பூரும் இடம் பெற்றுள்ளன.
- தெலுங்கானா 0.18% பங்குடன், மிகவும் குறைந்த சதவிகித நிதியையே ஒதுக்குகின்றன என்ற ஒரு நிலையில் குஜராத் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை தலா 0.23% நிதிகளை ஒதுக்குகின்றன.

- தேசிய சராசரிப் பல்கலைக்கழகச் செறிவு ஆனது 0.8 ஆகும்.
- சிக்கிமில் மிகவும் அதிகபட்சமாக 10.3 செறிவு பதிவாகியுள்ளது என்ற ஒரு நிலையில் அதனைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசம், லடாக், இமாச்சலப் பிரதேசம், மேகாலயா மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்களான பீகார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவற்றில், மாநில அளவிலான செறிவு தேசிய சராசரியை விட குறைவாக உள்ளது என்ற நிலையில் பீகார் மிகக் குறைந்த அளவில் 0.2 செறிவினைக் கொண்டுள்ளது.
- கேரளா, சத்தீஸ்கர் மற்றும் இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் ஆண்களை விட பெண்களின் சேர்க்கை விகிதம் அதிகமாக உள்ளது.
- சண்டிகர், மிசோரம் மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் போன்ற சிறிய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் சில நூறு மாணவர்கள் என்ற வேறுபாட்டுடன் ஒப்பீட்டளவில் மிகவும் சமநிலையான ஆண்-பெண் கல்விச் சேர்க்கை விகிதத்தினைக் கொண்டுள்ளன.

## இணையவெளி மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு காப்பீடு

- இணையவெளி மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு காப்பீடு குறித்து மத்திய நிதிநிலை அறிக்கை உரையில் இரண்டு அறிவிப்புகள் வெளியிடப்ப ட்டன.
- முதலாவதாக, பிரதமர் ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழ் இணையவெளி மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கு சுகாதாரக் காப்பீடு வழங்கப்படும்.
- இரண்டாவதாக, அத்தகையத் தொழிலாளர்களுக்கு e-Shram இணைய தளம் மூலம் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்பதோடு இது 1 கோடி தொழிலாளர்களுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இணையவெளி மூலம் திரட்டப்படும் தொழிலாளர் முறையானது உணவு விநியோகம், வாடகை வாகனங்கள் சேவை/பயணப் பகிர்வு, இணைய வணிகம் மற்றும் பிற தொழில்முறை சேவைகள் என பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் உள்ளது.
- இந்தியாவில் 2024-25 ஆம் நிதி ஆண்டில் இணையவெளியின் மூலம் திரட்டப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை சுமார் 12.7 மில்லியனாக இருக்கும் என்று நிதி ஆயோக் அமைப்பானது மதிப்பிட்டுள்ளது என்பதோடு இது 2029-30 ஆம் ஆண்டில் சுமார் 23.5 மில்லியனை எட்டும் எனவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

## அடல் புஜல் யோஜனா விரிவாக்கம்

- அடல் புஜல் யோஜனா திட்டத்தினை பீகார், பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு உட்பட மேலும் ஐந்து மாநிலங்களுக்கு விரிவுப்படுத்துவதற்கு மத்திய அரசுத் திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது நீர் பற்றாக்குறை உள்ள ஏழு மாநிலங்களில் நிலத்தடி நீர் நிலைத் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அடல் புஜல் யோஜனா (அடல் ஜல்) திட்டமானது, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறையில் உள்ளது.

- ஹரியானா, குஜராத், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய ஏழு மாநிலங்களில் உள்ள 80 மாவட்டங்களில் 222 நிர்வாகத் தொகுதிகள் அல்லது தாலுகாக்களில் உள்ள நீர்ப் பற்றாக்குறை உள்ள 8,774 கிராமப் பஞ்சாயத்துகளை இது உள்ளடக்கியது.
- இந்தத் திட்டம் ஆனது ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்பட உள்ளது.

## UDAN 5.5

- பிராந்திய விமானப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதற்காக என்று மத்திய அரசானது அதன் மிக முதன்மையான UDAN (உடே தேஷ் கா ஆம் நாக்ரிக்) திட்டத்தின் அடுத்த கட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- UDAN 5.5 ஆனது தொலைதூரப் பகுதிகள், மலைப்பாங்கான பகுதிகள் மற்றும் தீவுப் பகுதிகளில் தொலைதூரப் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்த முயல்கிறது.
- இந்தத் திட்டத்தின் சமீபத்தியக் கட்டத்தில், கடல் சார் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் 20க்கும் குறைவான பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட மிகவும் சிறிய விமானங்களுடன் பிரத்தியேகச் சேவை வழங்கப்படுகின்ற சில வழித்தடங்கள் உருவாக்கப் படும்.
- 5.5 என்ற சமீபத்திய கட்டமானது, நீர்நிலைகள், குளங்கள் மற்றும் அணைகள் உள்ளிட்ட சுமார் 80 நீர்நிலைகளுக்கு இடையே உள்ள கடல் சார் விமானப் போக்குவரத்து வழித் தடங்களை வரைபடமாக்குவதற்கு நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்கிறது.
- இந்தத் திட்டத்தில் சேவை வழங்கீட்டு நிறுவனங்கள் ஹெலிகாப்டர் வழித் தடங்களை வரைபடமாக்குவதற்காக என, சுமார் 400 ஹெலிகாப்டர் இறங்கு தளங்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

## Klub-S ஏவுகணை அமைப்பு

- நம்நாட்டின் நீர்மூழ்கிக் கப்பல் படைக்காக கப்பல் எதிர்ப்புச் சீர்வேக எறிகணைகளை வாங்குவதற்காக இந்தியா ரஷ்யாவுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது உள்நாட்டிலேயே மாறுபாடு செய்யப்பட்ட மாஸ்கோவின் கிலோ ரக நீர்மூழ்கிக் கப்பல் வகையான இந்தியக் கடற்படையின் சிந்துகோஷ் ரகமான டீசல் எரிபொருளில் இயங்கும் மின்சார நீர்மூழ்கிக் கப்பல்களில் பொருத்தப்படும்.
- Klub-S ரக எறிகணை என்பது ரஷ்யாவின் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படக் கூடிய 3M-54 காலிபர் ரக கப்பல் எதிர்ப்பு எறிகணைகளின் ஏற்றுமதிக்கான வடிவமாகும்.
- ஒவ்வொரு எறிகணையும் சுமார் 10 முதல் 15 மீட்டர் (32 முதல் 49 அடி) உயரத்தில் கடற் படை மற்றும் நிலத்தில் உள்ள இலக்குகளுக்கு எதிராக மிக அதிகபட்சமாக 300 கிலோ மீட்டர் (186 மைல்) தூரம் வரையில் இயங்கும் திறன் கொண்டவை என்பதால் இது நீண்ட தூர வரம்புடைய துல்லியத் தாக்குதல் திறன்களைக் கொண்டுள்ளது.

## புதிய வருமான வரி மசோதா 2025

- 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தில் உள்ள பொருள் விளங்காத சொற்களைக் குறைத்து அவற்றை நன்கு புரிந்து கொள்வதை எளிதாக்கும் வகையில் நிதியமைச்சர் புதிய வருமான வரி மசோதாவினைத் தாக்கல் செய்துள்ளார்.

- புதிய வரி முறை ஆனது மக்கள் பின்பற்றவும் செயல்படுத்தவும் மிகவும் எளிதான வகையிலான 'S.I.M.P.L.E' என சுருக்கி கூறப்படும் ஐந்து முக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இந்த ஐந்து கொள்கைகளும் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன: "நெறிப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மற்றும் மொழி, ஒருங்கிணைந்த மற்றும் சுருக்கமான, குறைக்கப்பட்ட வழக்காடல் முறை, நடைமுறை சார்ந்தது மற்றும் வெளிப்படையானது, கற்றல் மற்றும் மாற்றியமைத்தல், மற்றும் செயல் திறம் மிக்க வரி சீர்திருத்தங்கள்".
- இதற்கு முந்தைய வருமான வரிச் சட்டத்தில் உள்ள 47 அத்தியாயங்களில் பாதிக்கும் குறைவான 23 அத்தியாயங்களே இந்த மசோதாவில் உள்ளன.
- சட்டத்தில் உள்ளதை விட இரண்டு அதிகமாக இதில் 16 அட்டவணைகள் உள்ளன.
- இந்த மசோதா ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் தொடங்கி 12 மாத காலமாக வரையறுக்கப் பட்டுள்ள "வரி ஆண்டு" என்ற கருத்தை அறிமுகப்படுத்துகிறது.
- இணைய சங்கேதப் பணம் போன்ற மெய்நிகர் எண்ணிமச் சொத்துக்கள் இனிமேல் மதிப்பீட்டாளரின் மூலதன சொத்தாகக் கணக்கிடப்படும் சொத்தின் வரையறையில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்தப் புதிய சட்டம் ஆனது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.

## திருத்தப்பட்ட MIS வழிகாட்டுதல்கள்

- சந்தைக் குறுக்கீட்டுத் திட்டத்திற்கான (MIS) பல்வேறு வழிகாட்டுதல்களை வேளாண் அமைச்சகம் திருத்தியமைத்துள்ளது.
- இது பயிர்களின் கொள்முதல் வரம்பினை சுமார் 20 சதவீதத்திலிருந்து 25% அளவாக உயர்த்துகிறது.
- தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பல்வேறு விரைவில் அழுகக்கூடிய வேளாண்/தோட்டக்கலைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு இந்த MIS திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- இந்தப் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) பொருந்தாது.
- முந்தைய வழக்கமான ஆண்டை விட தற்போதைய சந்தை விலையில் குறைந்தபட்சம் 10% குறைப்பு இருக்கும்போது மட்டுமே MIS செயல்படுத்தப்படும்.

## புதிய 15 அம்ச திட்டம் 2025

- சிறுபான்மையினரின் நலனுக்கான பிரதமரின் புதிய 15 அம்ச திட்டங்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன.
- இந்தத் திட்டம் ஆனது, மத்திய அரசு அறிவித்த ஆறு சிறுபான்மைச் சமூகங்களின் நலிவடைந்த மற்றும் பலவீனமான பிரிவினர் பல்வேறு திட்டங்களைப் பெறுவதற்கான சம வாய்ப்புகளைப் பெறுவதை உறுதி செய்யும் நோக்கில், இத்திட்டத்தில் பங்கேற்கும் அமைச்சகங்கள்/துறைகளின் பல்வேறு திட்டங்கள்/முயற்சிகளை உள்ளடக்கியது.
- இந்த திட்டம் பின்வரும் பரந்த நோக்கங்களைக் கொண்டுள்ளது:
    - கல்விக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல்;
    - தற்போதுள்ள மற்றும் புதியத் திட்டங்கள் மூலம் பொருளாதார நடவடிக்கைகள்

மற்றும் வேலைவாய்ப்பில் சிறுபான்மையினருக்குச் சமமான பங்கை உறுதி செய்தல், சுயதொழிலுக்கான மேம்படுத்தப் பட்ட கடன் ஆதரவு மற்றும் மாநில மற்றும் மத்திய அரசு வேலைகளில் ஆட்சேர்ப்பு;

- உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு மிகவும் ஒரு பொருத்தமானப் பங்கை உறுதி செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கை சூழலை மேம்படுத்துதல்; மற்றும்
- சமூக ஒற்றுமையின்மை மற்றும் வன்முறையைத் தடுத்தல் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துதல்.

## அமெரிக்கா-இந்தியா COMPACT முன்னெடுப்பு

- வாஷிங்டனில் நடைபெற்ற சந்திப்பின் போது அமெரிக்கா-இந்தியா ஆகிய நாடுகள் இந்திய-அமெரிக்க இடையிலான மிகவும் விரிவான மற்றும் உலகளாவிய உத்தி சார் கூட்டாண்மையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன.
- இரு நாடுகளும் '21 ஆம் நூற்றாண்டிற்கான அமெரிக்க-இந்திய COMPACT (இராணுவக் கூட்டாண்மைக்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல், துரிதப்படுத்தப்பட்ட வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம்)' என்ற புதிய முன்னெடுப்பினைத் தொடங்கின.
- இது "ஒத்துழைப்பின் முக்கியத் தூண்களில் மிகவும் மாறுதல் மிக்க மாற்றத்தினை முன்னேற்றிச் செல்லுதல்" நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமெரிக்க-இந்திய முக்கியப் பாதுகாப்பு கூட்டாண்மைக்கான இந்தப் புதிய 10 ஆண்டு கட்டமைப்பில் கையெழுத்திட இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளன.
- திட்டம் 500 ஆனது, 2030 ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு வர்த்தகத்தினை 500 பில்லியன் டாலராக இரட்டிப்பாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, குறைகடத்திகள் மற்றும் விண்வெளி ஆகிய சில துறைகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பதற்காக என்று அவை "அமெரிக்கா-இந்தியா TRUST" முன்னெடுப்பினைத் தொடங்கின.
- அமெரிக்காவினை மீண்டும் பெருஞ்சிறப்பு உடையதாக்குதல் (MAGA) என்ற அமெரிக்க நாட்டின் தொலைநோக்குத் திட்டமும், இந்தியாவினை மீண்டும் மிகப் பெருஞ்சிறப்பு உடையதாக்குதல் (MIGA) என்ற இந்தியாவின் ஒரு பெரும் கருத்தாக்கமும் இணைந்து ஒரு "மாபெரும் கூட்டாண்மையாக" கருதப்படுகிறது.

## இந்திய எரிவாயுச் சந்தை அறிக்கை – 2030 ஆம் ஆண்டிற்கான கண்ணோட்ட அறிக்கை

- இந்திய எரிவாயுச் சந்தை அறிக்கை: 2030 ஆம் ஆண்டிற்கான கண்ணோட்ட அறிக்கை என்பது சர்வதேச எரிசக்தி முகமையினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் இயற்கை எரிவாயு நுகர்வு ஆனது ஆண்டுதோறும் சுமார் 60 சதவீதம் அதிகரித்து சுமார் 103 பில்லியன் கன மீட்டர் (bcm) ஆக உயரும் என்றும், எரிவாயு இறக்குமதியானது 2030 ஆம் ஆண்டிற்குள் இரட்டிப்பாகும் என்றும் கணிக்கப் பட்டு உள்ளது.
- இந்தியாவின் இயற்கை எரிவாயு தேவையானது 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- எரிவாயு இடமாற்றக் குழாய் வலையமைப்பு ஆனது 40 சதவீதம் விரிவடைந்துள்ளது.

- இந்தியாவிற்கான திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) இறக்குமதி ஆனது 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 10 சதவீதம் அதிகரித்துள்ளது.
- உள்நாட்டு உற்பத்தியானது, 2023 ஆம் ஆண்டில் நாட்டின் தேவையில் 50 சதவீதத்தினை பூர்த்தி செய்யும் அளவில் இருந்தது என்ற நிலையில் மேலும் இது 2030 ஆம் ஆண்டில் படிப்படியாக 38 பில்லியன் கன மீட்டருக்கும் குறைவாக வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## நான்கு கட்ட போதைப்பொருள் ஒருங்கிணைப்பு மையம் (NCORD) செயல்முறை

- சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகப் பிரச்சினையைத் தீர்க்கவும், உள்ளூர் காவல் துறை மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு முயற்சிகளுக்கு இடையேயான பெரும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
- நான்கு கட்ட போதைப்பொருள் ஒருங்கிணைப்பு மையம் (NCORD) என்ற செயல்முறை ஆனது நிறுவப்படும்.
- போதைப்பொருள் சட்ட அமலாக்கம் தொடர்பான தகவல்களுக்காக வேண்டி ஒரு மிக முழுமையான NCORD இணைய தளமானது உருவாக்கப்பட்டுள்ளது.
- முக்கியமான மற்றும் குறிப்பிடத்தக்க பறிமுதல்களின் விசாரணையை மிகவும் நன்கு கண்காணிப்பதற்காக, போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் (NCB) தலைமை இயக்குநர் தலைமையில் ஒரு கூட்டு ஒருங்கிணைப்புக் குழு (JCC) அமைக்கப்பட்டு உள்ளது.
- ஒவ்வொரு மாநிலம் / ஒன்றியப் பிரதேசத்திலும் ஒரு கூடுதல் தலைமை இயக்குநர் / தலைமை ஆய்வாளர் நிலையிலான காவல்துறை அதிகாரி தலைமையில் ஒரு மிகப் பிரத்தியேக போதைப்பொருள் எதிர்ப்பு பணிக்குழு (ANTF) நிறுவப்பட்டுள்ளது.
- போதைப்பொருள் சார்ந்த தீவிரவாத வழக்குகளை விசாரிப்பதற்காக என்று 2020 ஆம் ஆண்டில் 1985 ஆம் ஆண்டு NDPS சட்டத்தின் கீழ் தேசியப் புலனாய்வு நிறுவனத்திற்கு அரசாங்கம் அதிகாரம் அளித்துள்ளது.
- 1933 என்ற 24x7 சேவை வழங்கும் கட்டணமில்லாத தேசிய போதைப்பொருள் தடுப்பு உதவி எண்ணுடன் "மடக்-பதர்த் நிஷேத் அசூசனா கேந்திரா" (MANAS) எனப்படும் தேசிய போதைப் பொருள் விலக்க அழைப்பு மையம் ஆனது உருவாக்கப்பட்டுள்ளது.
- முதன்மை ஆலோசனை மற்றும் உடனடி உதவியை வழங்குவதற்காக என்று போதைப் பொருள் ஒழிப்பிற்கான கட்டணமில்லாத உதவி எண் 14446 ஆனது அரசாங்கத்தால் பேணப்பட்டு வருகிறது.
- இந்தியாவானது மிகவும் பாதிக்கப்படக்கூடிய 272 மாவட்டங்களில் நாஷா முக்த் பாரத் அபியான் (NMBA) வசதியினை அறிமுகப்படுத்தி, பின்னர் அதனை நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் அதனை விரிவுபடுத்தியது.

## நிலக்கரி வாயுவாக்க ஊக்கத் தொகை திட்டம்

- நிதி சார் ஊக்கத் தொகை திட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை நிலக்கரி அமைச்சகம் அறிவித்துள்ளது.
    - ஜிண்டால் ஸ்டீல் அண்ட் பவர் லிமிடெட்
    - நியூ எரா கிளீன்டெக் சொல்யூஷன் பிரைவேட் லிமிடெட்
    - கிரேட்டா எனர்ஜி லிமிடெட்

- நிலக்கரி வாயுவாக்கத்தினை நன்கு விரைவுபடுத்துதல், கார்பன் வெளியேற்றத்தை வெகுவாகக் குறைத்தல், எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் நிலையான மேம்பாட்டினை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக வேண்டி 8,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் ஆனது தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசுப் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றை நிலக்கரி வாயுவாக்கத் திட்டங்களை மேற்கொள்ள ஊக்குவிக்கிறது.

## குலுக்கல் பரிசுச் சீட்டு வரிவிதிப்பு ஆணையத்தின் விதிகள்

- குலுக்கல் பரிசுச் சீட்டுகளின் விற்பனை மீது வரி விதிக்க வேண்டி மாநில அரசுகளுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்றும் மத்திய அரசுக்கு அல்ல என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியலில் உள்ள 62வது உட்சேர்ப்பின் படி, குலுக்கல் பரிசுச் சீட்டு ஆனது "பந்தயம் மற்றும் சூதாட்டம்" என்ற வரையறையின் கீழ் வருகின்றன.
- இவற்றின் மீது வரி விதிக்க மாநிலச் சட்டமன்றங்களுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்பதை தெளிவுபடுத்துகிறது.
- மத்திய அரசு ஆனது 2010, 2012, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிதிச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்து குலுக்கல் பரிசுச் சீட்டு தொடர்பான சில நடவடிக்கைகளுக்கு சேவை வரி விதிக்க முயன்றது.
- குலுக்கல் பரிசுச் சீட்டுகளின் விநியோகம், ஊக்குவிப்பு, சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகியவற்றை வரி விதிக்கக் கூடிய "சேவை" என்று மத்திய அரசு வாதிட்டது.

## உயர் மட்ட நீதித்துறையின் நியமனங்களில் இடஒதுக்கீடு

- திமுக மாநிலங்களவை உறுப்பினர் P. வில்சன் ஒரு தனிநபர் மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளதையடுத்து உயர் மட்ட நீதித்துறையின் நியமனங்களில் இடஒதுக்கீடு குறித்த விவாதத்தினை மீண்டும் எழுப்பியுள்ளது.
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத்தில் SC/ST மற்றும் OBC பிரிவினருக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று அந்த மசோதா கோருகிறது.
- உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அல்லது அங்கு எந்தவொரு நீதிபதியையும் நியமிக்கும் போது, அந்தந்த மாநில அரசுகளுடன் இந்திய அரசு கலந்தாலோசிக்கப் பட வேண்டும் என்றும் அது கோரியது.
- மானியங்களுக்கான கோரிக்கை குறித்த 84வது அறிக்கையில், பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை ஆனது மொத்தமுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையில் 50% ஆக இருக்க வேண்டும் என்று குழு பரிந்துரைத்திருந்தது.
- அரசியலமைப்பின் 124 மற்றும் 217வது சரத்துகளில் திருத்தம் செய்வதற்கான எந்தத் திட்டமும் இல்லை என்று சட்ட அமைச்சகம் அப்போது கூறியிருந்தது.

## 50 எதிர்கால நுட்பம் சார் திறன் மையங்கள்

- தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) ஆனது 50 புதிய எதிர்கால நுட்பம் சார் திறன் மையங்கள் (FSCs) மற்றும் 10 NSDC சர்வதேச பயிற்றுக் கழகங்களை அமைக்க உள்ளது என்று அறிவித்துள்ளது.
- வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறை தேவைகளுடன் கல்வியை நன்கு இணைப்பதன் மூலம் கோட்பாடு சார் அறிவுக்கும் நடைமுறை திறன்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதுவரை சுமார் 33 உலகளாவிய நிறுவனங்கள் இதில் இணைந்துள்ளன என்பதோடு மேலும் உயர் கல்வி நிறுவனங்களில் (HEIs) 21 எதிர்கால நுட்பம் சார் திறன் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## புதிய தலைமை தேர்தல் ஆணையர் - ஞானேஷ் குமார்

- தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அடுத்த தலைமை தேர்தல் ஆணையராக என்று நியமிக்கப் பட்டுள்ளார்.
- தேர்தல் ஆணையத்தின் (EC) உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான அதன் புதிய சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட முதல் தலைமை தேர்தல் ஆணையர் இவரேயாவார்.
- விவேக் ஜோஷி என்பவர் தேர்தல் ஆணையராக பதவி ஏற்றார்.
- 2023 ஆம் ஆண்டு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், பணி நிபந்தனைகள் மற்றும் பதவிக் காலம்) சட்டம் ஆனது, தலைமை தேர்தல் ஆணையரை நியமிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.
- பிரதமர் தலைமையிலான மூன்று பேர் கொண்ட தேர்வுக் குழுவின் ஒரு கூட்டத்தின் பரிந்துரையை அடுத்து அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தத் தேர்வுக் குழுவில் இந்தியப் பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உள்ளனர்.
- ஒரு தலைமை தேர்தல் ஆணையர் அல்லது தேர்தல் ஆணையர் ஆறு ஆண்டுகள் வரை அல்லது 65 வயது வரை பணியாற்றலாம்.

## வாட்டர்வொர்த் திட்டம்

- மெட்டா என்ற நிறுவனமானது, வாட்டர்வொர்த் எனப்படுகின்ற அதன் இணையவழி இணைப்பிற்கான கடலடிக் கம்பிவடத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சுமார் 50,000 கி.மீ நீளத்தில் அமைக்கப்பட உள்ள இந்த கம்பி வடமானது, அமெரிக்கா, இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா மற்றும் பிற இடங்களுக்கு மேம்பட்ட இணைய இணைப்பை வழங்கும்.
- இது உலகின் மிக நீளமான கடலடிக் கம்பிவடத் திட்டமாக மாற உள்ளது.
- கடலடிக் கம்பிவட இணைப்புகள் ஆனது, உலகப் பெருங்கடல்களின் வழியாக கண்டம் விட்டு கண்டம் இணைக்கப்படும் இணைய இணைப்பில் சுமார் 95 சதவீததத்திற்கும் அதிகமான பங்கைக் கொண்டிருக்கும்.

## ஆகாஷ் ஏறிகணை ஏற்றுமதி

- ஆகாஷ் குறுகிய தூர தாக்குதல் வரம்புடைய நிலம் விட்டு வானில் உள்ள இலக்குகளை நோக்கி ஏவக்கூடிய ஏறிகணைகளை விற்பனை செய்வதற்காக என்று பிலிப்பைன்ஸ் நாட்டுடன் 200 மில்லியன் டாலர் மதிப்பிலான பாதுகாப்பு ஏற்றுமதி ஒப்பந்தத்தினை இந்தியா பெற வாய்ப்புள்ளது.
- இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டால், இது மணிலாவுடனான இந்தியாவின் மிகவும் பெரிய இரண்டாவது ஆயுத ஒப்பந்தத்தைக் குறிக்கும்.
- இந்த ஒப்பந்தமானது, 2023 ஆம் ஆண்டில் ஆர்மேனியாவிற்கு இந்தியா மேற்கொள்ளும் சுமார் 230 மில்லியன் டாலர் மதிப்பிலான ஆகாஷ் ஏறிகணை ஏற்றுமதியை விட பெரிய ஒப்பந்தமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், பிலிப்பைன்ஸுக்கு இந்தியா மேற்கொண்ட பிரம்மோஸ் சுமார் 375 மில்லியன் டாலர் மதிப்பிலான மீயொலி சீர்வேக ஏறிகணை மீதான ஏற்றுமதியைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் ஆனது மேற்கொள்ளப்பட்டது.
- ஆகாஷ் ஏறிகணையானது 25 கி.மீ வரையிலான தாக்குதல் வரம்பைக் கொண்டுள்ளது மற்றும் வான்வழி அச்சுறுத்தல்களைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## EPFO புதுப்பிப்புகள் 2025

- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் (EPFO) ஆனது, 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள அதன் சேவைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் பல முக்கியப் புதுப்பிப்புகளை அறிவித்துள்ளது.
- இதன் மூலம் ஓய்வூதியம் பெறுவோர், விரைவில் கூடுதல் சரிபார்ப்பிற்கான அவசியம் இன்றி இந்தியாவில் உள்ள எந்த வங்கியிலிருந்தும் தங்கள் ஓய்வூதியப் பணத்தைப் பெற முடியும்.
- EPFO உறுப்பினர்கள், விரைவில் தங்கள் வருங்கால வைப்பு நிதியை தானியங்கி பண இயந்திரங்கள் மூலம் தங்கள் பணத்தைப் பெற முடியும்.
- EPFO அதன் உறுப்பினர்களுக்கு பரிவர்த்தனை வர்த்தக நிதியங்களுக்கு (ETF) அப்பால், நேரடியாகப் பங்குகளில் முதலீடு செய்வதற்கான விருப்பத் தேர்வினை வழங்குவது குறித்து பரிசீலித்து வருகிறது.
- சமீபத்திய தரவுகள் ஆனது, 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 1.34 மில்லியன் எண்ணிக்கையிலான புதிய EPFO உறுப்பினர்கள் என்ற ஒரு எண்ணிக்கையுடன் கடந்த ஐந்து மாதங்களில் மிகக் குறைந்த பதிவுடன், முறை சார் வேலைவாய்ப்பு உருவாக்கம் குறைந்துள்ளதாக எடுத்துக் காட்டுகிறது.

## குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதா 2025

- மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது, 2025 ஆம் ஆண்டு குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதாவினை அறிமுகப்படுத்த உள்ளது.
- இது வெளிநாட்டினரின் குடியேற்றம் மற்றும் பெயர்வினைக் கையாளும் தற்போதைய நான்கு சட்டங்களையும் ரத்து செய்யும்.
- முன்மொழியப்பட்ட இந்தச் சட்டம் ஆனது தற்போதுள்ள சட்டங்களுக்கு மாற்றாக முன் வைக்கப்படும்.

- கடவுச் சீட்டு (இந்தியாவிற்குள் நுழைதல்) சட்டம், 1920
- வெளிநாட்டினரின் பதிவுச் சட்டம், 1939
- வெளிநாட்டினர் சட்டம், 1946; மற்றும்
- குடியேற்றம் (போக்குவரத்து நிறுவனங்களின் பொறுப்பு) சட்டம், 2000.

❖ முன்மொழியப்பட்ட இந்தச் சட்டமானது, இந்தியாவிற்குள் வெளிநாட்டினரின் நுழைவு, வெளியேற்றம் மற்றும் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த அல்லது ஒழுங்குபடுத்தச் செய்வதற்கு மத்திய அரசிற்கு அதிகாரத்தை வழங்குகிறது.

❖ இந்தப் புதிய மசோதாவில் அங்கீகரிக்கப்படாத உள்நுழைவிற்கு என்று சுமார் 5 லட்சம் ரூபாய் வரை அபராதமும், போலி கடவுச் சீட்டிற்கு 10 லட்சம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படுகிறது.

❖ இதில் வெளிநாட்டுக் குடிமக்களை சேர்க்கைக்கு அனுமதிக்கும் பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள் மற்றும் பிற மருத்துவ நிறுவனங்களின் பங்கு, கடவுச் சீட்டு மற்றும் நுழைவு இசைவுச் சீட்டுகள் தொடர்பான விவகாரங்களுடன் குறிப்பிடப் படும்.

## 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் பணக்கார அரசியல் கட்சி

❖ 2023-24 ஆம் நிதியாண்டில் 43,00 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டிய பணக்கார கட்சியாக பா.ஜ.க உருவெடுத்தது.

❖ அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி 1200 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டி உள்ளது.

❖ CPI(M) கட்சியின் மொத்த வருமானம் ஆனது 167.636 கோடி ரூபாயாக இருந்த நிலையில், அக்கட்சி அதன் வருவாயில் 75.93% ஆன 127.283 கோடி ரூபாயை செலவிட்டது.

❖ 6 தேசியக் கட்சிகள் (BJP, INC, CPI(M), AAP, BSP மற்றும் NPEP) இந்தியா முழுவதிலுமிருந்து 5820.912 கோடி ரூபாய் மொத்த வருவாய் ஈட்டியதாக அறிவித்துள்ளன.

## 'பீமா டிரினிட்டி' முன்னெடுப்பு

❖ இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது 9 வது பீமா மாந்தன் நிகழ்ச்சியினை நடத்தியது.

❖ இந்த நிகழ்வின் போது, IRDAI தனது மிகவும் இலட்சிய நோக்கமிக்க 'பீமா டிரினிட்டி' திட்டத்திற்கான செயல்திட்டத்தை வெளியிட்டது.

❖ பீமா டிரினிட்டி ஆனது, பீமா சுகம், பீமா விஸ்தார் மற்றும் பீமா வஹாக் ஆகியவற்றை உள்ளடக்கியது.

❖ பீமா சுகம் ஆனது காப்பீட்டு நிறுவனங்களில் உள்ள அனைத்து வகையான காப்பீட்டுத் திட்டங்களின் விற்பனை, சேவை மற்றும் உரிமைக் கோரல்களுக்கான திறந்த நிலைச் சந்தையாகும்.

❖ பீமா விஸ்தார் என்பது மரணம், தனிநபர் விபத்து, சொத்து மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவற்றுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் படுவதற்கான காப்பீடுகளை உள்ளடக்கிய முதல் கலப்புக் காப்பீடு திட்டம் ஆகும்.

❖ பீமா வஹாக் என்பது பெண்களை மையமாகக் கொண்ட உள்ளூர்மயமாக்கப்பட்ட காப்பீட்டுத் துறை விற்பனைப் பிரிவாகும்.

## இந்தியா - IALA அமைப்பின் துணைத் தலைமைப் பொறுப்பு

- கடல்சார் போக்குவரத்திற்கான பல்வேறு உதவிகளுக்கான ஒரு சர்வதேச அமைப்பின் (IALA) துணைத் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்தியா 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் IALA சபையின் கூட்டத்தையும், 2027 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் IALA மாநாடு மற்றும் பொதுச் சபையையும் மும்பையில் நடத்தவுள்ளது.
- IALA ஆனது 1957 ஆம் ஆண்டில் ஓர் அரசு சாரா அமைப்பாக (NGO) நிறுவப்பட்டது.
- இது கடல்சார் துறையில் அவற்றின் அனுபவங்களையும், சாதனைகளையும் மிக நன்கு பரிமாறிக் கொள்ளவும், ஒப்பிட்டுப் பார்க்கவும் வாய்ப்பளிக்கிறது.

## சிறப்பு NCD நோய்க் கண்டறிதலுக்கான தீவிரப்படுத்தப்பட்ட பிரச்சாரம்

- மத்திய அரசானது, சிறப்பு NCD நோய்க் கண்டறிதலுக்கான ஒரு தீவிரப்படுத்தப்பட்டப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரம் ஆனது, ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் (AAMs) மற்றும் நாடு முழுவதும் உள்ள பல்வேறு சுகாதார மையங்களில் செயல்படுத்தப்படும்.
- இந்த இலட்சிய நோக்க மிக்க முன்னெடுப்பானது, 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து நபர்களிலும் NCD நோய்கள் உள்ளதா என்பதைக் கண்டறியச் செய்வதற்காக முழு பரிசோதனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் வாய், மார்பகம் மற்றும் கர்ப்பப் பை வாய் ஆகிய மூன்று பொதுவான புற்றுநோய்களும் அடங்கும்.

## கனிமங்களின் மறுவகைப்பாடு

- சுரங்கத் துறை அமைச்சகம் ஆனது, பாரைட்டுகள் (பாரிய கந்தகை), ஃபெல்ட்ஸ்பார் (களிக்கல்), மைக்கா மற்றும் குவார்ட்ஸ் ஆகியவற்றை "முக்கியக் கனிமங்கள்" ஆக வகைப்படுத்தியுள்ளது.
- தற்போதுள்ள கனிம அகழ்வு ஒப்பந்தங்களை மேலும் 50 ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் இந்த நடவடிக்கையானது, தற்போது முக்கியமான அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பயன்பாடுகளுக்காக அவற்றை வெட்டி எடுக்க அனுமதிக்கிறது.
- இந்தச் சுரங்கங்கள் மிகப் படிப்படியாக இந்தியச் சுரங்க வாரியத்தில் பதிவு செய்யப் பட்டு முக்கியக் கனிமங்களாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- குவார்ட்ஸ், ஃபெல்ட்ஸ்பார் மற்றும் மைக்கா ஆகியவை பெக்மாடைட் பாறைகளில் காணப் படுகின்றன.
- அவை பெரைல், லித்தியம், நியோபியம், டான்டலம், மாலிப்டினம், டின், டைட்டானியம் மற்றும் டங்ஸ்டன் போன்ற பல முக்கிய கனிமங்களின் முக்கிய ஆதாரமாகும்.
- தற்போது வரை, குவார்ட்ஸ், ஃபெல்ட்ஸ்பார் மற்றும் மைக்கா சுரங்கங்களுக்கான ஏலக் குத்தகைகள் சிறு கனிம ஏலக் குத்தகைகளாக வழங்கப்படுகின்றன.

## கைதிகள் விடுதலை குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- கைதிகள் தாங்கள் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட விண்ணப்பிக்காவிட்டாலும், அவர்களை முன்கூட்டியே விடுதலை செய்வது குறித்து அரசு பரிசீலிக்குமாறு உச்ச நீதிமன்றம் மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது.
- சில வகையான குற்றவாளிகளுக்கான விதிவிலக்குகளுடன், BNSS மற்றும் CrPC- 1973 ஆகியவற்றின் கீழ் அந்த தண்டனை முடிவதற்குள் சில கைதிகளை விடுவிக்க வேண்டி மாநிலங்களுக்கு அதிகாரம் உண்டு.
- ஒரு கடும் குற்றத்தில் குற்றவாளி எனக் கண்டறியப்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலத்தைக் குறைக்கும் அதிகாரத்தினைத் தண்டனைக் குறைப்பு மீதான அதிகாரம் குறிக்கிறது.
- BNSS சட்டத்தின் 473வது பிரிவு (மற்றும் CrPC சட்டத்தின் பிரிவு 432) மாநில அரசுகளுக்கு "எந்த நேரத்திலும்" தண்டனையை விடுவிக்கும் அதிகாரத்தினை வழங்குகிறது.
- மாநில அரசுகளால் வழங்கப்பட்ட விடுதலையை ரத்து செய்து, பிடியாணை எதுவும் இல்லாமல் குற்றவாளியை மீண்டும் கைது செய்யலாம்.
- அரசியலமைப்பின் 72வது மற்றும் 161வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் ஆகியோரின் தண்டனைக் குறைப்பு அதிகாரத்திலிருந்து இது வேறுபட்டது.

## லோக்பால் உத்தரவு மீதான உச்ச நீதிமன்றத் தடை

- உச்ச நீதிமன்றம் ஆனது, உயர் நீதிமன்றங்களில் பணி புரியும் நீதிபதிகள் மீதான புகார்களை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட லோக்பால் அமைப்பின் உத்தரவிற்குத் தடை விதித்துள்ளது.
- லோக்பால் அமைப்பிற்கு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி A.M.கான்வில்கர் தலைமை தாங்கினார்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகள், 'அரசு ஊழியர்கள்' என்றும், அவர்கள் 2013 ஆம் ஆண்டின் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தாச் சட்டத்தின் வரம்பிற்கு உட்பட்டவர்கள் என்றும் லோக்பால் தீர்ப்பளித்தது.
- இந்தியத் தலைமை நீதிபதி உட்பட உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் விவகாரங்கள் மீது தனக்கு அதிகாரம் இல்லை என்று லோக்பால் அறிவித்திருந்தது.
- உச்ச நீதிமன்றம் என்பது பாராளுமன்ற சட்டத்தினால் நிறுவப்பட்ட அல்லது மத்திய அரசால் நிதியளிக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் "அமைப்பு" அல்ல.
- எனவே, 1988 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி, இந்தியத் தலைமை நீதிபதி உள்ளிட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 'அரசு ஊழியர்கள்' என்றாலும், லோக்பாலின் ஒரு அதிகார வரம்பிற்கு அவர்கள் உட்படமாட்டார்கள்.
- 2013 ஆம் ஆண்டு சட்டம் ஆனது, பாராளுமன்றத்தின் சட்டத்தினால் நிறுவப்பட்ட நீதி மன்ற நீதிபதிகளுக்கு வெளிப்படையான விதிவிலக்குகளை அளிக்கவில்லை.

## இந்தியாவில் தற்கொலைகள் வீழ்ச்சி 2021

- இந்தியாவில் 1990 முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் தற்கொலை காரணமான உயிர் இழப்புகளின் விகிதத்தில் 30 சதவீதத்திற்கும் சரிவு பதிவாகியுள்ளது.

- இந்தியாவில் தற்கொலை காரணமான உயிரிழப்பு விகிதம் ஆனது, 1990 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்களுக்கு 18.9 ஆக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டில் இது ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 13.1 லட்சமாகவும், 2021 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 13 ஆகவும் இருந்தது.
- இந்தியாவில் 1990 முதல் 2021 ஆம் ஆண்டு வரையில், தற்கொலை காரணமான உயிர் இழப்பு விகிதம் 31.5 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 1990 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு சுமார் 16.8 ஆக இருந்த பெண்களின் தற்கொலை உயிரிழப்பு விகிதம் ஆனது, 2021 ஆம் ஆண்டில் சுமார் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 10.3 ஆக குறைந்துள்ளது.

## மாபெரும் மருந்து வழங்கீட்டு (MDA) பிரச்சாரம்

- மத்திய அரசானது, யானைக்கால் நோய் - நிணநீர் ஃபைலேரியாசிஸ் (LF) பாதிப்பினை ஒழிப்பதற்கான வருடாந்திர அளவிலான நாடு தழுவிய மாபெரும் மருந்து வழங்கீட்டு (MDA) பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த பிரச்சாரமானது, 13 மாநிலங்களில் உள்ள சுமார் 111 மாவட்டங்களில் ஒவ்வொரு வீட்டிற்கும் யானைக்கால் நோய்த் தடுப்பு மருந்துகளை வழங்குகிறது.
- MDA பிரச்சாரம் என்பது பாதிப்புக் காரணி மூலம் பரவும் நோய்களின் தேசியக் கட்டுப்பாட்டு மையத்தினால் (NCVBDC) மேற்கொள்ளப்படும் இந்தியாவின் யானைக் கால் நோய் ஒழிப்பு உத்தியின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- நிணநீர் ஃபைலேரியாசிஸ் (ஹாட்டிபான்) என்பது பொதுவாக யானைக்கால் நோய் என அழைக்கப்படுகிறது.
- இது ஃபிலாரியோடிடியா குடும்பத்தின் நூற்புழுக்கள் (உருளைப்புழுக்கள்) என வகைப் படுத்தப் பட்ட ஒட்டுண்ணிகளால் ஏற்படுகிறது.
- இது 20 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 345 மாவட்டங்களில் பதிவான ஒரு முன்னுரிமை கவனிப்பு அளிக்கப்படும் நோயாகும் என்பதோடு மொத்த நோய்ப் பாதிப்புகளில் 90 சதவீதப் பாதிப்புகள் ஆனது எட்டு மாநிலங்களில் பதிவாகி உள்ளது.

## எதிர்கால சூரியசக்தி உற்பத்தித் திட்டங்களுக்கான ஆற்றல் சேமிப்பு

- அரசாங்கம் அனைத்து எதிர்கால சூரிய சக்தி உற்பத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்த ஏலங்களும் ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினைச் செயல்படுத்தும் அனைத்து நிறுவனங்களும் (REIA) மற்றும் மாநில தொலைதொடர்பு சேவை வழங்கீட்டு நிறுவனங்களும் எதிர்கால சூரிய சக்தி உற்பத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்த ஏலங்களில், நிறுவப்பட்ட சூரிய மின் நிலைய திறனில் 10 சதவீதத்திற்கு சமமான குறைந்தபட்சம் இரண்டு மணிநேர எரிசக்தி உற்பத்தி அமைப்புகளிலேயே அமைந்த எரிசக்தி சேமிப்பு அமைப்புகளை (ESS) நிறுவது குறித்த திட்டத்தினை இணைக்குமாறு அறிவுறுத்தப் படுகின்றன.
- இது மிகக் குறுகிய கால சிக்கல்களைத் தணித்து, அதிகபட்ச ஆற்றல் தேவை உள்ள காலங்களில் முக்கிய ஆதரவை வழங்கும்.

## TRAI ஆணையத்தின் புதியக் கட்டமைப்பு

- இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது, 2023 ஆம் ஆண்டு தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழ், தன் ஒளிபரப்புச் சேவைகளை வழங்கச் செய்வதற்கான சேவை அங்கீகாரங்களுக்கான கட்டமைப்பில் அதன் பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.
- இது 1885 ஆம் ஆண்டு இந்தியத் தந்திச் சட்டத்தினால் நிர்வகிக்கப்படும் முந்தைய ஒழுங்குமுறைக் கட்டமைப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் ஒரு மிக குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது.
- ஒரே இடத்தில் அமைந்த பல்வேறு ஒளிபரப்புச் சேவை வழங்கீட்டு முறையினை முடிவுக்குக் கொண்டுவருதல், DTH கட்டணங்களை சுழியாகக் குறைத்தல் மற்றும் உள் கட்டமைப்புப் பகிர்வை ஊக்குவித்தல் போன்ற புதிய பரிந்துரைகள் இதில் அடங்கும்.

## திறன் குறியீடு 2025

- இந்தியாவின் பட்டதாரிகளின் திறன் குறியீடு 2025 என்ற புதிய அறிக்கையை மெர்சர் - மெட்ல் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இதன்படி இந்தியப் பட்டதாரிகளில் 42.6 சதவீதம் பேர் மட்டுமே வேலைவாய்ப்பிற்குத் தகுதியானவர்கள் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இது 2023 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 44.3 சதவீதத்திலிருந்துப் பதிவாகியுள்ள ஒரு சரிவைக் குறிக்கிறது.
- நிறுவனங்களின் திறன்சார் தேவைகளுக்கும் பட்டதாரிகளிடம் உள்ள திறன்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிப்பதே மிகப்பெரிய சவாலாக உள்ளது.
- முதல் நிலைக் கல்லூரிகளில் இருந்து பட்டம் பெற்றவர்கள் 48.4 சதவீதத்தில் அதிக வேலை வாய்ப்புத் திறனைக் கொண்டுள்ளனர். அதைத் தொடர்ந்து இரண்டாம் நிலை (46.1 சதவீதம்) கல்லூரிகளும் மற்றும் மூன்றாம் நிலைக் கல்லூரிகளும் (43.4 சதவீதம்) உள்ளன.
- மாநிலங்களில், டெல்லி (53.4 சதவீதம்), இமாச்சலப் பிரதேசம் (51.1 சதவீதம்) மற்றும் பஞ்சாப் (51.1 சதவீதம்) ஆகியவை அதிக வேலைவாய்ப்புத் தகுதியுள்ள பட்டதாரிகளை உருவாக்குகின்றன.
- இந்தியப் பட்டதாரிகளில் சுமார் 46 சதவீதம் பேர் தற்போது செயற்கை நுண்ணறிவு & இயந்திரக் கற்றல் சார்ந்த பணிகளில் பணி புரியத் தகுதியானவர்கள் என்பதோடு இது 2023 ஆம் ஆண்டு முதல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிக்கிறது.

## MoRTH வருடாந்திர அறிக்கை 2024

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம் (MoRTH) ஆனது சமீபத்தில் 2024-25 வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் 30,000 கோடி ரூபாய்க்கு மேலான இழப்புடன், நாடு முழுவதும் உள்ள மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் (SRTUs) நிதி நிலைமை ஆனது மோசமடைந்து வருகிறது.
- இது மூன்று ஆண்டுகளில் பதிவான இழப்புகளில் சுமார் 68 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.

- 2021 ஆம் நிதியாண்டில், 58 SRTU நிறுவனங்களில் பதிவான மொத்த இழப்பு 29,000 கோடி ரூபாய்க்கு மேலாகும்.
- நகர்ப்புறச் செயல்பாடுகளுக்காக என்று மட்டும் அறிமுகப்படுத்தப்பட்ட மொத்தம் 97,165 நகரங்களுக்கு இடையேயான பேருந்துகள் மற்றும் சுமார் 48,325 பேருந்துகளில், முறையே சுமார் 356 மற்றும் 10,517 பேருந்துகள் மட்டுமே "மிகவும் முழுமையாக சக்கர நாற்காலி பயன்படுத்தக் கூடிய வகையிலானதாக" மாற்றப்பட்டுள்ளன.
- நகரங்களுக்கு இடையேயான மற்றும் நகர்ப்புறச் செயல்பாடுகளுக்கான அணுகக் கூடிய வகையிலான பேருந்துகளின் எண்ணிக்கை (சக்கர நாற்காலி அணுகல் எதுவும் இல்லாமல்) முறையே 24,860 மற்றும் 15,308 ஆகும்

## இந்தியாவில் முதல் முறையாக Bima-ABSA

- பஜாஜ் அலையன்ஸ் லைஃப் நிறுவனம் ஆனது, BIMA-செயலி ஆதரவுடன் கூடிய தடுத்து வைக்கப்பட்ட தொகை (Bima-ABSA) என்ற ஒரு வசதியுடன் செயல்படும் முதல் காப்பீட்டு நிறுவனமாக மாறியுள்ளது.
- காப்பீட்டுக் கொள்கைதாரர்களின் வசதியை மேம்படுத்துவதற்கும் அவர்கள் தவணை செலுத்துதல்களில் வெளிப்படைத் தன்மையை மிகவும் நன்கு உறுதி செய்வதற்கும் இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் திட்டத்துடன் இந்த முன்னெடுப்பு ஒத்துப் போகிறது.
- இந்த Bima-ABSA ஆனது, கொள்கைதாரர்கள் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தின் ஒற்றைமுறை கட்டாய (OTM) முறைமையினைத் தேர்வு செய்ய உதவுகிறது, என்பதோடு இது அவர்களின் வங்கிக் கணக்கில் 2 லட்சம் ரூபாய் வரை ஒரு குறிப்பிட்ட தொகையைத் தடுத்து வைக்கும் முறைமையினை அங்கீகரிக்க அனுமதிக்கிறது.
- ஒரு காப்பீட்டு நிறுவனமானது, இந்தக் காப்பீட்டு ஒப்பந்தச் செயல்முறையை நிறைவு செய்து அக்காப்பீடு முன்மொழிவை ஏற்றுக் கொண்டவுடன் மட்டுமே தொகையானது பற்று வைக்கப் படும்.
- விண்ணப்பம் 14 நாட்களுக்குள் செயல்படுத்தப் படாவிட்டால் அல்லது நிராகரிக்கப் பட்டால், தடுத்து வைக்கப்பட்ட தொகையானது தானாகவே அவ்வாடிக்கையாளரின் கணக்கில் திரும்ப வைப்பு வைக்கப்படும்.
- காப்பீடு கொள்கைப் பதிவு செய்பவர்களின் நிதி அணுகக்கூடியதாக இருப்பதையும், காப்பீடு கொள்கை வழங்கல் உறுதிப்படுத்தப்படும் வரையில் தொடர்ந்து வட்டியைப் பெறுவதையும் இது உறுதி செய்கிறது.
- அனைத்துக் காப்பீட்டு நிறுவனங்களும் மார்ச் 01 ஆம் தேதிக்குள் Bima-ASBA வசதியை வழங்க வேண்டும்.

# சர்வதேசச் செய்திகள்

## பாஷ்மினா திருவிழா 2025

- முதலாவது மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச பாஷ்மினா விழா மற்றும் அதன் கண்காட்சியானது, நேபாள பாஷ்மினா தொழில்துறைச் சங்கத்தினால் நேபாளத்தின் காத்மாண்டு நகரில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இயற்கையாகவே உதிர்க்கும் பருவத்தில் சியாங்ரா வகை ஆடுகளின் உட்தோலில் இருந்து பாஷ்மினா கைகளால் சீவி அகற்றப் படுகிறது.
- நேபாள ரக பாஷ்மினா ஆனது, அதன் உயர் தரத்தை வலியுறுத்துவதற்காக "சியாங்ரா பாஷ்மினா" என்று சந்தைப்படுத்தப்படுகிறது.

## புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் – ECOWAS

- மாலி, நைஜர் மற்றும் புர்கினா பாசோ ஆகியன மேற்கு ஆப்பிரிக்காவின் ஒரு முக்கிய அரசியல் மற்றும் வர்த்தகக் குழுவான மேற்கு ஆப்பிரிக்காவின் கூட்டணியிலிருந்து (ECOWAS) அதிகாரப் பூர்வமாக வெளியேறியுள்ளன.
- இந்த மூன்று நாடுகளும் ECOWAS கூட்டணியின் ஸ்தாபன உறுப்பினர்கள் ஆகும்.
- புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் ஆகியவை தற்போது தங்கள் சொந்தக் கூட்டமைப்பான சஹேல் நாடுகளின் கூட்டணியை (AES) உருவாக்கியுள்ளன.
- இந்த மூன்று நாடுகளும் பிரான்சுடனான தங்கள் பாதுகாப்பு உறவுகளை பெருமளவில் துண்டித்து, உதவிக்காக ரஷ்யா, ஈரான் மற்றும் துருக்கி ஆகியவற்றினை நாடியுள்ளன.

## மெக்சிகோ, கனடா மற்றும் சீனா மீதான அமெரிக்க வரிகள்

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், கனடா மற்றும் மெக்சிகோ ஆகியவற்றிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு சுமார் 25 சதவீதமும் மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 10 சதவீதமும் வரிகள் விதித்துள்ளார்.
- 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்தப் பொருட்களின் மதிப்பு சுமார் 900 பில்லியன் டாலர் ஆகும்.
- மெக்சிகோ மற்றும் கனடா ஆகியவை அமெரிக்க நாட்டின் வேளாண் இறக்குமதியில் குறிப்பிடத் தக்கப் பங்கைக் கொண்டுள்ளன.
- கனடா நாட்டுப் பொருட்களின் ஏற்றுமதியில் சுமார் 80% ஆனது, அமெரிக்காவிற்குச் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதோடு இதன் மதிப்பு சுமார் 410 பில்லியன் டாலர் ஆகும்.
- அமெரிக்காவிற்கான மெக்சிகோவின் ஏற்றுமதியானது உலக நாடுகளுக்கு விற்கப் பட்ட பொருட்களில் 84% ஆகும்.
- மெக்சிகோ ஆனது, 2023 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் காய்கறி இறக்குமதியில் 63 சதவீதமும் அமெரிக்க நாட்டின் பழங்கள் மற்றும் உலர் பழங்களின் இறக்குமதியில் சுமார் பாதிப் பங்கினையும் கொண்டுள்ளது.

## USAID அமைப்பின் நிலை 2025

- அதிபர் டொனால்ட் டிரம்பின் நிர்வாகம் ஆனது, வெளிநாடுகளில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக என்று முக்கியப் பொறுப்புகளைக் கொண்டுள்ள அமெரிக்க நிறுவனத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்துள்ளது.
- அப்போதைய அதிபர் ஜான் F. கென்னடி அவர்கள் பனிப் போரின் போது USAID எனப் படும் அமெரிக்க சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவினார்.
- காங்கிரஸ் ஆனது வெளிநாட்டு உதவிச் சட்டத்தை நிறைவேற்றியது என்ற நிலையில் கென்னடி 1961 ஆம் ஆண்டில் அந்த USAID அமைப்பினை ஒரு தன்னாட்சி நிறுவனமாக நிறுவினார்.
- சில நாடுகளுக்கு அமெரிக்காவினால் வழங்கப் படும் உதவி இன்னமும் ரஷ்ய மற்றும் சீன நாடுகளின் செல்வாக்கை எதிர்க்கின்றது என்று USAID அமைப்பின் ஆதரவாளர்கள் வாதிட்டனர்.
- பதவியேற்ற முதல் நாளில், டிரம்ப் வெளிநாட்டு உதவியை 90 நாட்களுக்கு நிறுத்தி உள்ளார்.

## இலங்கையில் பணவாட்டம்

- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கையின் நுகர்வோர் விலைகள் 4.0 சதவீதம் குறைந்தன.
- இது 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பிறகு பதிவான மிகவும் அதிகப்படியான பணவாட்ட விகிதமாகும்.
- கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி, ஜனவரி மாத பணவாட்டம் ஆனது தொடர்ந்து பதிவான ஐந்தாவது மாத பணவாட்டமாகும்.
- பணவாட்டம் என்பது சரக்குகள் மற்றும் சேவைகளின் பொதுவான விலை மட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான சரிவு ஆகும்.
- இது வழங்கீடானது தேவையை மீறும் போது நிகழ்கிறது, இதனால் நுகர்வோருக்கானா செலவினம் குறைகிறது.
- அந்த நாட்டின் பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் 69.8 சதவீதமாக உயர்ந்தது.
- 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) 2.9 பில்லியன் டாலர் பிணைக் கடனைப் பெற்றது.

## ஃபென்டானைல் நெருக்கடி

- கனடாவில், மில்லியன் கணக்கான அளவில் தவணைகள் வழங்குவதற்கு உதவும் 8 கிலோ அளவிலான ஃபென்டானைலை வைத்திருந்ததாக இரண்டு நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.
- சூரத்தில் உள்ள இரண்டு நிறுவனங்கள் ஃபென்டானைல் மூல வேதிப்பொருட்களை வைட்டமின் C என்று தவறாக பெயரிட்டு, அனுப்பியதாக அமெரிக்க அரசு வழக்குத் தொடர்ந்தது.

- ஃபென்டானைல் என்பது போதைப்பொருள் அடிமைப் பழக்கத்தினை ஏற்படுத்தும் ஒரு செயற்கை ஓபியாய்டு ஆகும்.
- இது ஹெராயினை விட தோராயமாக 50 மடங்கு மிக அதிக சக்தி வாய்ந்ததாகவும், மார்பினை விட 100 மடங்கு அதிக சக்தி வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது.
- 2019 ஆம் ஆண்டில், சீனாவானது ஃபெண்டானைலை கட்டுப்படுத்தப்பட்ட போதைப் பொருளாக வகைப்படுத்தியது பின்னர் அந்தப் பட்டியலில் சில இரசாயனங்களையும் சேர்த்தது.

## பனாமா மற்றும் BRI முன்னெடுப்பு

- சீனாவின் மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பில் (BRI) இருந்து விலகுவதாக பனாமா அதிபர் அறிவித்துள்ளார்.
- இந்த மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பானது 2013 ஆம் ஆண்டில் சீனாவால் தொடங்கப் பட்டது.
- முன்னாள் அதிபர் ஜுவான் கார்லோஸ் வரேலாவின் ஆட்சியின் போது 2017 ஆம் ஆண்டில் பனாமா இந்த முன்னெடுப்பில் இணைந்தது.
- பனாமா கால்வாய் எனபது, 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவினால் கட்டப்பட்டு, 1999 ஆம் ஆண்டில் பனாமாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ஐக்கிய நாடுகள் உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்கா விலகல்

- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுடனான அமெரிக்காவின் ஈடுபாட்டைத் துண்டித்து, ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீன அகதிகளுக்கான முகமையான UNRWA மீதான நிதித் தடையை நீட்டிப்பதற்கு அமெரிக்க அதிபர் திட்டமிட்டுள்ளார்.
- அமெரிக்காவின் அவ்வறிவிப்பையடுத்து இஸ்ரேலும் அமெரிக்காவுடன் இணைவதாக அறிவித்துள்ளது
- டிரம்ப் ஏற்கனவே உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் 2015 பாரிசு பருவநிலை உடன்படிக்கை ஆகியவற்றிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொண்டுள்ளார்.
- டிரம்ப் ஆட்சியானது, முன்னதாக 2018 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்காவினை விலகச் செய்தது.

## கினியா – உறக்க நோய்

- கினியா நாடானது உறக்க நோய் என்று வெகுவாக அழைக்கப்படும் மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸின் (HAT) கேம்பியன் ஒட்டுண்ணி வழியான பாதிப்பினை ஒரு பொது சுகாதாரப் பிரச்சினை என்ற நிலையில் இருந்து வெற்றிகரமாக நீக்கியுள்ளது.
- கினியாவில் நிலவி வந்த மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸ் பாதிப்பின் இந்த ஒரே வடிவம் ஆனது, அந்த நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்ட முதல் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோயாக மாறியுள்ளது.
- HAT என்பது பாதிக்கப்பட்ட குருதி உறிஞ்சும் ஈக்கள் கடித்தால் பரவும் ஓர் ஒட்டுண்ணி நோயாகும்.
- கினியாவின் இந்த சாதனையானது, டோகோ, பெனின், கோட் டி'ஐவோயர், உகாண்டா, ஈக்குவடோரியல் கினியா, கானா மற்றும் சாட் ஆகிய ஏழு நாடுகளில் இந்த பாதிப்பு ஒழிப்பிற்கான போக்கின் ஒரு பகுதியாக இடம் பெற்றுள்ளது.

## காங்கோ ஜனநாயகக் குடியரசில் M23 கிளர்ச்சியாளர்கள் - கோமா

- ருவாண்டா நாட்டுப் படைப்பிரிவுகளின் ஆதரவுடன் M23 கிளர்ச்சியாளர்கள் காங்கோ ஜனநாயகக் குடியரசின் கோமா நகரத்திற்குள் நுழைந்து அந்நகரத்தைக் கைப்பற்றி உள்ளனர்.
- சுமார் 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் பிராந்திய மையமான கோமா, ருவாண்டாவுடனான காங்கோவின் எல்லையில் அமைந்துள்ளது.
- தற்போதைய ருவாண்டா நாட்டு அதிபர் பால் ககாமே தலைமையிலான டுட்சி இனக் கிளர்ச்சியாளர்கள் அப்படுகொலைக்கு முற்றுப்புள்ளி வைத்தனர் என்பதோடு மேலும் பல ஹுட்டு குற்றவாளிகள் எல்லையைத் தாண்டி காங்கோவிற்குள் தப்பி ஓடினர்.
- காங்கோ நாட்டின் டுட்சி பிரிவினர் தலைமையிலான கிளர்ச்சிக் குழுவானது, 2012 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது என்பதோடு இது முந்தைய டுட்சிகள் தலைமையிலான கிளர்ச்சிகளின் வாரிசு அமைப்பாகும்.

## பாரிசு செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு 2025

- மூன்றாவது செயற்கை நுண்ணறிவு நடவடிக்கை மீதான ஒரு உச்சி மாநாடானது பிரான்சின் பாரிசு நகரில் நடைபெற்றது.
- மேலும் இந்தியப் பிரதமர் இந்த பாரிசு உச்சி மாநாட்டில் அதன் இணைத் தலைவராகப் பங்கேற்றார்.
- பொதுச் சேவை செயற்கை நுண்ணறிவு, எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகள், புதுமை மற்றும் கலாச்சாரம், செயற்கை நுண்ணறிவு மீதான நம்பிக்கை மற்றும் செயற்கை நுண்ணறிவின் உலகளாவிய ஆளுகை உள்ளிட்ட ஐந்து முக்கியக் கருத்துருவில் இந்த உச்சி மாநாடு கவனம் செலுத்தியது.
- 2023 ஆம் ஆண்டில் ஐக்கியப் பேரரசில் நடைபெற்ற இதற்கு இரண்டு முந்தைய மாநாடுகளுடன், செயற்கை நுண்ணறிவு ஆளுகை தொடர்பான உலகளாவிய பேச்சு வார்த்தைகளின் தொடரில் இது சமீபத்திய மாநாடாகும்.

## நெட்சாரிம் வழித்தடம்

- இஸ்ரேலிய நாட்டு ராணுவம் ஆனது காசாவின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளைப் பிரிக்கும் நெட்சாரிம் வழித்தடம் என்று அழைக்கப்படும் பகுதியிலிருந்து தனது நாட்டு ஆயுதப் படைகளை விலக்கியுள்ளது.
- இந்த ஒரு நடவடிக்கையானது, இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனப் போராளிகள் குழுவிற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட போர் நிறுத்தம் ஆனது, தற்போது அங்கு நடைபெற்று வரும் போரில் ஓர் இடைநிறுத்தத்தைக் குறித்தது.
- இது மிகவும் குறிப்பாக இப்போரினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதிகளில் உள்ள பாலஸ்தீனியர்களைத் தங்கள் பகுதிகளுக்குத் திரும்ப வழிவகுத்தது.

## ஆழ்கடலில் அமைந்த முதல் ஆய்வு நிலையம்

- சீனாவானது கடல்சார் ஆய்வுகளை பரிமாற்றி அமைக்கக் கூடிய வகையில் ஆழ்கடல் ஆராய்ச்சிக் கட்டமைப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- "ஆழ்கடல் வாயு வெளியேற்ற விரிசல்" என்ற சூழல் அமைப்பு ஆராய்ச்சி மையமானது, உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த தென் சீனக் கடலின் மேற்பரப்பிலிருந்து சுமார் 2000 மீட்டர்கள் (6560 அடி) கீழே நிறுவப்பட உள்ளது.
- இந்த மையமானது மிகவும் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப் பட்ட ஒரு அறிவியல் சார்ந்த கடலடி மையங்களில் ஒன்றாக இருக்கும்.
- அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகியவற்றிகு அடுத்தபடியாக ஆழ்கடல் ஆய்வு நிலையத்தினை உருவாக்கி இயக்கும் உலகின் மூன்றாவது நாடாக சீனா மாற உள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் செயல்பாட்டில் இருந்து விலகிய ஒரு அமெரிக்க ஆழ்கடல் ஆய்வு நிலையம் ஆன NR - 1 ஆனது அணுசக்தியில் இயங்கிய நீர்மூழ்கிக் கப்பல் ஆகும்.
- அணு உலையின் மூலம் இயக்கப்படும் சோவியத் ஒன்றியத்தின் ஆய்வு நீர் மூழ்கிக் கப்பலான AS-12 லோஷாரிக் 2000 மீட்டர் ஆழம் வரை எட்டியது.
- இது 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு பெருந்தீ விபத்தினால் பாதிக்கப்பட்டதையடுத்து, ரஷ்யாவினால் கை விடப்பட்டது.

## அமெரிக்காவின் டோபின் வரி

- டிரம்பின் நிர்வாகம் ஆனது, மூலதன வரவுகள் மீது பண மதிப்பு சார்ந்த குறுகிய கால வர்த்தகம் மீதான வரி / டோபின் வரி விதிப்பது குறித்து பரிசீலித்து வருகிறது என்ற ஒரு நிலையில் இது உலகளாவிய நிதிச் சந்தைகளை சீர்குலைக்கும் நடவடிக்கையாகும்.
- டோபின் வரி என்பது குறுகிய கால ஊக வர்த்தகத்தினை தடுப்பதை ஒரு நோக்கமாகக் கொண்ட அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகள் மீதான வரியாகும்.
- இது நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணரான ஜேம்ஸ் டோபின் என்பவரால் 1972 ஆம் ஆண்டில் பிரெட்டன் வுட்ஸ் உடன்படிக்கை கட்டமைப்பின் வீழ்ச்சிக்குப் பிறகு, பணச் சந்தையின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ற நடவடிக்கையினை மேற்கொள்ளும் வகையில் முன்மொழியப்பட்டது.
- இந்தியாவின் பங்குகளின் பரிவர்த்தனை மீதான வரி (2004) ஆனது, பங்குச் சந்தை பரி வர்த்தனைகள் மீதான டோபின் வரியாகச் செயல்படுகிறது.

## சூடான் வைரஸ் பெருந்தொற்று

- சமீபத்தில் சூடான் வைரஸ் நோய் பரவி வருவதாக உகாண்டா நாட்டு அரசும், உலக சுகாதார அமைப்பும் உறுதி செய்துள்ளன.
- இது 41% முதல் 100% வரையிலான நோய் பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகளைப் பதிவு செய்ததுடன் ஒரு கடுமையான மற்றும் மரணத்தை ஏற்படுத்தக் கூடிய நோயாக இது உள்ளது.
- உகாண்டாவில் இதற்கு முன்னதாக ஏழு பெருந்தொற்றுகள் ஏற்பட்டுள்ளது என்ற ஒரு நிலையில் மிகச் சமீபத்தில் பதிவான பெருந்தொற்று 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்டது ஆகும்.
- உகாண்டாவிலும் ஏற்பட்ட 2022 ஆம் ஆண்டு சூடான் வைரஸ் பெருந்தொற்று ஆனது 164 நோய்ப் பாதிப்புகள் மற்றும் சுமார் 77 உயிரிழப்புகளை (உயிரிழப்பு விகிதம் 47%) ஏற்படுத்தியது.
- சூடான் மற்றும் எபோலா வைரஸ்கள் ஆகிய இந்த இரண்டும், ஆர்த்தோபொலா என்ற வைரஸ் குடும்பத்தினைச் சேர்ந்தவை என்றாலும், வெவ்வேறு புரதங்கள் மற்றும் சில மரபணு கூறுகளை அவை கொண்டுள்ளன.

## TRUST முன்னெடுப்பு

- TRUST என்ற முன்னெடுப்பின் கீழ், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆனது தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்கான தடைகளை வெகுவாக நன்கு குறைத்து, ஏற்றுமதி கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்து மற்றும் உயர் தொழில்நுட்ப வர்த்தகத்தினை நன்கு மேம்படுத்த உள்ளன.
- TRUST என்பது 'Transforming Relationship Utilizing Strategic Technology - உத்தி சார் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இரு நாடுகளின் தொடர்பை மாற்றியமைத்தல்' என்பதைக் குறிக்கிறது.
- இந்த இருதரப்பு முன்னெடுப்பானது, லித்தியம் மற்றும் அருமண் தனிமங்கள் (REEs) போன்ற முக்கிய கனிமங்களை மீட்டெடுப்பதிலும் அதனைச் செயலாக்குவதிலும் சில கூட்டுறவுகளை மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மருந்துகளுக்கான வலுவான விநியோகச் சங்கிலிகளை உருவாக்குவதற்கான TRUST முன்னெடுப்புகளின் முயற்சியானது, பெரும்பாலும் லித்தியம், மெக்னீசியம், துத்த நாகம் மற்றும் செலினியம் போன்ற முக்கிய கனிமங்களைச் சார்ந்துள்ளச் செயல் பாட்டு மருந்துப் பொருட்களில் (APIs) கவனம் செலுத்த இயலும்.
- இந்தியா 2023 ஆம் ஆண்டில் கனிமப் பாதுகாப்பு கூட்டாண்மையில் (MSP) இணைந்தது.
- MSP என்பது இந்த முக்கியக் கனிம விநியோகச் சங்கிலிகளில் பொது மற்றும் தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட சுமார் 14 நாடுகளின் அமெரிக்கா தலைமையிலான கூட்டாண்மையாகும்.

## கடலடிச் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வுக்கான ASIA

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இனைந்து தன்னாட்சி அமைப்புகள் தொழில்துறைக் கூட்டணி (ASIA) என்ற புதிய முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளன.
- இது இந்திய-பசிபிக் பகுதியில் தொழில்துறை கூட்டாண்மைகள் மற்றும் உற்பத்தியை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வணிக அடிப்படையில் UDA தொழில்நுட்பங்களுக்கு அமெரிக்கா சில கூட்டு உற்பத்தி மற்றும் கூட்டு மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்கியுள்ளது.
- இந்த மிகவும் முக்கியத் தகவல்களைப் பாதுகாக்கும் தொழில்நுட்பங்களில் அமெரிக்க பாதுகாப்புத் துறையுடன் இணைந்துப் பணியாற்ற முன்வந்த முதல் நாடு இந்தியா ஆகும்.
- கடலடிச் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு (UDA) என்பது பெருங்கடல்கள் மற்றும் கடல்கள் போன்ற நீர்நிலைகளின் மேற்பரப்பிற்கு அடியில் நிகழும் செயல்பாடுகளைக் கண்காணிக்க, கண்டறிய மற்றும் மதிப்பிடுவதற்கான ஒரு நாடு அல்லது அமைப்பின் திறனைக் குறிக்கிறது.

## காங்கோ ஜனநாயகக் குடியரசில் குரங்கம்மை Clade Ib பெருந்தொற்று

- காங்கோ ஜனநாயகக் குடியரசில் (DRC) குரங்கம்மை clade Ib மாற்றுருவின் விரைவான பரவல் ஆனது முக்கியமாக (83.4%) பாலியல் தொழிலாளர்களுடன் தொடர்புடையது.
- இந்த ஆய்வுக் காலத்தில் மிக ஒட்டு மொத்தமாக, தொழில்முறை ரீதியிலான பாலியல் தொழிலாளர்களில் 200/751 (26.6%) பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- 2023 ஆம் ஆண்டிலிருந்து, அண்டை நாடுகளுக்கும் பரவியுள்ளப் பெருந்தொற்றில் DRC நாட்டில் சுமார் 50,000க்கும் மேற்பட்ட சந்தேகத்திற்கிடமான mpox பாதிப்புகள் பதிவாகி உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில், சுற்றி உள்ள 17 சுகாதாரப் பகுதிகளிலிருந்து 670 குரங்கம்மை பாதிக்கப்பட்ட நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.
- இந்தப் பாதிப்புகளில், 52.4% பெண்கள், மற்றும் 47.6% ஆண்கள் ஆவர்.

## முனிச் பாதுகாப்பு மாநாடு 2025

- 61வது முனிச் பாதுகாப்பு மாநாடு (MSC) ஆனது ஜெர்மனியின் முனிச் நகரில் நடத்தப் பட்டது.
- பனிப்போரின் உச்ச கட்ட காலத்தின் போது, ஜெர்மன் நாட்டின் ஒரு அதிகாரி மற்றும் வெளியீட்டாளர் எவால்ட்-ஹெய்ன்ரிச் வான் க்ளீஸ்ட் என்பவரால் MSC நிறுவப்பட்டது.
- 1963 ஆம் ஆண்டில் தொடங்கி, இந்த மாநாடு ஆனது அதன் ஆரம்பத்தில் இராணுவப் பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்தியது என்பதோடு இதில் சில மேற்கத்திய நாடுகளும் அவற்றின் உயர் அதிகாரிகளுமே பிரதானமாக கலந்து கொண்டனர்.
- 1991 ஆம் ஆண்டில் பனிப்போர் முடிவடைந்த பிறகு, இந்த மாநாடு ஆனது அதன் செயல் பாட்டு நிரலைப் பாதுகாப்பு மற்றும் காவலுக்கு அப்பால் பருவநிலை மாற்றம் மற்றும் புலம்பெயர்வு போன்ற பிரச்சினைகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தியது.
- இது ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட கிழக்கு நாடுகளின் தலைவர்களையும் இதில் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கத் தொடங்கியது.
- ஆனால் 2023 ஆம் ஆண்டில், 20 ஆண்டுகளில் மிக முதல் முறையாக, ரஷ்யா இந்த நிகழ்வுக்கு அழைக்கப்படவில்லை.

## ICD-11 தொடரின் 2025 ஆம் ஆண்டு பதிப்பு - WHO

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, 2025 ஆம் ஆண்டிற்கான, சர்வதேச நோய்கள் வகைப்பாட்டுத் தொடரின் (ICD-11) 11வது திருத்தப் பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இது நோய்கள், காயங்கள் மற்றும் உயிரிழப்பிற்கான காரணங்களைக் கண்டறிதல், அறிக்கையிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றில் உலகெங்கிலும் உள்ள சில சுகாதார வல்லுநர்கள் பயன்படுத்தும் மொழியைத் தரநிலையாக்கும் கருவியாகும்.
- ஆயுர்வேதத்தின் பாரம்பரிய மருத்துவ நிலைமைகள் மற்றும் சித்த மருத்துவம் மற்றும் யுனானி உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகள் போன்ற அதனுடன் தொடர்புடைய பாரம்பரிய மருத்துவ முறைகளை உள்ளடக்கிய ஒரு மிகவும் புதிய தொகுதியானது பாரம்பரிய மருத்துவ முறைகளின் முறை சார் கண்காணிப்பை செயல்படுத்துகிறது.
- இந்தியாவில், மத்திய சுகாதார நுண்ணறிவு வாரியம் (CBHI) ஆனது, ICD தொடர்பான நடவடிக்கைகளுக்கான உலக சுகாதார அமைப்பின் ஒத்துழைப்பு மையமாக செயல் படுகின்ற சுகாதார அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு நிறுவனம் ஆகும்.

## திட்டம் 300 ஆப்பிரிக்கா எரிசக்தி உச்சிமாநாடு

- திட்டம் 300 ஆப்பிரிக்கா எரிசக்தி உச்சி மாநாடு ஆனது தான்சானியாவின் டார் எஸ் சலாம் நகரில் நடைபெற்றது.
- இது தான்சானியா ஐக்கியக் குடியரசு, ஆப்பிரிக்க ஒன்றியம், ஆப்பிரிக்க மேம்பாட்டு வங்கிக் குழுமம் மற்றும் உலக வங்கிக் குழுமம் ஆகியவற்றால் நடத்தப்பட்டது.
- இது திட்டம் 300 என அழைக்கப்படுகின்ற 2030 ஆம் ஆண்டில் 12 ஆப்பிரிக்க நாடுகளில் வசிக்கும் 300 மில்லியன் மக்களுக்கு மின்சார வசதியை வழங்குவதற்கான இலக்கைப் பகுப்பாய்வு செய்தது.

## உப்பு பற்றிய WHO வழிகாட்டுதல்கள்

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது உப்புகளுக்கு மாற்றாக குறைந்த சோடியம் உள்ளடக்கம் கொண்ட மாற்றுகளைப் பயன்படுத்தப் பரிந்துரைக்கும் வழிகாட்டுதல் மீதான தொகுப்பை வெளியிட்டுள்ளது.
- WHO ஆனது ஒரு நாளைக்கு சுமார் 2 கிராமுக்கு குறைவாக என்ற அளவில் சோடியம் உட்கொள்வதின் அளவினை குறைக்குமாறு பரிந்துரைத்துள்ளது.
- தற்போது, வழக்கமானச் சமையலுக்கு பயன்படுத்தும் தூள் உப்பு/உப்பிற்குப் பதிலாக (சோடியம் குளோரைடு) பொட்டாசியம் குளோரைடு (KCl) போன்ற குறைந்த சோடியம் உள்ளடக்கம் கொண்ட உப்பு மாற்றுகளைப் பயன்படுத்த பரிந்துரை செய்துள்ளது.

## OPEC+ குழுவில் பிரேசில்

- பிரேசில் நாட்டின் அரசாங்கம் ஆனது முக்கிய எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் ஒரு குழுவான OPEC+ குழுவில் இணைவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- OPEC+ குழுவானது, 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த அமைப்பில் இணையுமாறு அதிகாரப்பூர்வமாக பிரேசில் அரசிற்கு அழைப்பு விடுத்தது.
- பிரேசில் நாடு ஆனது ஒரு நாளைக்கு சுமார் 4.32 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தி செய்வதுடன், தென் அமெரிக்காவின் மிகப்பெரிய எண்ணெயினை உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது.

## உலகப் பொருளாதார மன்றம் 2025

- 2025 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) வருடாந்திரக் கூட்டம் ஆனது சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நாரில் நிறைவடைந்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தக் கூட்டத்தின் கருத்துரு, "Collaboration for the Intelligent Age".
- செயற்கை நுண்ணறிவு மற்றும் பசுமைத் தொழில்நுட்பம் ஆனது வாய்ப்புகள் மற்றும் சவால்கள் ஆகிய இரண்டையும் முன் வைக்கின்றன என்பதை 2025 ஆம் ஆண்டு WEF எடுத்துரைத்தது.
- தெலுங்கானா 1.79 லட்சம் கோடி முதலீட்டைப் பெற்றுள்ளது.
- ஜெர்மனி நாட்டுப் பொறியாளரும் பொருளாதார நிபுணருமான கிளாஸ் ஸ்வாப், 1971 ஆம் ஆண்டில் ஐரோப்பிய மேலாண்மை மன்றத்தினை நிறுவினார் என்ற நிலையில் இது 1987 ஆம் ஆண்டில் WEF மன்றமாக மாற்றப்பட்டது.

- 2015 ஆம் ஆண்டில், WEF அமைப்பானது அதிகாரப்பூர்வமாக ஒரு சர்வதேச அமைப்பாக அங்கீகரிக்கப் பட்டதோடு இதன் தலைமையகமானது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.
- WEF வருடாந்திரக் கூட்டம் ஆனது சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்றது.

## வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் உமிழ்வுக் குறைப்பு

- உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) மாறுதல் மிக்க தொழில்துறைக் குழுக்கள் என்ற முன்னெடுப்பில் 13 புதிய தொழில்துறைக் குழுக்கள் இணைந்துள்ளன.
- இது 16 நாடுகள் மற்றும் ஐந்து கண்டங்களில் இருந்து இந்த மன்றத்தில் பங்கேற்கும் மொத்தக் குழுக்களின் எண்ணிக்கையை 33 ஆக உயர்த்தியது.
- ஆஸ்திரேலியா, பிரேசில், கொலம்பியா, இந்தியா, நெதர்லாந்து, சவுதி அரேபிய நாடு, சுவீடன், தாய்லாந்து மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகளைச் சேர்ந்தக் குழுக்கள் புதிதாக இந்த மன்றத்தில் இணைந்துள்ளன.
- இந்த மிகப்பெரும் முன்னெடுப்பானது பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை நன்கு ஊக்குவிக்கும் அதே வேளையில், பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு 2021 ஆம் ஆண்டு COP26 மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- 33 குழுக்களும் ஒரு சேர ஆண்டிற்கு 832 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான உமிழ்வைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன.
- இது சவூதி அரேபியாவின் உமிழ்வுகளுக்குச் சமமானதாகும்.
- இந்த குழுக்கள் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 492 பில்லியன் டாலர் பங்களிப்பைக் கொண்டுள்ளன மற்றும் சுமார் 4.3 மில்லியன் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.

## சீனாவில் HKU5-CoV-2

- COVID-19 பெருந்தொற்றினை ஏற்படுத்திய வைரஸைப் போன்ற HKU5-CoV-2 என்ற ஒரு புதிதாக அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட வெளவால் கொரோனா வைரஸ் சீனாவில் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- அங்குள்ள வுஹான் நிறுவனத்தில் கொரோனா வைரஸ்கள் குறித்து மேற்கொள்ளப் பட்ட மிக விரிவான ஆராய்ச்சிக்காக இது பெரும்பாலும் "பேட்வுமன்" என்று குறிப்பிடப் படுகிறது.
- HKU5-CoV-2 என்பது மெர்பெகோவைரஸ் என்ற துணை இனத்தைச் சேர்ந்த புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வெளவால் கொரோனா வைரஸ் ஆகும்.
- மத்தியக் கிழக்கு சுவாச நோய்க்குறிக்கு (MERS) மிகவும் காரணமான வைரஸும் இதில் அடங்கும்.
- இந்த வைரசானது விலங்குகளிடமிருந்து மனிதனுக்குப் பரவுவதற்கான சாத்தியமான ஆபத்து குறித்து ஆராய்ச்சியாளர்கள் இன்னும் உறுதியாகக் கண்டறியவில்லை.

## டோன்கின் வளைகுடா அடிப்படை எல்லை வரையரை

- வியட்நாமின் வெளியுறவு அமைச்சகம் ஆனது, டோன்கின் வளைகுடாவில், சீனாவுடன் கடல் சார் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்ற அதன் அடிப்படை உரிமைக் கோரலை வரையறுக்கும் வரைபடத்தினை வெளியிட்டுள்ளது.
- இது பிராந்திய நீர்நிலைகள் மற்றும் பிரத்தியேக பொருளாதார மண்டலங்களுக்கான வரம்புகளை தீர்மானிக்க அடிப்படை எல்லைக் கோடுகள் பயன்படுத்தப்படுகின்றது.
- தென் சீனக் கடலில், சீனா, வியட்நாம் மற்றும் பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகள் சில முரண்பட்ட உரிமைகோரல்களைக் கொண்டுள்ளன.
- கடந்த ஆண்டு மார்ச் மாதம், இந்த டோன்கின் வளைகுடாவில் சீனா அதன் அடிப்படை எல்லையினை அறிவித்தது.

## FATF சந்திப்பு 2025

- ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த கைல்ஸ் தாம்சன் FATF என்ற அமைப்பின் துணைத் தலைவராக (2025-2027) நியமிக்கப்பட்டுள்ளார்.
- நேபாளம் மற்றும் லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு ஆகியவை சாம்பல் நிறப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- நேபாளம் ஆனது, சாம்பல் நிறப் பட்டியலில் சேர்க்கப்படுவது இது இரண்டாவது முறை ஆகும்.
- நேபாளம் ஆனது 2008 முதல் 2014 ஆம் ஆண்டு வரையில் FATF அமைப்பின் சாம்பல் நிறப் பட்டியலில் இருந்தது.
- இவ்விதிமுறைகளின் இணக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக பிலிப்பைன்ஸ் நாடானது சாம்பல் நிறப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.
- கென்யா நாடானது, கேமன் தீவுகள் மற்றும் செனேகலுடன் சேர்த்து, guest என்ற ஒரு முன்னெடுப்பின் கீழ் FATF முழு நிறைவுக் குழுவில் இணைந்தது.

## புதிய சர்வதேச தீவிரவாத அமைப்புகளின் வகைப்பாடு

- அமெரிக்க நாட்டின் அரசாங்கம் ஆனது, எட்டு இலத்தீன் அமெரிக்காவினைச் சேர்ந்த ஒழுங்கமைக்கப் பட்ட குற்றச் செயல் குழுக்களை சர்வதேச தீவிரவாத அமைப்புகளாக வகைப் படுத்தியுள்ளது.
- அவற்றில் மெக்சிகோவை தளமாகக் கொண்ட ஆறு குழுக்கள், வெனிசுலாவின் ட்ரென் டி அரகுவா மற்றும் மத்திய அமெரிக்காவின் MS-13 ஆகியவை அடங்கும்.
- அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, கனடாவும் 7 இலத்தீன் அமெரிக்கக் குழுக்களை தீவிரவாத நிறுவனங்களாக நியமித்துள்ளது.
- இந்த அந்தஸ்து ஆனது, அந்தக் குழுவின் சொத்துக்களைத் திறம்பட முடக்குகிறது.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் காஃபின் மீதான வகைப்பாடு

- ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆனது காஃபின் பற்றிய எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது என்ற நிலையில் அதன் புதிய இரசாயன பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் "காஃபினை உட்கொள்வது மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கும்" என்று குறிப்பிடுகிறது.

- இந்த 27 நாடுகளின் கூட்டமைப்பு ஆனது புதிய ஒழுங்குமுறையில், காஃபினை பூச்சிக் கொல்லியாகப் பயன்படுத்துவதையும் தடை செய்துள்ளது.
- காபியின் ஒரு முக்கியக் கூறு ஆனது இதயம், நீரேற்றம் மற்றும் உடல் வெப்பநிலையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று அது கூறியுள்ளது.
- இந்த எச்சரிக்கையானது, காபி நுகர்வைத் தடுக்க வாய்ப்பில்லை, ஆனால் மிகத் தீவிர கட்டுப்பாட்டு விதிமுறை ஆக அது அமலுக்கு வர உள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## முதன்மை நோக்கச் சோதனை (PPT)

- இந்தியாவின் இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்களின் (DTAAs) கீழ் முதன்மை நோக்கச் சோதனை (PPT) முறைகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதலை மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) ஆனது வெளியிட்டுள்ளது.
- இது இந்தியா-சைப்ரஸ் DTAA, இந்தியா-மொரீஷியஸ் DTAA மற்றும் இந்தியா-சிங்கப்பூர் DTAA ஆகியவற்றின் கீழ் உள்ள சில விதிகளுக்கு விலக்கு அளிக்கிறது.
- வரி ஒப்பந்தங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கிலான சர்வதேச வரி விதிகளின் ஒரு பகுதியாக PPT உள்ளது.
- வரிவிதிப்பிற்கான மூலம் மற்றும் இலாப மாற்றத்தினைத் (BEPS) தடுப்பதற்காக வரி ஒப்பந்தத்தினை அமல்படுத்துவதற்கான பலதரப்பு உடன்படிக்கையின் கீழ் இது ஒரு முக்கிய விதியாகும்.
- DTAA ஒப்பந்தங்கள் என்பது ஒரே வருமானம் மீது இரண்டு முறை வரி விதிக்கப் படுவதைத் தடுக்கும் நோக்கிலான இருதரப்பு ஒப்பந்தங்கள் ஆகும்.

## தற்காலிக அடையாள எண் – TIN

- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) ஆனது, சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதிகளில் ஒரு புதியத் திருத்தத்தினை அறிவித்துள்ளது.
- GST சட்டத்தின் கீழ் பதிவு செய்யத் தேவையில்லாத ஆனால் சில குறிப்பிட்ட விதிகளின் கீழ் பணம் செலுத்த வேண்டிய நிறுவனங்களுக்கு TIN எண்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதிகளின் கீழ், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் முறையே 40 லட்சம் ரூபாய் மற்றும் 20 லட்சம் ரூபாய் வருடாந்திர வருவாய் கொண்ட வணிகங்கள் GST தளத்தில் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும்.

## eCoO 2.0 அமைப்பு

- வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) ஆனது, நன்கு மேம்படுத்தப்பட்ட பூர்வாங்க / தோற்றச் சான்றிதழ் (eCoO) 2.0 அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஏற்றுமதியாளர்களுக்கான சான்றிதழ் செயல்முறையை மிக எளிதாக்குவதற்கும் வர்த்தக செயல்திறனை மேம்படுத்துவதற்கும் என வடிவமைக்கப்பட்ட ஒரு குறிப்பிடத் தக்க மேம்படுத்தல் அம்சம் ஆகும்.

- இந்த மேம்படுத்தப்பட்ட தளம் ஆனது, பல பயனர் அணுகல் போன்ற பயனர்களுக்கு ஏதுவான பல அம்சங்களை கொண்டுள்ளது என்பதோடு இது ஏற்றுமதியாளர்கள் ஒரு இறக்குமதியாளர் ஏற்றுமதியாளர் குறியீட்டின் (IEC) கீழ் பல பயனர்களை அங்கீகரிக்க உதவுகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல், ஒரு முன்னுரிமை சாராதப் பூர்வாங்கச் சான்றிதழ்களை மின்னணு முறையில் தாக்கல் செய்வது என்பது eCoO 2.0 தளம் வழியாக கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- பூர்வாங்கச் சான்றிதழ்கள் (CoO) என்பவை ஏற்றுமதி செய்யப்பட்டப் பொருட்களின் தோற்றுருவினை அங்கீகரிக்கிறது.

## புதிய MSME வகைப்பாடு 2025

- தற்போது அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களின் (MSME) வகைப்பாட்டிற்கான முதலீடு மற்றும் வருவாய் வரம்புகள் முறையே 2.5 மற்றும் இரண்டு மடங்கு அதிகரிக்கப்படும்.
- குறு நிறுவனமாக வகைப்படுத்தப்படுவதற்கான முதலீட்டு வரம்பு 2.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட உள்ளது.
- சிறு நிறுவனங்களுக்கான இந்த வரம்பு ஆனது 25 கோடி ரூபாயாகவும், நடுத்தர நிறுவனங்களுக்கான வரம்பு 125 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்பட உள்ளது.
- இதே போல் இந்த வகைப்பாடுகளுக்கான வருவாய் வரம்பு குறு நிறுவனங்களுக்கு 10 கோடி ரூபாயாகவும், சிறு நிறுவனங்களுக்கு 100 கோடி ரூபாயாகவும், நடுத்தர நிறுவனங்களுக்கு 500 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்பட உள்ளது.
- தற்போது, 7.5 கோடி பணியாளர்களைப் பணிக்கு அமர்த்திய, நாட்டின் உற்பத்தியில் 36 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட MSME நிறுவனங்கள் உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## இந்தியாவின் தங்க முதலீடுகள் 2024

- 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் தங்க முதலீடுகள் ஆனது 2024 ஆம் ஆண்டில் 60% அதிகரித்து, 18 பில்லியன் டாலர்களை (தோராயமாக 1.5 லட்சம் கோடி ரூபாய்) எட்டின.
- உலக தங்கச் சபையின் (WGC) அறிக்கையானது, தங்க முதலீட்டு தேவையானது 239 டன்களாக இருந்ததாகக் கூறுகிறது, மேலும் இது 2013 ஆம் ஆண்டிற்குப் பிறகு அதன் மிக உயர்ந்த அளவைக் குறிக்கிறது.
- இது 2023 ஆம் ஆண்டில் பதிவான 185 டன்களிலிருந்து 29% அதிகரிப்பாகும்.
- சுமார் 239 டன்களில், நாட்டின் தங்க முதலீடு ஆனது, இந்தப் பிரிவில் உலகளாவியத் தேவையில் 20% ஆகும் என்பதோடு இது 2024 ஆம் ஆண்டில் 1,180 டன்களாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் 945.5 டன்களாக பதிவான உலகளாவிய தேவையும் 25% அதிகரித்து உள்ளது.

## GDP மற்றும் கடன் விகிதம் - முதன்மை நிதி அளவீடு

- GDP - கடன் விகிதத்தை 2031 ஆம் ஆண்டிற்குள் சுமார் 50 சதவீதமாகக் குறைக்கும் மத்திய அரசின் ஒரு திட்டத்தினை மத்திய நிதிநிலை அறிக்கைக் குறிப்பிட்டுக் காட்டி உள்ளது.
- இது நடவடிக்கையின் முழுமை சார்ந்த இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட, மதிப்பிடக் கூடிய அளவிலான இலக்கினை நோக்கிய மாற்றத்தைக் குறிக்கிறது.
- GDP மற்றும் கடன் விகிதம் ஆனது ஒரு நாட்டின் நிதி வளத்தினைக் குறிப்பதற்கு என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிகாட்டியாகும்.
- இந்திய மத்திய அரசின் GDP மற்றும் கடன் விகிதம் ஆனது சரியான வரம்பில் உள்ளது.
- கனடா மற்றும் ஜெர்மனி நாடுகளைத் தவிர, G7 அமைப்பின் அதன் சக உறுப்பினர் நாடுகளுடன் ஒப்பிடச் செய்யும் போது, இந்தியாவின் GDP மற்றும் கடன் விகிதம் ஆனது குறிப்பிடத் தக்க அளவில் குறைவாக உள்ளது.

## இந்தியாவின் மருந்து ஏற்றுமதி 2047

- இந்தியாவின் மருந்துத் துறை ஏற்றுமதியானது 2047 ஆம் ஆண்டிற்குள் 350 பில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது தற்போதைய நிலைகளை விட 10 முதல் 15 மடங்கிலான அதிகரிப்பாகும்.
- இந்தியா தற்போது மருந்துப் பொருட்கள் ஏற்றுமதியின் மதிப்பில் 11வது இடத்தினைப் பெற்றுள்ளதுடன், 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியா மருந்து ஏற்றுமதியில் முதல் ஐந்து இடங்களில் உள்ள நாடுகளில் ஒன்றாக இடம் பெற முடியும்.
- 2023 ஆம் ஆண்டில் தோராயமாக 27 பில்லியன் டாலராக இருந்த நாட்டின் மருந்துப் பொருட்கள் ஏற்றுமதியானது, 2030 ஆம் ஆண்டில் 65 பில்லியன் டாலராக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- செயல்பாட்டு மருந்துப் பொருட்கள் (API) ஏற்றுமதிகள் ஆனது தற்போது 5 பில்லியன் டாலர் ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2047 ஆம் ஆண்டிற்குள் 80-90 பில்லியன் டாலர்களை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- தற்போது 0.8 பில்லியன் டாலர் ஆக மதிப்பிடப்பட்டுள்ள இந்திய உயிரி ஒத்த மருந்து பொருட்கள் ஏற்றுமதியானது, 2030 ஆம் ஆண்டிற்குள் ஐந்து மடங்கு அதிகரித்து 4.2 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டும் என்றும், 2047 ஆம் ஆண்டிற்குள் 30-35 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

## சர்வதேசப் பரிவர்த்தனைகளுக்கான AFA

- பன்னாட்டு "Card Not Present - நேரடி அட்டைச் சமர்ப்பிப்பு இன்றி மேற்கொள்ளப்படும்" (CNP) பரிவர்த்தனைகளுக்கான கூடுதல் அங்கீகாரக் கூறுகளை (AFA) செயல்படுத்த உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- AFA ஆனது, உள்நாட்டு எண்ணிம கட்டணச் சூழல் அமைப்பில் மோசடியைக் நன்கு குறைப்பதில் ஏற்கனவே அதன் செயல்திறனை நிரூபித்துள்ளது.
- இதுவரையில், சர்வதேசப் பரிவர்த்தனைகளுக்கு AFA கட்டாயப்படுத்தப்படவில்லை.
- தற்போது, கட்டாயப் பதிவு, மாற்றம் அல்லது நீக்கம் போன்ற நடவடிக்கைகளில் AFA அவசியம் என்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## NDS-OM இணையதளம்

- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தினால் பதிவு செய்யப்பட்ட வங்கி சாராத தரகுப் பேச்சுவார்த்தை சார்ந்த - கொள்முதல் பொருத்த (NDS-OM) தளத்தினை அணுகுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதிக்கும்.
- இந்திய ரிசர்வ் வங்கியினால் இயக்கப்படும் இந்த NDS-OM தளம் ஆனது, அரசாங்கப் பத்திரங்களில் (G-Secs) இரண்டாம் நிலை சந்தை வர்த்தகத்திற்காக என ஒரு பெயர் அறியப் படாத கொள்முதல் பொருத்த அமைப்பாகும்.

## 2030 ஆம் ஆண்டில் ஜவுளி ஏற்றுமதி

- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியா தனது ஜவுளி ஏற்றுமதியை மூன்று மடங்கு அதிகரித்து 9 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது.
- "ஐந்து F" என்ற ஒரு தொலைநோக்குத் திட்டக் கொள்கை மற்றும் ஜவுளித் துறையின் கழிவுகளை மறுசுழற்சி செய்வதில் சுமார் 7.5 பில்லியன் டாலர் மதிப்புள்ள புதிய உலகளாவிய வாய்ப்புகள் மூலம் இந்த இலக்கை இந்தியா மிக முன்கூட்டியே அடைய முடியும்.
- ஐந்து F கொள்கை என்பது - பண்ணை, இழை, துணி, வடிவமைப்பு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி ஆகியவற்றினைக் குறிக்கிறது.
- இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி ஆனது தற்போது சுமார் 3 லட்சம் கோடி ரூபாயை எட்டி உள்ளதுடன், உலகின் ஆறாவது மிகவும் பெரிய ஜவுளி ஏற்றுமதியாளர் என்ற ஒரு அடையாளத்தினைப் பெறுகிறது.
- ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைத் தொழில் துறை ஆனது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 2.3%, தொழில்துறை உற்பத்தியில் 13% மற்றும் ஏற்றுமதியில் 12% பங்களிக்கிறது.

## புதிய நிதி அணுகுமுறை

- 2026-27 ஆம் நிதியாண்டிலிருந்து முதன்மையான நிதி அளவீடாக நிதிப் பற்றாக்குறை என்ற இலக்கிற்குப் பதிலாக கடன்-GDP விகிதத்தினை மாற்ற உள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.
- இது நிதி நிலைத்தன்மையை மிக நன்கு உறுதி செய்தல், வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல் மற்றும் பொது நிதிகளை நிர்வகிப்பதில் அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் ஆனது, ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (GDP) தொடர்புடைய தேசியக் கடனின் பங்கை அளவிடுகிறது.
- இது கடந்த காலத்திய மற்றும் தற்போதைய கடன் போக்குகளைக் காட்டுகின்ற நிதி வளத்தின் நம்பகமான குறிகாட்டியாக செயல்படுகிறது.
- 2031 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் மத்திய அரசின் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை சுமார் 50±1% ஆகக் குறைக்க நீண்டகால இலக்கை அரசாங்கம் நிர்ணயித்துள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறை இலக்கு ஆனது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.8% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு இது முதலில் நிர்ணயிக்கப் பட்ட 4.9% என்ற இலக்கினை விடக் குறைவாகும்.

- 2025-26 ஆம் நிதியாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4.4% ஆக மேலும் குறையும் என்று அரசாங்கம் கணித்துள்ளது.

## நிறுவனங்களின் ஆவணக் காப்புப் பெட்டகம்

- மத்திய அரசு ஆனது, 'நிறுவனங்களின் ஆவணக் காப்புப் பெட்டகம்' என்ற புதியதொரு எண்ணிமத் தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதன் நோக்கம் ஆனது, வணிக மற்றும் நிறுவனங்களின் ஆவணங்களின் நிர்வாக மேலாண்மை மற்றும் சரிபார்ப்பை நெறிப்படுத்துவதற்கானதாகும்.
- இது மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) கீழ் உள்ள தேசிய மின் ஆளுகைப் பிரிவால் (NeGD) உருவாக்கப்பட்டது.

## DIA திட்டம்

- இந்திய அரசின் வர்த்தகத் துறையானது, வைர முன்பண அங்கீகாரம் (DIA) என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- உலகளாவிய வைர வர்த்தகத்தில் நாட்டின் நிலையினை வலுப்படுத்துவதே இதன் ஒரு நோக்கமாகும்.
- இந்த முன்னெடுப்பானது, ஏற்றுமதியாளர்களுக்கு, வைரங்களின் இறக்குமதி மற்றும் கையாள்வது தொடர்பான செலவினங்களை எளிமையாக்குவதற்கும், அதனை நன்கு குறைப்பதற்கும் முயல்கிறது.
- தற்போது, ஏற்றுமதியாளர்கள் சுங்க வரி ஏதும் செலுத்தாமல் ¼ காரட்டுக்கும் (சுமார் 25 சென்ட்) குறைவான, இயற்கையான வெட்டு வடிவங்களைக் கொண்ட மற்றும் மெருகேற்றம் செய்யப்பட்ட வைரங்களை இறக்குமதி செய்யலாம்.

## இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரப் பங்களிப்பு

- இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரம் ஆனது, அதன் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பினை வழங்கும் துறையாக உருவெடுத்துள்ளது.
- இது 2022-23 ஆம் ஆண்டில் தன மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.74% (INR 31.64 லட்சம் கோடி அல்லது 402 பில்லியன் டாலர்) பங்கினை கொண்டுள்ளது.
- இத்துறையில் 14.67 மில்லியன் தொழிலாளர்கள் (மொத்தப் பணியாளர் வளத்தில் 2.55%) பணியாற்றுவதுடன், எண்ணிமப் பொருளாதாரம் ஆனது மற்ற பொருளாதாரத்தினை விட சுமார் ஐந்து மடங்கு அதிக உற்பத்தித் திறன் கொண்டதாக உள்ளது.
- 2029-30 ஆம் ஆண்டிற்குள் எண்ணிமப் பொருளாதாரத்தின் பங்கு ஆனது, ஒட்டு மொத்த மதிப்புக் கூட்டலில் சுமார் 20% ஆக வளர்ந்து, வேளாண்மை மற்றும் உற்பத்தியை விட அதிகமாக இருக்கும் என்று கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவின் திறன்பேசி ஏற்றுமதி 2025

- ஏப்ரல்-ஜனவரி மாதக் காலக் கட்டத்தின் போது இந்தியாவின் திறன் பேசி ஏற்றுமதி ஆனது, 1.55 டிரில்லியன் ரூபாயை எட்டியது.

- இந்த ஏற்றுமதிகள் ஆனது 2024 ஆம் ஆண்டு நிதியாண்டில் 1.31 டிரில்லியன் ரூபாயை விஞ்சின.
- ஜனவரி (2025) மாதத்தில் மட்டும், மாதாந்திர ஏற்றுமதியானது இதுவரையில் இல்லாத அளவிற்கு மிக அதிகமாக 250 பில்லியன் டாலராகப் பதிவாகியுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தினை விட சுமார் 140 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.
- தமிழ்நாடு ஃபாக்ஸ்கான் மையத்தின் சுமார் பாதிப் பங்குடன், ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன் விற்பனை நிறுவனங்கள், இந்த ஏற்றுமதிகளில் சுமார் 70 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்தன.

## 2030 ஆம் ஆண்டில் இந்தியா-கத்தார் இடையிலான வர்த்தகம்

- இந்தியா மற்றும் கத்தார் ஆகிய இரு நாடுகள், வர்த்தகம், முதலீடு மற்றும் எரிசக்தி ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்தி, தங்கள் இருதரப்பு உறவுகளை ஓர் உத்தி சார் கூட்டாண்மையாக மேம்படுத்த முடிவு செய்துள்ளன.
- இரு நாடுகளும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தற்போது 14.08 பில்லியன் டாலர் மதிப்பு கொண்ட தங்களது இருதரப்பு வர்த்தகத்தினை சுமார் 28 பில்லியன் டாலர்கள் மதிப்புக் கொண்டதாக இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயித்துள்ளன.
- கத்தார் நாட்டு முதலீட்டு ஆணையம் (QIA) ஆனது, ஏற்கனவே இந்தியாவில் சுமார் 1.5 பில்லியன் டாலரை முதலீடு செய்துள்ளது.

## MSME நிறுவனங்களுக்கான MCGS

- மத்திய அரசு ஆனது 'MSME நிறுவனங்களுக்கான பரஸ்பர கடன் உத்தரவாதத் திட்டம்' என்ற திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக 2025 - 26 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டம் ஆனது ஆலை, இயந்திரங்கள் அல்லது உபகரணங்களை வாங்குவதற்கு 100 கோடி ரூபாய் வரையில் கடன்களை வழங்குவதன் மூலம் MSME நிறுவனங்களுக்குப் பிணையமில்லாத கடன்களை பெற வாய்ப்பளிக்கிறது.
- இந்தத் திட்டம் ஆனது தேசியக் கடன் உத்தரவாத அறக்கட்டளை நிறுவனத்தின் (NCGTC) மூலம், 100 கோடி ரூபாய் வரையிலான கடன் பெறலுக்காக உறுப்பினர் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு (MLIs) 60 சதவீத உத்தரவாதக் கடன் வழங்கீட்டினை வழங்குகிறது.

## மின்னணு மாற்றத்தகு கிடங்கு ரசீதுகளுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்

- மின்னணு மாற்றத்தகு கிடங்கு ரசீது அடிப்படையிலான இணையீட்டு சார் நிதியுதவி மீதான (CGS-NPF) ஒரு கடன் உத்தரவாதத் திட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தி யுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது, அறுவடைக்குப் பின்னதாக என மின்னணு மாற்றத்தகு கிடங்கு ரசீதுகளை (e-NWR) கொண்டு விவசாயிகள் பெறும் கடனுக்காக 1,000 கோடி ரூபாய் நிதியை வழங்குகிறது.

- 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு 85% உத்தரவாதம் அளிக்கப்படும்.
- சிறு மற்றும் குறு விவசாயிகள்/பெண்கள்/SC/ST/PwD ஆகியோருக்கு 3 முதல் 75 லட்சம் ரூபாய் வரையிலான கடனுக்கு 80% உத்தரவாதம் அளிக்கப்படும்.

### வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு 2025

- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் – டிசம்பர் வரையிலான காலாண்டில், நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களிடையே சுமார் 49.9% ஆக இருந்த தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் (LFPR) ஆனது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் – டிசம்பர் மாதம் வரையிலான காலாண்டில் 50.4% ஆக அதிகரித்துள்ளது.
- நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களுக்கான LFPR விகிதம் அதே காலக் கட்டத்தில் 74.1 சதவீதத்திலிருந்து 75.4% ஆக அதிகரித்துள்ளது.
- நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்களுக்கான LFPR ஆனது 25.0 சதவீதத்திலிருந்து 25.2% ஆக அதிகரித்துள்ளது.
- நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களிடையே நிலவும் வேலை வாய்ப்பின்மை விகிதம் (UR) 6.5 சதவீதத்திலிருந்து 6.4% ஆகக் குறைந்துள்ளது.
- 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 5.8% ஆகவே உள்ளது.
- 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டப் பெண்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 8.6 சதவீதத்திலிருந்து 8.1% ஆகக் குறைந்துள்ளது.

### இந்தியாவின் LNG இறக்குமதிகள் 2024

- 2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து இந்தியாவின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) இறக்குமதி ஆனது 252.28 டிரில்லியன் கன அடி அளவில் உயர்ந்தது.
- இது தோராயமாக 7.14 பில்லியன் கன மீட்டர் (BCM) ஆகும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### NVS-02 - ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஏவப்பட்ட 100வது செயற்கைக்கொள்

- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதியன்று ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து அதன் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க 100வது ஏவுதலை மேற்கொண்டது.
- NVS-02 செயற்கைக்கோளுடன் கூடிய GSLV-F15 ஏவு கலமானது, விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது.
- NVS-02 ஆனது, NVS தொடரின் இரண்டாவது செயற்கைக்கோள் ஆகும்.
- GSLV-F15 என்பது இந்தியாவின் புவி ஒத்திசைவு செயற்கைக்கோள் ஏவு வாகனத்தின் (GSLV) 17வது ஏவல் மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கிரையோ எஞ்சின் என்ற நிலை கொண்ட 11வது ஏவுதலாகும்.

- இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கிரையோஜெனிக் எஞ்சின் நிலை கொண்ட GSLV வாகனத்தின் 8வது செயல்பாட்டு ஏவலாகும்.
- இங்கு 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 ஆம் தேதியன்று, முதல் முறையாக ரோகிணி தொழில்நுட்பச் சாதனத்தினைச் சுமந்து செல்லும் செயற்கைக்கோள் ஏவு வாகனம்-3 (SLV-3 E10) என்ற ஏவு கலத்தின் சோதனை ஏவல் ஆனது மேற்கொள்ளப்பட்டது.

## உலகின் முதல் ஆழ்கடல் ரேடார்

- சீன அறிவியல் ஆய்வாளர்கள் மிக அதிக உயரங்களில் பறக்கும் விமானங்களைக் கூட கண்டறியும் திறன் கொண்ட உலகின் முதலாவது கடல் படுகை 'ரேடாரை' உருவாக்கி உள்ளதாகக் கூறுகின்றனர்.
- இது சீனாவின் உளவு /புலனாய்வு வலையமைப்பை மிகவும் கணிசமாக மேம்படுத்தி எதிர்காலத்தில் கடற்படை சார்ந்த அதன் போர்த் திறனை மறுவடிவமைக்க கூடும்.
- இது 1,000 மீட்டர் ஆழத்தில் கடற்பரப்பில் நிலைநிறுத்தப்பட்ட ஓர் ஒலி உணர்வு தொடர் ஆகும்.

## சீனாவின் டோகாமாக் அணு உலையின் புதிய சாதனை

- சீனாவில் உள்ள ஒரு சோதனை அணுக்கரு இணைவு உலையில் ஒரு புதிய சாதனை நேரமாக சுமார் 1,000 வினாடிகளுக்கு மேல் அல்லது 17 நிமிடங்களுக்கு மேலாக அதன் செயல்பாடு நீடித்தது.
- இது ஐந்து வினாடிகளில் சுமார் 12 மெகாவாட் மின்சாரத்தினை உற்பத்தி செய்தது என்ற நிலையில் இது அந்தக் காலக் கட்டத்திற்கு சுமார் 10,000 வீடுகளின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானது.

## LID-568 கருந்துளை கண்டுபிடிப்பு

- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி (JWST) மற்றும் சந்திரா ஊடுகதிர் ஆய்வகம் ஒரு வினோதமான கருந்துளையைக் கண்டுபிடித்துள்ளன.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கருந்துளைக்கு LID-568 என பெயரிடப்பட்டுள்ளது.
- இது பெருவெடிப்பிற்கு 1.5 பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு இருந்த ஒரு குறைந்த நிறை கொண்ட மாபெரும் கருந்துளையாகும்.

## DeepSeek AI – சீனா

- சமீபத்தில், டீப்சீக் நிறுவனமானது பகுத்தறிவு மாதிரிகள் எனப்படும் அதன் DeepSeek-V3 மற்றும் DeepSeek-R1 செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த மாதிரிகள் விரைவாக, ChatGPT செயலியினை விஞ்சி, ஆப் ஸ்டோரில் அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட செயலியாக மாறியுள்ளது.
- OpenAI மற்றும் கூகுள் நிறுவனங்களின் வரம்பிற்குட்பட்ட சில செயற்கை நுண்ணறிவு மாதிரிகளைப் போலல்லாமல் DeepSeek மாதிரிகள் ஆனது ஒரு பொதுப் பயன்பாட்டுத் தளமாகும்.

## காயா BH3 கருந்துளை

- பூமிக்கு மிக அருகில் காணப்படும், கயா BH3 என்ற பிரம்மாண்டமான இவ்வகையான மூன்றாவது கருந்துளையை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- BH3 கருந்துளையின் 33 சூரிய நிறைகள் ஆனது, அண்டத்தின் தற்போதைய அதி எடை கொண்ட சிக்னஸ் X-1 கருந்துளையினை விட 12 சூரிய நிறைகள் அதிகமாகும்.
- கயா BH3 ஆனது, அக்விலா திரளில் சுமார் 2,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்து உள்ளது.
- ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் கயா தொலைநோக்கி மூலம் இந்த மூன்று கருந்துளைகளும் கண்டறியப்பட்டன.

## இஸ்ரோவின் FEAST மென்பொருள்

- கட்டமைப்புகளின் வரையறுக்கப்பட்ட ஒரு கூறு பகுப்பாய்வு (FEAST) மென்பொருளின் சமீபத்தியப் பதிப்பை ISRO வெளியிட்டது.
- FEAST மென்பொருள் என்பது விண்வெளி, வாகனம், கட்டிடவியல், இயந்திர மற்றும் கடல் சார் பொறியியல் துறைகளில் மிகவும் அதிகளவு சுமைகளைத் தாங்கும் கட்டமைப்புகளின் இயக்கத்தினைப் பகுப்பாய்வு செய்வதற்காக பயன்படுத்தப் படும் வரையறுக்கப்பட்ட கூறு பகுப்பாய்வு முறையை மிகவும் அடிப்படையாகக் கொண்ட வகையிலான ஒரு கட்டமைப்பு பகுப்பாய்வு மென்பொருளாகும்.

## கங்காருவின் முதல் செயற்கை கரு உருவாக்கம்

- அறிவியல் ஆய்வாளர்கள் முதல் முறையாக செயற்கைக் கருத்தரித்தல் (IVF) மூலம் ஒரு கங்காருவின் கருக்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.
- அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக வேண்டி உலகம் முழுவதும் IVF செயல்முறை குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், ஜெர்மனியில் உள்ள அறிவியலாளர்கள் உலகில் முதன்முதலில் IVF மூலம் உருவாக்கப்பட்ட காண்டாமிருகத்தின் ஒரு கருவை மற்றொரு உடலில் செலுத்தினர்.

## பைரிகுலேரியா Spp தொற்று

- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் ஆனது, இஞ்சிப் பயிர்களை கடுமையாகப் பாதிக்கின்ற பைரிகுலேரியா Spp என்ற புதியப் பூஞ்சைத் தொற்று நோயை அடையாளம் கண்டுள்ளது.
- பைரிகுலேரியா Spp என்பது ஒரு பூஞ்சை நோய்க் கிருமியாகும் என்பதோடு இது இஞ்சி சாகுபடிக்கு ஒரு புதிய அச்சுறுத்தலாக ஒரு பெருந்தொற்றினை ஏற்படுத்துகிறது.
- பைரிகுலேரியா ஆனது அரிசி, கோதுமை மற்றும் பார்லி போன்ற சில ஒருவித்திலைத் தாவரங்களில் தொற்றுகளை ஏற்படுத்துவதற்காக நன்கு அறியப்பட்ட கிருமியாகும்.
- 2024 ஆம் ஆண்டில் கர்நாடகாவின் குடகு மாவட்டத்தின் சில பகுதிகளில் பயிரிடப்பட்ட இஞ்சி பயிரில் பைரிகுலேரியா பாதிப்பு முதன்முறையாக பதிவாகியுள்ளது.

## குயிபு மாபெரும் திரளமைப்பு

- அறியப்பட்ட பேரண்டத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மாபெரும் திரளமைப்பை வானியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த மாபெரும் திரளமைப்பிற்கு "குயிபு" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது வியக்கத்தக்க வகையில் தோராயமாக சுமார் 1.3 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவிற்கு நீண்டுள்ளதோடு இதில் மதிப்பிடப்பட்ட 200 குவாட்ரில்லியன் சூரிய நிறைகளையும் கொண்டுள்ளது.
- குயிபுவின் மாபெரும் அளவானது பால் வெளி அண்டத்தின் நீளத்தை விட 13,000 மடங்கு அதிகமாகும்.
- இது பிரபஞ்சத்தில் அறியப்பட்ட மிக நீளமான திரளமைப்பு ஆகும் என்பதோடு மேலும் இது லானியாக்கியா மீத்திரள் போன்ற முந்தைய மாபெரும் திரளமைப்புகளை விஞ்சி உள்ளது.

## R-37M எறிகணை

- Su-30MKI விமானத்தின் இறக்கைகளின் கீழ் பொருத்தப்பட்ட R-77 வான்வழி தாக்குதல் எறிகணைக்கு மாற்றாக R-37M எறிகணையைப் பொறுத்துவதற்கு ரஷ்யாவானது இந்தியாவிற்கு வாய்ப்பளித்துள்ளது.
- R-37M ஆனது அதன் NATO அறிக்கையிடல் பெயரான AA-13 Axehead என்றும் அழைக்கப் படுகிறது.
- இது ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட மிக நீண்ட தூர தாக்குதல் வரம்புடைய வான்வழி தாக்குதல் எறிகணையாகும்.
- R-77 ஆனது அதிகபட்சமாக சுமார் 100 கிலோமீட்டர் தூரம் தாக்கும் திறன் கொண்டது என்பதோடு இது 300 முதல் 400 கிலோமீட்டர் என்ற வரையிலான R-37M எறிகணையின் தாக்குதல் வரம்பை விட கணிசமாகக் குறைவாகும்.
- இதன் வேகத்தைப் பொறுத்தவரையில், R-77 சுமார் மேக் 4-5 வேகம் வரை எட்டும் திறன் கொண்ட அதே நேரத்தில் R-37M மேக் 6 வேகத்தில் இயங்கும்.

## பிரம்மோஸ் அடுத்த தலைமுறை நுட்பத்திலான சீர்வேக எறிகணை

- இந்தியாவின் பிரம்மோஸ் NG (அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்திலான) எறிகணை அமைப்பின் உருவாக்கமானது நிறைவு நிலையை எட்டும் நிலைகளில் உள்ளது.
- பிரம்மோஸ் NG ஆனது அதன் முன்னோடி வடிவினைப் போலவே அதே திறன்களைக் கொண்ட ஒரு மெல்லிய வடிவிலான எறிகணையாகும்.
- பிரம்மோஸ் NG இலகுவானது, சிறியது மற்றும் அடக்கமானது என்பதால் ரஷ்யாவில் உருவாக்கப்பட்ட சுகோய்-30MKI ரக போர் விமானம் மற்றும் இங்கு உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட தேஜாஸ் எனும் இலகுரகப் போர் விமானம் ஆகியவற்றில் பொருத்தப் படுவதற்கு இணக்கமாக இருக்கும்.
- இந்த எறிகணை ஆனது 290 கி.மீ தூரம் மற்றும் 3.5 மேக் வரை வேகம் கொண்டது.
- பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அடுத்தபடியாக, இந்த எறிகணை அமைப்புகளை வாங்கும் இரண்டாவது நாடாக இந்தோனேசியா மாற உள்ளது.

## ரெய்மெய் கணினி

- ரெய்மெய் எனப்படும் 20 குயூபிட் அளவிலான துளிமக்/குவாண்டம் கணினியானது, ஜப்பானின் ஃபுகாகு மீத்திறன் கணினியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- ஃபுகாகு உலகின் ஆறாவது வேகமான மீத்திறன் கணினியாகும்.
- இது மேம்பட்ட சிக்கல் தீர்க்கும் திறன் கொண்ட குவாண்டம் மற்றும் வழக்கமான கணினி முறைகளை இணைத்து, முழுமையாகச் செயல்படும் முதல் கலப்பின துளிம மீத்திறன் கணினி ஆகும்.

## F11 பாக்டீரியா

- குறைந்தது மூன்று வகையான பெர் மற்றும் பாலிஃப்ளூரோ அல்கைல் பொருட்களை (PFAS) உடைத்து அதனை நன்கு சிதைக்கும் திறன் கொண்ட பாக்டீரியாக்களின் ஒரு வகையை ஆராய்ச்சி குழு கண்டறிந்துள்ளது.
- குறிப்பிடத்தக்க வகையில், இந்தத் திரிபு ஆனது, அதனைச் சிதைக்கும் செயல்பாட்டின் போது உற்பத்தி செய்யப்படும் சில நச்சுத் தன்மை வாய்ந்த தயாரிப்புகளையும் நன்கு சிதைக்கும் தன்மை கொண்டது.
- லேப்ரிஸ் போர்ச்சுகலென்சிஸ் F11 (F11) என்ற இப்பாக்டீரியம் ஆனது 100 நாட்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமான பெர்ஃப்ளூரோக்டேன் சல்போனிக் அமிலத்தை (PFOS) வளர் சிதை மாற்றத்திற்கு உட்படுத்தியது.
- PFOS என்பது மிகவும் பரவலான மற்றும் நிலையான PFAS சேர்மங்களில் ஒன்றாகும் என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனத்தினால் ஆபத்தானது என வகைப்படுத்தப்பட்டது.
- F11 பாக்டீரியாக்கள் முதலில் போர்ச்சுகலின் மிக மாசுபட்ட தொழில்துறை பகுதியின் மண்ணிலிருந்து பிரிக்கப்பட்டது.

## இரத்த வகைகளுக்கிடையேயான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை

- சென்னையில் உள்ள MIOT இன்டர்நேஷனல் மருத்துவமனையின் மருத்துவர்கள், அரிய பாம்பே இரத்த வகையுடன் கூடிய நோயாளிக்கு குருதிக் கலப்பு கொண்ட ஒரு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையினை செய்துள்ளனர்.
- 2010 ஆம் ஆண்டில், MIOT மருத்துவமனைகளின் குழுவானது, B இரத்தக் வகை கொண்ட ஒரு உறுப்பு தானதாரரிடமிருந்துப் பெற்ற சிறுநீரகத்தினை, O இரத்த வகை கொண்ட ஒருவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தியுள்ளது.
- அவர்கள் ஜப்பானியர்களால் உருவாக்கப்பட்ட ஒரு இரட்டை வடிகட்டுதல் மூலமான பிளாஸ்மா நீக்கம் (DFPP) எனப்படும் ஒரு சிறப்பு செயல்முறையைப் பயன்படுத்தினர்.
- பாம்பே அல்லது HH என்றழைக்கப்படும் இந்த அரிய இரத்த வகையானது, 1952 ஆம் ஆண்டில் மும்பையில் முதன்முதலில் Y.M.பெண்டே என்பவரால் கண்டறியப்பட்டது.

## கிரேவ்ஹாக் அமைப்பு

- கிரேவ்ஹாக் கலப்பின நிலம் விட்டு வானில் உள்ள இலக்கைத் தாக்கும் எறிகணை என்ற ஒரு புதிய ஆயுத அமைப்பை உக்ரைன் வாங்கியதாக கூறப்படுகிறது.

- இந்த அமைப்பினை ஐக்கியப் பேரரசு ஆனது டென்மார்க்குடன் இணைந்து உருவாக்கி உள்ளது.
- இது ஐக்கியப் பேரரசினால் வடிவமைக்கப்பட்ட "எளிதில் சுமந்து செல்லக் கூடிய வான் வழிப் பாதுகாப்பு அமைப்பு" என்று விவரிக்கப் பட்டுள்ளது.
- இது வான்வழி எறிகணையினை நிலக் கட்டுப்பாட்டு அடிப்படையில் இயங்கும் வான் வழிப் பாதுகாப்பு அமைப்பாக மாற்றியமைக்கக் கூடியது.
- இந்த எறிகணைகள் சுமார் மேக் 2.5 வரையிலான ஒரு வேகத்தை அடையக் கூடியவை என்பதோடு, மிகத் தோராயமாக 12 மைல் தொலைவில் உள்ள இலக்குகளையும் தாக்கி அழிக்கும்.

## உலகின் மிகப்பெரிய செங்குத்து உந்துவிசை கலவை இயந்திரம்

- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, உலகளவில் திட உந்துவிசைக்கான மிகப்பெரிய கட்டமைப்பான சுமார் 10 டன் எடையுள்ள 'செங்குத்து உந்து விசை எரிபொருள் கலப்பு இயந்திரத்தினை' வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- இந்திய விண்வெளிப் போக்குவரத்து அமைப்புகளில் திட உந்துவிசை முக்கியப் பங்கு வகிக்கிறது.
- ஓர் உந்துவிசை எரிபொருள் கலவை எந்திரம் என்பது விண் ஏவு கல உந்துவிசைப் பொருட்களை, மிகவும் குறிப்பாக எரிபொருள் மற்றும் ஆக்சிஜனேற்றப் பொருட்களை ஒன்றாக கலக்கும் ஒரு இயந்திரமாகும்.
- இது ஏவு கலத்தின் திட விசைப் பொறிகளுக்கு என்று சீரான மற்றும் நம்பகமான உந்து விசைக் கலவையை வழங்குவதை உறுதி செய்யும்.

## Grok 3 AI

- எலான் மஸ்க்கின் xAI நிறுவனமானது, ஒரு புதிய Grok 3 செயற்கை நுண்ணறிவு மாதிரி தொடர்களை வெளியிட்டுள்ளது.
- Grok-3 ஆனது அதன் முந்தைய மாதிரிகளை விட 10 மடங்கு கணினிச் செயல்பாட்டு திறனைக் கொண்டுள்ளது.
- Grok 3 ஆனது, xAI நிறுவனத்தின் Colossus மீத்திறன் கணினியால் இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது பூமியில் உள்ள திறன் மிக்க செயற்கை நுண்ணறிவாகக் கூறப்படுகிறது.

## காவேரி 2.0 தளம் மீதான DDoS தாக்குதல்

- ஜனவரி மாதத்தில், கர்நாடகாவில் சொத்துப் பதிவுகளை நெறிப்படுத்தும் வலை தளம் அடிப்படையிலான ஒரு இணைய தளமான காவேரி 2.0, அவ்வப்போது, செயல்பாட்டு முடக்கம் சார்ந்த சேவையகக் கட்டமைப்புகளின் செயலிழப்புகளைச் சந்தித்தது.
- இதன் விளைவாக, அந்த மாநிலத்தில் சொத்துப் பதிவு மற்றும் ஆவணம் தொடர்பான குடிமக்கள் சேவைகள் ஸ்தம்பித்தன.
- இது ஒரு "Motivated Distributed Denial of Service (DDoS) -ஒருங்கிணைந்த இணையவெளித் தாக்குதல்" ஆகும்.

- DDoS தாக்குதல் என்பது ஒரு இலக்கு வைக்கப்பட்ட சேவையகம், சேவை அல்லது வலை அமைப்பின் இயல்பான செயல்பாட்டை அதிகபட்ச இணையச் செயல்பாட்டின் மூலம் நிறைக்கச் செய்வதன் மூலம் அதனைச் சீர்குலைக்கச் செய்யும் ஒரு தீங்கிழைக்கும் நோக்கத்திலான முயற்சியாகும்.

## மைக்ரோசாப்ட் - மஜோரானா 1

- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, இதற்கு முன்னதாக அறிமுகப்படுத்தப்பட்டதை விட நம்பகமான மற்றும் அளவிடக் கூடிய குவிட்ஸ்களை கொண்ட மஜோரானா 1 எனப் படும் குவாண்டம் சில்லினை அறிமுகப்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- குவிட்ஸ் என்பவை துளிம / குவாண்டம் கணினிகளின் கட்டமைப்புத் தொகுதிகள் ஆகும்.
- மஜோரானா 1 என்பது எட்டு-குவிட் அளவிலான சில்லு ஆகும் என்பதோடு இது கூகிள் நிறுவனத்தின் வில்லோ (106-குவிட் சிப்) மற்றும் IBM நிறுவனத்தின் R2 ஹெரான் (156-குவிட் சில்லு) போன்ற அதன் போட்டி நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட குவாண்டம் சில்லுகளுடன் ஒப்பிடும் போது ஆற்றல் மிக்கதாக இருக்கலாம்.

## NGC 6505 அண்டத்தினைச் சுற்றி காணப்படும் ஐன்ஸ்டீன் வளையம்

- மிகச் சமீபத்தில், ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) யூக்ளிட் விண்வெளி ஆய்வுக் கலமானது, NGC 6505 என்ற அண்டத்தில் ஒரு ஐன்ஸ்டீன் வளையம் காணப் படுவதைக் கண்டறிந்தது.
- இது பூமியிலிருந்து 590 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- ஐன்ஸ்டீன் வளையம் என்பது மிகவும் வலுவான ஈர்ப்பு குவிய விளைவின் ஒரு சிறப்பு நிகழ்வாகும்.
- ஐன்ஸ்டீன் அவர்கள், அவற்றின் இருப்பைக் கணித்து 80 ஆண்டுகளுக்குப் பிறகு, 1998 ஆம் ஆண்டில் வானியலாளர்கள் முதலாவது ஐன்ஸ்டீன் வளையத்தைக் கண்டறிந்து உள்ளனர்.
- ஒரு நட்சத்திரம் அல்லது அண்டம் போன்ற தொலைதூரப் பின்னணி பொருளிலிருந்து வரும் ஒளியை ஒரு ஈர்ப்புக் குவியம் நன்கு சிதைக்கும் போது ஒரு ஐன்ஸ்டீன் வளையம் உருவாக்கப்படுகிறது.

## சந்திர மண் மாதிரியிலிருந்து சிலிக்கான் கார்பைடைப் பிரித்தெடுத்தல்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனனது, சந்திர மண் மாதிரியில் இருந்து சிலிக்கான் கார்பைடைப் பிரித்தெடுப்பதில் வெற்றி அடைந்துள்ளது.
- இந்த வளர்ச்சியானது, நிலவில் வாழ்விடங்களை உருவாக்குவதற்கு என்று சிலிக்கான் கார்பைடு அடிப்படையிலான கலவைகளை உருவாக்க வழி வகுக்கும்.
- சிலிக்கான் கார்பைடு என்பது சிலிக்கான் மற்றும் கார்பனின் கலவையாகும்.

## இன்கதாசோ அண்டம்

- தென்னாப்பிரிக்க நாட்டின் MeerKAT என்ற ஒரு தொலைநோக்கியானது, 'சிக்கல்' என்று பொருள்படுகின்ற 'இன்கதாசோ' என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய இராட்சத ரேடியோ அண்டத்தினைக் கண்டறிந்துள்ளது.

- இந்த மாபெரும் அண்டமானது 3.3 மில்லியன் ஒளி ஆண்டுகள் அளவிலானது.
- இது நமது பால்வெளி அண்டத்தினை விட 32 மடங்கு பெரியது மற்றும் பூமியிலிருந்து 1.44 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- MeerKAT ஆனது மிகவும் விரைவில் சதுர கிலோமீட்டர் தொகுப்பு ஆய்வகத்தின் (SKA) ஒரு பகுதியாக மாற உள்ளது.

## துளிமம் சார்ந்த தொலைபெயர்ச்சி

- ஆராய்ச்சியாளர்கள் லாஜிக் கேட் எனப்படும் முறைமை கட்டளைகளின் குவாண்டம் / துளிமம் அடிப்படையிலான தொலைபெயர்ச்சியினை மேற்கொண்டுள்ளனர்.
- குவாண்டம் கணினிகள் ஆனது, வழக்கமான கணினிகளின் பிட்களுக்குப் பதிலாக குவிட்களை (குவாண்டம் பிட்கள்) பயன்படுத்துகின்றன.
- இருப்பினும், குவாண்டம் கணினியாக்கத்தின் குவிட்ஸ் மேம்பாட்டுத் திறன் என்பது அறிவியலாளர்களுக்கு ஒரு சவாலாகவே உள்ளது.
- இந்த தொலைதூர அமைப்புகளுக்கு இடையேயான தொடர்புகளை உருவாக்க என்று அவர்கள் குவாண்டம் தொலைபெயர்ச்சியினைப் பயன்படுத்துகிறார்கள்.
- குவாண்டம் தொலைபெயர்ச்சி என்பது "குவாண்டம் பின்னல்" என்று அழைக்கப்படும் ஒரு அமைப்பினை மிக நன்குப் பயன்படுத்தி ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தகவல்களை அனுப்புவதை உள்ளடக்கியது.
- இது ஓர் பொருளை அனுப்புவது போல அல்லாமல், அது ஒரு துகளின் நிலை அல்லது அதன் தன்மையை இடம் மாற்றுகிறது.

## புற்றுநோய் சிகிச்சைக்கான மேம்பட்ட நீர் ஏற்புப் பலபடிச் சேர்மம்

- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் கொல்கத்தாவின் போஸ் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் இடம் சார்/உறுப்பு சார் புற்றுநோய் சிகிச்சைக்காக ஒரு மேம்பட்ட ஊசி வழி உட்செலுத்தக் கூடிய நீர் ஏற்புப் பலபடிச் சேர்மத்தினை உருவாக்கியுள்ளனர்.
- இந்த நீர் ஏற்புப் பலபடி சேர்மம் ஆனது, கட்டுப்படுத்தப்பட்ட முறையில் மருந்துகளை உடலில் வெளியிடச் செய்வதன் மூலம் ஆரோக்கியமான செல்கள் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதோடு, புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கான மிக நிலையான ஒரு தேக்க மையமாகச் செயல்படுகிறது.

## ஜாவெலின் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் எறிகணை

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியன ஜாவெலின் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் எறிகணைகளுக்கான புதிய கொள்முதல் மற்றும் இணைத் தயாரிப்பு ஏற்பாடுகளைத் தொடர்வதற்கான திட்டங்களை அறிவித்துள்ளன.
- FGM-148 ஜாவெலின் என்பது அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட மிகவும் மேம்பட்ட பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் எறிகணை அமைப்பு ஆகும்.
- இது மனிதனால் சுமந்து செல்லக்கூடிய வகையிலான, தோள்பட்டையில் வைத்து சுடக் கூடிய வகையிலான, ஒரு கவச எதிர்ப்பு அமைப்பு ஆகும், மேலும் இது ஏவப்பட்ட பிறகு இலக்கை நோக்கி தானாகவே முன்னேறிச் செல்கிறது.

- இதன் திறன் மிகு தாக்குதல் வரம்பு 2.5 கி.மீ ஆகும்.

## பெரோவ்ஸ்கைட் LED மின்விளக்குகள்

- இந்திய அறிவியல் ஆய்வாளர்கள், பெரோவ்ஸ்கைட் நுண்படிகங்களில் அயனி இடம் பெயர்வைக் குறைப்பதற்காக ஒரு புதுமையான முறையை உருவாக்கியுள்ளனர்.
- இது வெப்பம் மற்றும் ஈரப்பதத்திற்கான உணர்திறன், அத்துடன் நிறத்தின் உறுதியற்ற தன்மை போன்ற முக்கியச் சவால்களை எதிர்கொள்ளும்.
- பெரோவ்ஸ்கைட் என்பது $CaTiO_3$ - கால்சியம் டைட்டனேட் போன்ற படிக அமைப்பைக் கொண்ட சேர்மங்களின் ஒரு வகையாகும்.
- இந்தப் பெரோவ்ஸ்கைட் LED மின்விளக்குகள் ஆனது, OLED மற்றும் QLED ஆகிய மின் விளக்குகளின் தன்மையை ஒரு சேரக் கொண்டிருக்கும்.

## GG Tau A அமைப்பு

- இந்திய வானியலாளர்கள் GG Tau A எனப்படும் ஒரு தனித்துவமான மும்மை நட்சத்திர அமைப்பைக் கண்டறிந்துள்ளனர்.
- இது பூமியிலிருந்து தோராயமாக 489 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- புதிய கிரகங்களின் தோற்ற இடமாக அறியப்படும் இந்தப் பகுதியில், வாயு மற்றும் தூசியால் ஆன சுழலும் வளையமான ஒரு புரோட்டோபிளானட்டரி (கிரக உருவாக்கம் சார்ந்த) வட்டு உள்ளது.

## VSHORADS சோதனைகள்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, மிகவும் குறுகிய தூர வரம்பு உடைய வான்வழிப் பாதுகாப்பு அமைப்பின் (VSHORADS) மூன்று தொடர்ச்சியான ஏவுதல் சோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- VSHORADS என்பது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட மனிதனால் எளிதில் சுமந்து செல்லக் கூடிய வகையிலான வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு ஆகும்.
- இந்த எறிகணை அமைப்பு ஆனது, இந்திய தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படை எனப்படும் ஆயுதப் படைகளின் மூன்று படைப் பிரிவுகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் திறனைக் கொண்டுள்ளது.

## இரத்தம் உறையாமை பாதிப்பிற்கான மனித மரபணு சிகிச்சை முறை

- வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (CMC) ஆனது, இந்த நோய்க்கான லென்டிவைரல் நோய்க் கடத்திகளை மிக நன்கு பயன்படுத்தி முதல் மனித மரபணுச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- VIIIவது இரத்த உறைவுக் காரணியின் குறைபாட்டால் ஏற்படும் கடுமையான இரத்தப் போக்கு கோளாறு இரத்தம் உறையாமை ஆகும்.
- இது தன்னிச்சையான உள் மற்றும் வெளிப்புற இரத்தப்போக்கு நிகழ்வுகளுக்கு வழி வகுக்கிறது.

- இந்தியா உலகிலேயே அதிகளவிலான இரத்தம் உறையாமை பாதிப்பினைக் கொண்டு உள்ள இரண்டாவது நாடாகும்.

## GLP-1 உணரி இயக்கி

- குளுக்ககான் போன்ற பெப்டைட்-1 உணரி இயக்கிகள் (GLP-1RAs) நீரிழிவு நோய் மற்றும் உடல் பருமனுக்கான அங்கீகரிக்கப்பட்ட புதிய மருந்துகள் ஆகும்.
- அவை முதலில் நீரிழிவு நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்காக உருவாக்கப் பட்டவை ஆகும் என்பதோடு இது இன்சுலின் சுரப்பைத் தூண்டுவதன் மூலமும் குளுக்ககான் வெளியீட்டை ஒடுக்குவதன் மூலமும் செயல்படுகின்றன என்பதால் இதன் மூலமும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு ஒழுங்குபடுத்தப்படுகின்றன.
- தற்போது, இந்த மருந்துகள் பழக்கத்திற்கு அடிமையாதல் பண்பிற்குக் காரணமான பகுதியான மூளையின் ஊக்கத்திறன் அமைப்பிலும் செயல்படுகின்றன.

## TOI-6038A b

- அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தைச் சேர்ந்த அறிவியல் ஆய்வாளர்கள் குழுவானது, பூமியை விட மிகப் பெரியதாகவும், சனியை விட மிகவும் சிறியதாகவும் இருக்கும் ஒரு பெரிய கிரகத்தைக் கண்டறிந்துள்ளது.
- TOI-6038A b என அழைக்கப்படும் இந்தக் கோளானது, சுமார் 78.5 புவி நிறைகள் மற்றும் மாபெரும் இரட்டை வானியல் அமைப்பில் 6.41 புவி ஆரங்கள் கொண்ட அடர்த்தியான சனி கோளினை ஒத்த கிரக அளவைக் கொண்டுள்ளது.
- TOI-6038A ஆனது, TOI-6038B எனப்படும் K-வகை துணை நட்சத்திரத்துடன் கூடிய ஓர் இரட்டை வானியல் அமைப்பின் ஒரு பகுதியாக உள்ளது.
- இந்தக் கோள் ஆனது ஒரு மிகப் பிரகாசமான, உலோகக் கூறுகள் நிறைந்த F-வகை நட்சத்திரத்தினை 5.83 நாட்களுக்கு ஒருமுறை ஒரு வட்ட வடிவ சுற்றுப்பாதையில் சுற்றி வருகிறது.
- ஒரு F-வகை நட்சத்திரம் என்பது நமது சூரியனை விட வெப்பமாகவும் பிரகாசமாகவும் இருக்கும் ஒரு வகை நட்சத்திரமாகும், ஆனால் அது பேரண்டத்தில் உள்ள வெப்பமான நட்சத்திரங்களைப் போல அதிக வெப்பமானது அல்ல.
- இது நட்சத்திர வகைப்பாடு அமைப்பில் உள்ள A-வகை (வெப்பமானது) மற்றும் G-வகை (நமது சூரியனைப் போல) இடைப்பட்ட வகைப்பாட்டில் வருகிறது.
- PARAS-1 மற்றும் PARAS-2 நிறமாலை வரைபடங்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகளால் இந்த ஐந்தாவது புறக்கோள் கண்டுபிடிப்பு ஆனது மேற்கொள்ளப்பட்டது.
- வானியல் கருவிகள் அமைப்பு நுட்பத்தில் இந்தியாவின் வளர்ந்து வரும் முன்னேற்றம் ஆனது PARAS-2 மூலம் சிறப்பிக்கப்படுகிறது.
- PARAS-2 என்பது ஆசியாவிலேயே மிகவும் துல்லியமான நிலைப்படுத்தப்பட்ட ஒரு ஆரத் திசை வேக (RV) அலைமானியாகும்.

## KM3NeT ஒத்துழைப்பு

- நியூட்ரினோ ஆராய்ச்சியின் சமீபத்திய முன்னேற்றங்கள் ஆனது KM3NeT (கன கிலோ மீட்டர் நியூட்ரினோ தொலைநோக்கி) ஆனது ஒத்துழைப்பு மூலமாக மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இது ஆழ்கடல் ஆய்வகங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தும் ஒரு சர்வதேச முயற்சியாகும்.
- KM3NeT ஒத்துழைப்பு ஆனது, 21 நாடுகளில் உள்ள 68 நிறுவனங்களைச் சேர்ந்த 360க்கும் மேற்பட்ட நிபுணர்களை ஒன்றிணைக்கிறது.
- இந்தக் குழு மத்தியதரைக் கடலுக்கு அடியில் ஆழ்கடல் ஆய்வகங்களை உருவாக்கி வருகிறது.
- நியூட்ரினோக்கள் மின்னூட்ட நடுநிலை கொண்ட மற்றும் மிகச் சிறிய நிறை கொண்ட அணுவின் சார்பு நிலைத் துகள்கள் ஆகும்.
- இந்தக் குழு சமீபத்தில் KM3NeT திட்டத்தின் ARCA உணர்வி மூலம் மத்தியதரைக் கடலில் நியூட்ரினோக்கள் எனப்படும் பேய் துகள்கள் இருப்பதைப் பதிவு செய்துள்ளனர்.
- இந்த வியத்தகு நியூட்ரினோவிற்கு KM3-230213A என பெயரிடப்பட்டுள்ளது.

## செங்கடலில் உப்புநீர் குளங்கள்

- செங்கடலை ஆராய்ந்து வரும் அறிவியல் ஆய்வாளர்கள் இப்பகுதியில் இயற்கையாக மரணத்தினை ஏற்படுத்தும் பகுதிகள் இருப்பதைக் கண்டறிந்துள்ளது.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட NEOM உப்புநீர்க் குளங்கள் ஆனது, கடற்கரையிலிருந்து வெறும் 1.25 மைல் தொலைவில் அமைந்துள்ளன.
- மோசஸ் அவர்கள் தண்ணீரைப் பிரித்த இடம் இது என்று நம்பப்படுகிறது.
- அகாபா என்ற வளைகுடாவின் மேற்பரப்பிலிருந்து 4,000 அடி கீழே உப்புநீர்க் குளங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- இங்குள்ள நீர் ஆனது, சாதாரண கடல் நீரை விட சுமார் 10 மடங்கு உப்புத்தன்மை கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு மேலும் ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் அங்கு வரும் அனைத்துக் கடல்வாழ் உயிரினங்களும் உயிரிழக்கின்றன அல்லது வெகுவாக திணறுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ருஷிகுல்யா முகத்துவாரத்தில் ஆலிவ் ரெட்லி ஆமைகள்

- ஆலிவ் ரெட்லி ஆமைகள் / சிற்றாமைகள், 2024 ஆம் ஆண்டில் அவற்றின் ஒரு கூட்டாக முட்டையிடும் பணிக்காக ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள ருஷிகுல்யா நதி முகத்துவாரத்தைத் தவிர்த்தன.
- ருஷிகுல்யா நதி முகத்துவாரம் ஆனது, நாட்டின் முக்கிய இனப்பெருக்கக் கூட்டுறைப் பகுதிகளில் ஒன்றாகும் என்ற நிலையில் அங்கு மில்லியன் கணக்கான பெண் ஆலிவ் ரெட்லி ஆமைகள் ஸ்பானிய மொழியில் அரிபாடா எனக் கூறப்படும் வலையமைப்பு செயலுக்காக திரள்கின்றன.

- ஒடிசாவில் ஆலிவ் ரெட்லி ஆமைகளின் கூட்டாக முட்டையிடும் பணிக்கான சில மற்ற இடங்கள் முறையே கேந்திரபாரா மற்றும் பூரி மாவட்டங்களில் உள்ள காஹிர்மாதா மற்றும் தேவே நதி முகத்துவாரம் ஆகும்.
- 2002, 2007, 2016, 2019, 2021 மற்றும் 2024 ஆகிய சில ஆண்டுகளில் இந்த ஆற்றின் முகத்துவாரத்தில் கூட்டமாக முட்டையிடும் பணிக்கான நிகழ்வு தவிர்க்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் புதிய ஈரநிலங்கள்

- தமிழ்நாடு மாநிலத்தின் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சக்கரக்கோட்டை மற்றும் தேர்த்தங்கல் ஆகிய இரண்டு பறவைகள் சரணாலயங்கள் தற்போது ராம்சர் தளங்கள் என்று அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- இதன் மூலம், நமது மாநிலத்தில் உள்ள ராம்சர் தளங்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது என்பதோடு இதன் மூலம் இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான ராம்சர் தளங்கள் கொண்ட மாநிலமாக தமிழகம் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து 10 தளங்களுடன் உத்தரப் பிரதேசம் இடம் பெற்றுள்ளது.
- இராமநாதபுர மாவட்டம் சித்திரங்குடி மற்றும் கஞ்சிரன்குளம் ஆகிய இதர இரண்டு ராம்சர் சரணாலயங்களைக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் மற்ற 2 புதியத் தளங்கள் கெச்சியோபால்ரி ஈரநிலம் (சிக்கிம்), மற்றும் உத்வா ஏரி (ஜார்க்கண்ட்) ஆகியனவாகும்.
- இவ்வாறு, தற்போது இந்தியா மொத்தம் 89 ராம்சர் தளங்களைக் கொண்டுள்ளது.
- 2002 ஆம் ஆண்டில் கோடியக்கரை வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயத்தின் மூலம் தமிழ்நாடு மாநிலமானது அதன் முதல் ராம்சர் அந்தஸ்தினைப் பெற்றது.

## தாரனாகி மலை - சட்டப்பூர்வ அந்தஸ்து

- நியூசிலாந்து நாட்டு அரசானது, தற்போது அதிகாரப்பூர்வமாக தாரனாகி மவுண்ட் என்று அழைக்கப் படும் தாரனாகி மௌன்க்கா மலைக்கு மனிதனுக்கு வழங்கப்படும் வகையிலான சட்ட உரிமைகளை வழங்கியுள்ளது.
- இந்த அங்கீகாரம் ஆனது தாரனாகி மலையைத் தனிநபர் அந்தஸ்து பெற்ற நாட்டின் மூன்றாவது இயற்கை அம்சமாக உருவாக்கியுள்ளது.
- முன்னதாக வாங்கனுய் நதி மற்றும் தே உரேவேரா தேசியப் பூங்கா ஆகியவை இதே போன்றச் சட்ட உரிமைகளைப் பெற்றன.
- பழங்குடியின மக்கள், தற்போது தாரனாகி மவுண்ட்கா என்ற அதன் மாவோரி மொழிப் பெயரால் அறியப்படுகின்ற தாரனாகி மலையை ஒரு மூதாதையர் அமைப்பாகக் கருதுகின்றனர்.
- உள்ளூர்ப் பழங்குடியினரான இவி மற்றும் அரசாங்கம் அதை நிர்வாகிப்பதற்காக என இணைந்துச் செயல்படுவதுடன் தாரனாகி மலையானது தனது சொந்த நிர்வகிப்பு மீதான அந்தஸ்தினையும் பெறும்.

## அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள A23a பனிப்பாறை

- உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான A23a அண்டார்டிகாவில் உள்ள ஃபில்ச்னர் பனிப்படலத்தில் இருந்து பிரிந்தது.

- இது அதன் பயணத்தில் மிகவும் சமீபத்தில் தெற்கு அட்லாண்டிக் கடலில் மிதக்கத் தொடங்கியது.
- சுமார் ஒரு டிரில்லியன் டன் எடை கொண்ட இது சுமார் 400 சதுர மைல்கள் அளவு பரப்பளவைக் கொண்டுள்ளது.

## சர்வதேச பெரும் பூனை இனங்கள் கூட்டணி 2025

- சர்வதேச பெரும் பூனை இனங்கள் கூட்டணி (IBCA) ஆனது அதிகாரப்பூர்வமாக ஓர் ஒப்பந்த அடிப்படையிலான மற்றும் அரசுகளுக்கிடையேயானப் பெரும் அமைப்பாக நடைமுறைக்கு வந்துள்ளது.
- இது ஜனவரி 23 ஆம் தேதியன்று முழுமையாகச் செயல்படும் சர்வதேசச் சட்டப்பூர்வ நிறுவனமாக மாறியது.
- இந்தக் கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கான ஒரு வைப்புச் சேவை அமைப்பாக வெளி விவகாரங்கள் துறை அமைச்சகம் (MEA) செயல்படும்.
- IBCA ஆனது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 09 ஆம் தேதியன்று இந்தியப் புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவை நினைவு கூரும் ஒரு நிகழ்வின் போது இந்திய அரசினால் தொடங்கப்பட்டது.
- இந்த முன்னெடுப்பின் மிகவும் முக்கிய நோக்கமானது புலி, சிங்கம், சிறுத்தை, பனிச் சிறுத்தை, சிவிங்கிப் புலி, ஜாகுவார் மற்றும் பூமா ஆகிய ஏழு முக்கியப் பெரும் பூனை இனங்களைப் பாதுகாப்பதாகும்.
- தற்போது வரையில், இந்தியா உட்பட 27 நாடுகள் இந்தக் கூட்டணியில் சேர ஒப்புக் கொண்டுள்ளன.

## காஷ்மீரில் யூரேசிய நீர்நாய்கள்

- காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் யூரேசிய நீர்நாய்கள் கடந்த 3 ஆண்டுகளாக அங்கு மீண்டும் தோன்றியுள்ளன.
- கடந்த 25 ஆண்டுகளில், இந்த இனம் ஆனது முதல்முறையாக நேரடியாகப் பதிவாகி உள்ளது.
- 1997 ஆம் ஆண்டில், பிரபலமான தால் ஏரியின் உப்பங்கழிகளில் மக்கள் அவற்றைக் கண்டனர்.
- உள்ளூரில் வோடூர் என்று அழைக்கப்படும் யூரேசிய நீர்நாய்கள் முஸ்டெலிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதோடு அவை நீர்நிலைச் சூழல்களைப் பகுதியளவு சார்ந்து வாழ்பவையாகும்.
- மீன்களை உண்கின்ற இந்த இனம் ஆனது மிகவ வளமான சுற்றுச்சூழல் அமைப்பைப் பேணுவதற்கு இன்றியமையாதது.
- IUCN அமைப்பானது 2004 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் யூரேசிய நீர்நாய்களை அதன் செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாகப் பட்டியலிட்டது.

## 2025 ஆம் ஆண்டு வருடாந்திரப் பறவைகள் கணக்கெடுப்பு - பாங் அணை ஏரி

- பாங் அணை ஏரி வனவிலங்கு சரணாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட 2025 ஆம் ஆண்டு வருடாந்திரப் பறவைகள் கணக்கெடுப்பில், 97 இனங்களைச் சேர்ந்த மொத்தம் 1,53,719 பறவைகளுடன், நீர்ப்பறவைகளின் எண்ணிக்கை எதிர்பாராத அளவிற்கு அதிகரித்து உள்ளது.
- பாங் அணை ஏரி வனவிலங்குச் சரணாலயம் ஆனது இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட ஈரநிலமாகும்.
- பறவைகளின் எண்ணிக்கையில் ஒட்டு மொத்த அதிகரிப்பு என்பது பதிவாகியுள்ளது என்பதோடு 2024 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டதை விட 83,555 அதிகப் பறவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## பருவநிலை இடர் குறியீடு 2025

- இந்தியா தனது பருவநிலை இடர் குறியீட்டு (CRI) தரவரிசையை 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகளால் உலகளவில் ஏழாவது மோசமாக பாதிக்கப் பட்ட நாடு என்ற நிலையிலிருந்து, 2022 ஆம் ஆண்டில் 49வது இடத்திற்கு மேம்படுத்தி உள்ளது.
- இருப்பினும், பல ஆண்டுகளாக மிகவும் நீண்ட கால (1993-2022) மதிப்பீட்டில் ஆறாவது மோசமான நாடாக இந்தியா கருதப்படுவதன் மூலம் மிகவும் பாதிக்கப்பட்ட முதல் 10 நாடுகளில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- இந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகள் சுற்றுச்சூழல் சிந்தனைக் குழுவான ஜெர்மன் வாட்ச் வெளியிட்ட 2025 ஆம் ஆண்டு CRI அறிக்கையின் ஒரு பகுதியாகும்.
- 30 ஆண்டுகளில் (1993-2022) பதிவான சுமார் 400 தீவிர வானிலை நிகழ்வுகளில் 80,000 உயிரிழப்பு மற்றும் சுமார் 180 பில்லியன் டாலர்கள் இழப்பு ஏற்பட்டதாக இந்தியா தெரிவித்துள்ளது.
- உலகளவில், 2022 ஆம் ஆண்டு வரையிலான 30 ஆண்டு காலக் கட்டத்தில் ஏற்பட்ட 9,400க்கும் மேற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகளால் 7,65,000க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர்.
- இந்தியா 1993, 1998 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பேரழிவுகரமான வெள்ளத்தையும், 2002, 2003 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கடுமையான வெப்ப அலைகளையும் எதிர் கொண்டது.

## ஓத மண்டலங்களின் உயிரியல் கணக்கெடுப்பு

- இந்தியாவின் முதல் ஓத மண்டலங்களின் உயிரியல் கணக்கெடுப்பு (இன்டர்டைடல் பயோபிளிட்ஸ்) ஆனது, விசாகப்பட்டினம், மும்பை, கோவா மற்றும் அந்தமான் ஆகிய கடலோரப் பகுதிகளில் சுமார் 500க்கும் மேற்பட்ட உயிரினங்கள் காணப்படுவதாக கண்டறிந்துள்ளது.
- உயிரியல் கணக்கெடுப்பின் போது மும்பைப் புறநகரில் 80 இனங்களும், பெருநகரப் பகுதியில் 120 இனங்களும் பதிவு செய்யப்பட்டது.
- அந்தமான் தீவுகளின் வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த மூன்று ஓத மண்டலக் கணக்கெடுப்புகளில் 70க்கும் மேற்பட்ட உயிரினங்கள் கண்டறியப்பட்டன.
- ஒரு ஓத மண்டலம் ஆனது பெருங்கடல் பரப்பானது நிலத்துடன் இணையும் ஒரு மாறு நிலைப் பகுதியைக் குறிக்கிறது.

- இது உயர் ஓதத்தின் போது நீரில் மூழ்குகின்ற, மற்றும் ஓத அலைகள் பின்வாங்கும் போது வெளிப்பரப்பில் காற்றில் வெளிப்படுவதற்கும் இடையில் உள்ள மாறுநிலை கொண்ட ஒரு தனித்துவமான பகுதியாகும்.
- கடலோர அரிப்புக்கு எதிராக ஒரு இயற்கையான இடையகமாகச் செயல்படுகின்றன என்ற ஒரு நிலையில் அவை அலை ஆற்றலை நன்கு உட்கிரகித்து கரையோரங்களை நிலைப்படுத்த உதவுகின்றன.

## ஆர்க்டிக் வடத் துருவக் காடுகள் மண்டலம் – கார்பன் உமிழ்வு மூலம்

- மரங்களற்ற துந்த்ரா, வடத் துருவக் காடுகள் மற்றும் 26 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ள ஈரநிலங்களை உள்ளடக்கிய ஆர்க்டிக் வடத் துருவக் காடுகள் மண்டலம் ஆனது குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.
- இந்தப் பகுதியின் 40 சதவீதப் பரப்பானது அவை உறிஞ்சுவதை விட அதிக கார்பன் டை ஆக்சைடை வளிமண்டலத்தில் வெளியிடுவதால் கார்பன் உமிழ்விற்கான மூலமாக மாறியுள்ளது.
- இது ஆயிரம் ஆண்டுகளாக ஒரு கார்பன் மடுவாக இருந்த அதன் இயல்பில் இருந்து அது மாறுவதைக் குறிக்கிறது.
- நிலத்தடி உறைபனி என்பது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக 0 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கும் கீழே உள்ள வெப்பநிலையில் பனியில் புதைந்துள்ளக் கார்பனை அதிக அளவு சேமித்துள்ள மண் அல்லது பாறை என வரையறுக்கப் படுகிறது.

## செங்கடல் ஈலாட் வளைகுடாவில் உள்ள பவளப் பாறைகள்

- ஹோலோசீன் காலத்தின் பிற்பகுதியில் ஈலாட் / அகாபா என்ற வளைகுடாவில் பவளப் பாறை வளர்ச்சியில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு இடை நிறுத்தமானது பதிவானதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஈலாட் வளைகுடாவில் உள்ள பவளப்பாறைகள் சுமார் 4,400 முதல் 1,000 ஆண்டுகளுக்கு முன்னதாக அதன் வளர்ச்சியில் 3,000 ஆண்டு கால 'முடக்கத்தினை' எதிர் கொண்டு உள்ளது.

## பரம்பிக்குளம் புலிகள் வளங்காப்பகத்தில் விலங்கினக் கணக்கெடுப்பு

- பாலக்காட்டில் உள்ள பரம்பிக்குளம் புலிகள் வளங்காப்பகத்தில் வனத்துறை நடத்திய விலங்கின கணக்கெடுப்பு ஆனது, அப்பாதுகாக்கப்பட்டப் பகுதியின் விலங்கினச் சரி பார்ப்புப் பட்டியலில் 15 புதிய இனங்களைச் சேர்த்துள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பில் மொத்தம் 206 பறவை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்தப் புதிய சேர்க்கைகளுடன் சேர்த்து, இந்த வளங்காப்பகத்தில் உள்ள மொத்தப் பறவை இனங்களின் எண்ணிக்கை 302 ஆக அதிகரித்துள்ளது.
- இதில் ஐந்து புதிய வண்ணத்துப்பூச்சி இனங்களும் வளங்காப்பகத்தின் சரி பார்ப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த இனங்களின் சேர்க்கையின் மூலம் இவ்வளங்காப்பகத்தில் உள்ள வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கை 273 ஆக உயர்ந்துள்ளது.

## நீலவால் பஞ்சுருட்டான் பறவையின் பதிவு

- தீபகற்ப இந்தியாவில் நீலவால் பஞ்சுருட்டான் பறவையின் (மெரோப்ஸ் பெர்சிகஸ்) முதல் இனப்பெருக்கத் தளம் ஆனது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணக்குடி சதுப்புநிலங்களுக்கு அருகிலுள்ள ஆண்டிவிலையில் கண்டறியப் பட்டுள்ளது.
- இதன் இனப்பெருக்கம் ஆனது மிக முதன்மையாக நைல் டெல்டா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற சில பகுதிகளில் பதிவு செய்யப் பட்டுள்ள அதே நேரத்தில் அவற்றின் குளிர்கால இனப்பெருக்க நிலங்கள் என்பவை ஆப்பிரிக்காவின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாக உள்ளது.
- இப்பறவையின் சில இனப்பெருக்கப் பகுதிகள் ஆனது, பழையார் நதிப் படுகையின் உப்பளங்களில் காணப்பட்டன.

## சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வகையிலான ஆரவல்லிப் பூங்கா திட்டம்

- ஹரியானா அரசாங்கமானது, சுமார் 3,858 ஹெக்டேர் பரப்பில் சுற்றுப் பயணம் மேற் கொள்ளும் வகையிலான ஆரவல்லிப் பூங்கா திட்டத்தினை முன் வைத்துள்ளது.
- இது உலகின் மிகப்பெரிய சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வகையிலான பூங்காவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புதிய தாவரநோய்க்கிருமி பூஞ்சை

- ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் எபிகோக்கம் இண்டிகம் என்ற ஒரு புதிய வகை தாவர நோய்க் கிருமி பூஞ்சையைக் கண்டறிந்துள்ளனர்.
- இது கிரைசோபோகன் ஜிசானியோடைடுகளில் (வெட்டிவேர்) மிக அதிகரித்து வரும் இலைப் புள்ளி நோயுடன் தொடர்புடையது.
- தாவர நோய்க்கிருமிப் பூஞ்சைகள் ஆனது, தாவரங்களில் பல நோய்களை ஏற்படுத்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலையில் குறிப்பிடத்தக்க பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றன.

## பசிபிக் பெருங்கடலில் பெரிலியம்-10

- பசிபிக் பெருங்கடற்பரப்பில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் மிக எதிர்பாராத விதமாக பெரிலியம்-10 திரள் காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பெரிலியம்-10 என்பது வளிமண்டலத்தில் உள்ள காஸ்மிக் கதிர்களால் உற்பத்தி செய்யப் படும் ஓர் அரிய வகை கதிரியக்க ஐசோடோப்பு ஆகும், இதன் மூலம் பூமியின் புவியிட வரலாற்றில் மதிப்புமிக்க தகவல்களைப் பெற முடியும்.
- பெரிலியம்-10 கனிமத்தின் அரை ஆயுள் காலம் 1.4 மில்லியன் ஆண்டுகள் ஆகும்.

## ஈராக்கின் ஜாக்ரோஸ் மலைகள்

- ஈராக்கின் வடக்கில் அமைந்துள்ள ஜாக்ரோஸ் மலைகளைச் சுற்றியுள்ள பகுதியானது புவியின் மேலாடுக்கில் உள்ளிறங்கி வருகிறது.
- பூமியின் மேற்பரப்பிற்குக் உள்ளிறங்கி வரும் கடல்சார் "தட்டு" ஆனது ஈராக்கின் வடக்குப்

பகுதியைக் கீழ்நோக்கி நன்கு இழுப்பதை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.

- அரேபிய மற்றும் யூரேசிய கண்டத் தட்டுகளினூடே உள்ள நியோடெதிஸ் பெருங்கடல் அடுக்கு எனப்படும் ஒரு பகுதியில் மிகவும் விரிவடைந்து வரும் ஒரு பிளவினை இது உருவாக்குகிறது.
- சுமார் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பண்டையப் பெருங்கடலின் தளத்தை உருவாக்கிய இந்த அடுக்கு ஆனது, தென்கிழக்குத் துருக்கியிலிருந்து வடமேற்கு ஈரானை நோக்கிப் பிரிந்து நகர்கிறது.
- எனவே தற்போது, இந்த அடுக்கு பூமியின் மேலடுக்கில் கீழமுந்தி வருகிறது.
- சிக்கலான இந்தச் செயல்முறையானது பல மில்லியன் ஆண்டுகள் நீடிக்கும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் வலுவான முதல் 10 நாடுகள் – 2025

- ஃபோர்ப்ஸ் இதழானது, 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் வலுவான முதல் 10 நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- உலகளாவியத் தரவரிசையில் அமெரிக்கா முன்னணியில் உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து சீனா இரண்டாவது இடத்திலும், இஸ்ரேல் பத்தாவது இடத்திலும் உள்ளன.
- 2.2 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் 84 மில்லியன் மக்கள்தொகை கொண்ட ரஷ்யா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இந்த ஆண்டின் பட்டியலில் 3.73 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி கொண்ட ஐக்கியப் பேரரசு நான்காவது இடத்தில் உள்ளது..
- சுமார் 4.92 டிரில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதாரம் கொண்ட ஜெர்மனி இந்தப் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- உலகின் வலுவான நாடுகளில் 3.55 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் 1.43 பில்லியன் மக்கள் தொகையுடன் இந்தியா இதில் 12வது இடத்தில் உள்ளது.

## ஊழல் கண்ணோட்டக் குறியீடு (CPI) 2024

- டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் என்ற அமைப்பானது 2024 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்ணோட்டக் குறியீட்டினை (CPI) வெளியிட்டுள்ளது.
- ஊழல் குறைவாக உள்ள நாடுகளின் பட்டியலில் டென்மார்க் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து பின்லாந்து மற்றும் சிங்கப்பூர் ஆகியவை அடுத்த இரண்டு இடங்களிலும் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்ணோட்டக் குறியீட்டில் (CPI) இடம் பெற்றுள்ள 180 நாடுகளில் இந்தியாவின் ஒட்டு மொத்த மதிப்பெண் ஒரு புள்ளி குறைந்து 38 ஆகக் குறைந்ததால் இந்தியா 96வது இடத்தைப் பிடித்தது.

- இந்தக் குறியீடானது, சுழியிலிருந்து 100 வரையிலான அளவுருவினைப் பயன்படுத்தச் செய்கிறது என்பதோடு இதில் "சுழியம்" என்பது அதிக ஊழல் மிக்க நாடாகவும் "100" என்பது ஊழல் குறைந்த நாடாகவும் வகைப்படுத்தப்படுகிறது.
- இந்தியாவின் ஒட்டு மொத்த மதிப்பெண் ஆனது 2024 ஆம் ஆண்டில் 38 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 39 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் 40 ஆகவும் இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் இக்குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை 93 ஆக இருந்தது.

## உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கை 2024

- ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) 2024 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய அந்நிய நேரடி முதலீட்டு (FDI) வரவுகள் ஆனது 11% அதிகரித்து 2024 ஆம் ஆண்டில் சுமார் 1.4 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டின.
- இருப்பினும், ஐரோப்பிய வரி ஏய்ப்பு மாற்று பொருளாதாரங்கள் வழியான சில பெரும் முதலீடுகளை நீக்கினால் FDI சுமார் 8% குறைந்துள்ளது.
- வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் FDI 43% அதிகரித்துள்ளது.
- புதிய வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீட்டு அறிவிப்புகள் ஆனது எண்ணிக்கையில் 6% குறைந்துள்ளன.
- ஆப்பிரிக்காவில் FDI 84% அதிகரித்து சுமார் 94 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டி உள்ளது என்ற நிலையில் இது முக்கியமாக எகிப்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு பெரிய திட்டத்தால் உந்தப்பட்டது.
- வளர்ச்சியடைந்து வரும் ஆசியாவிற்கான அந்நிய நேரடி முதலீடு 7% குறைந்துள்ளது அதே சமயம் சீனாவும் 29% சரிவை எதிர்கொண்டுள்ளது.
- ஆசியான் அமைப்பின் உறுப்பினர் நாடுகள் சுமார் 2% அதிகரிப்பையும், இந்தியா 13% அதிகரிப்பையும் கண்டுள்ளது.
- பசுமைத் துறை திட்டங்களில் இந்தியா வளர்ச்சியைக் கண்டுள்ளது.

## உலகப் பொருளாதார வாய்ப்புகள் (GEP) அறிக்கை 2025

- உலக வங்கியானது 2025 ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதார வாய்ப்புகள் (GEP) அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது உலக வங்கி குழுமத்தினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் முதன்மையான அறிக்கையாகும்.
- உலகப் பொருளாதாரம் ஆனது, 2024 ஆம் ஆண்டில் இருந்த அதே வேகத்தில் வளர்ச்சி அடைந்தால், 2025 மற்றும் 2026 ஆகிய இரு ஆண்டுகளிலும் 2.7% விரிவடையும்.
- இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25% பங்கினை வழங்கி வந்த வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் ஆனது தற்போது சுமார் 45% பங்களிக்கிறது.
- இந்தியா, சீனா மற்றும் பிரேசில் ஆகிய மூன்று பெரிய வளர்ந்து வரும் நாடுகள் ஒரு கூட்டாக, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து ஒரு வருடாந்திர உலகளாவிய வளர்ச்சியில் தோராயமாக 60% பங்களித்துள்ளன.

- 2026 மற்றும் 2027 ஆம் நிதியாண்டுகளில் (வளர்ச்சி விகிதம் - 6.7%) இந்தியா வேகமாக வளரும் பெரிய பொருளாதாரமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## உலகின் மிகப்பெரிய ராணுவச் செலவினம் கொண்ட நாடு 2025

- 2024 ஆம் ஆண்டில் உலகளாவியப் பாதுகாப்பு செலவினங்கள் சுமார் 2.46 டிரில்லியன் டாலரை எட்டின.
- 2025 ஆம் ஆண்டில் அமெரிக்கா உலகின் மிகப்பெரிய ராணுவச் செலவினம் கொண்ட நாடாக உள்ளது.
- இப்பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்து முன்னணி வகிப்பது மட்டுமல்லாமல், உலகின் முதல் ஐந்து ராணுவச் செலவினங்களில் 62.3 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.
- சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை முறையே 18.6 சதவீதம் மற்றும் 8.8 சதவீதப் பங்குடன் அமெரிக்காவைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன.
- இந்த உலகளாவிய ஆயுதக் குறியீட்டில் நான்காவது இடத்தில் இடம் பெற்றுள்ளதுடன், இந்தியா உலகின் முன்னணி ராணுவ சக்திகளில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டு உள்ளது.

## ஆசியா மற்றும் பசிபிக் SDG முன்னேற்ற அறிக்கை 2025

- இது ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தினால் (ESCAP) வெளியிடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டில் சுமார் 54 சதவீதக் குறிகாட்டிகள் ஆனது குறைந்தது இரண்டு தரவு புள்ளிகளைக் கொண்டுள்ளதுடன் ஆசியா மற்றும் பசிபிக் நாடுகள் நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது.
- மிகக் குறிப்பாக வயது, உடல் குறைபாடு, பாலினம் மற்றும் இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு தொடர்பாக குறிப்பிடத்தக்க சில இடைவெளிகள் உள்ளன.

## குவாண்டம் பொருளாதாரம் குறித்த WEF அறிக்கை

- "Embracing the Quantum Economy: A Pathway for Business Leaders" என்று பெயரிடப்பட்ட ஒரு அறிக்கையினை உலகப் பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய குவாண்டம் தொழில்நுட்பச் சந்தை ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 125 பில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா போன்ற குவாண்டம் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மேம்பாட்டில் முதலீடு செய்யும் நாடுகள் ஆனது, பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப முன்னணித்துவத்தில் பல்வேறு உத்தி சார் நன்மைகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## பெண்களின் சுகாதார நலனில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கான செயல்திட்டம் குறித்த அறிக்கை

- இந்த அறிக்கையானது உலகப் பொருளாதார மன்றம் மற்றும் மெக்கின்சி சுகாதார நிறுவனம் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டது.

- ஆண்களுடன் ஒப்பிடும் போது, பெண்கள் தங்கள் வாழ்நாளில் 25% நாட்கள் அதிகமாக உடல்நலம் குன்றிய நிலையில் வாழ்கின்றனர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 9 பாதிப்பு நிலைகள், பெண்களின் சுகாதார இடைவெளியில் 1/3 பங்கினைக் கொண்டுள்ளன.
- கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பகப் புற்றுநோய், பேறுகாலத்திய உயர் இரத்த அழுத்தக் கோளாறுகள் போன்றவை அவர்களின் ஆயுட்காலத்தினையும், ஆரோக்கியத்தையும் பாதிக்கும் நிலைகளும் இதில் அடங்கும்.
- இந்த சுகாதார இடைவெளியை நிவர்த்தி செய்வது, 2040 ஆம் ஆண்டிற்குள் உலகின் வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1 டிரில்லியன் டாலரை உருவாக்க உதவும்.

## உலக நன்மதிப்புத் தரவரிசை 2025

- கல்வி சார் நன்மதிப்பு மற்றும் சிறப்பிற்காகப் புகழ்பெற்ற உலகெங்கிலும் உள்ள சிறந்தப் பல்கலைக்கழகங்களின் பட்டியலில் ஹார்வர்டு பல்கலைக்கழகம் ஆனது முன்னணி நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான உலக நன்மதிப்பு தரவரிசையில் ஹார்வர்டு பல்கலைக் கழகம் தொடர்ந்து முதலிடத்தைப் பிடித்திருப்பது இது தொடர்ந்து 14வது ஆண்டாகும்.
- ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக நிறுவனம் மற்றும் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (MIT) ஆகியவை கூட்டாக இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்து கொள்கின்றன.
- முதல் 7 இடங்களில் மிக அதிகம் என்ற தரவரிசைப் பெற்ற ஐக்கியப் பேரரசு நிறுவனம் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மட்டுமே ஆகும் என்ற நிலையில் இதர நிறுவனங்கள் அமெரிக்க பல்கலைக்கழகங்கள் ஆகும்.
- இந்த ஆண்டு, 38 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த 300 நிறுவனங்கள் டைம்ஸ் உயர் கல்வி இதழால் (THE) தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (IISc) ஆனது, 2023 ஆம் ஆண்டில் 101 முதல் 125 வரையிலான இடங்களில் இருந்து சுமார் 201 முதல் 300 வரையிலான இடங்களுக்குச் சரிந்துள்ளது.
- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகிய நிறுவனங்கள் இந்தத் தரவரிசையில் தனது இடத்தில் இருந்து சரிந்து, இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் இடம் பெற்றுள்ள 201 முதல் 300 வரையிலான இடங்களில் சேர்ந்துள்ளன.
- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது 151-175 என்ற குழுவில் இருந்து 201-300 என்ற குழுவிற்குச் சரிந்துள்ள அதே நேரத்தில் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது 176-200 என்ற குழுவிலிருந்து 201-300 குழுவிற்குச் சரிந்துள்ளது.
- முந்தைய ஆண்டில் 151-175வது தரவரிசையில் இருந்த மும்பையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகம் ஆனது இப்பட்டியலில் இடம் பெறவில்லை.
- 201-300 என்ற குழுவில் இடம் பெற்றுள்ள ஒடிசாவின் புவனேஸ்வரில் அமைந்துள்ள ஒரு தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகமான ஷிக்சா 'ஓ' அனுசந்தன் ஆனது இந்தப் பட்டியலில் புதிதாக நுழைந்துள்ளது.

## மின்சாரப் பயன்பாட்டு 2025 அறிக்கை – IEA

- சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA), மிகச்சமீபத்தில் 2025 ஆம் ஆண்டு மின்சாரப் பயன்பாட்டு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய எரிசக்தி தேவையானது, 2024 ஆம் ஆண்டில் சுமார் 4.3% அதிகரித்துள்ளது மற்றும் 2027 ஆம் ஆண்டு வரையில் 4 சதவீதத்தினை ஒட்டி தொடர்ந்து அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- சீனாவானது அமெரிக்கா அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தை முந்தி மின்சாரத்தை மிக அதிகமாகப் பயன்படுத்தும் நாடாக உருவெடுத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 1% அதிகரிப்பைத் தொடர்ந்து, 2025 முதல் 2027 ஆம் ஆண்டு வரையில் மின்சார உற்பத்தியில் இருந்து வெளியாகும் ஒரு உலகளாவிய $CO_2$ உமிழ்வு ஆனது நிலைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2025-2027 ஆம் காலக் கட்டத்திலிருந்து, மின்சாரத் தேவையின் அதிகரிப்பில் சுமார் 95% தேவையினை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூர்த்தி செய்யும்.
- இந்தியாவின் மின்சாரத் தேவையானது, 2024 ஆம் ஆண்டில் 5.8% அதிகரித்துள்ளது, மேலும் 2025-2027 ஆண்டு முதல் ஆண்டுதோறும் சராசரியாக 6.3% அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் அணுசக்தி திறன் ஆனது 2024 ஆம் ஆண்டில் 13% அதிகரித்துள்ளது.
- 2032 ஆம் ஆண்டில் இந்தியாவின் அனல் மின் உற்பத்தித் திறன் சுமார் 283 GW ஆக அதிகரிக்கும்.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் மின் உற்பத்தி மூலங்களின் பங்கில் 74% பங்குடன் நிலக்கரி முன்னிலையில் செலுத்துகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கு ஆனது, 21 சதவீதத்திலிருந்து (2024) 27% (2027) ஆக அதிகரிக்கும்.

# மாநிலச் செய்திகள்

## கொரகா பழங்குடியினரின் மக்கள் தொகை

- பிறப்பு விகிதம் மிகவும் குறைந்து பச்சிளம் குழந்தை உயிரிழப்பு விகிதம் அதிகரித்து வருவதால், கொரகா பழங்குடியினரின் மக்கள் தொகை மிக வெகுவாகக் குறைந்து வருகிறது.
- சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, கொரகர்களின் எண்ணிக்கையானது 20,000 ஆக இருந்தது, ஆனால் தற்போது இது 16,000 ஆகக் குறைந்துள்ளது.
- கொரகா பழங்குடியினர் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுவாக (PVTG) வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
- அவர்கள் முதன்மையாக தட்சிண கர்நாடக மாவட்டத்திலும் உடுப்பி மாவட்டத்திலும் வசிக்கின்றனர்.

## கஞ்சா சாகுபடி சோதனைத் திட்டம்

- ❖ மருத்துவம் மற்றும் தொழில்துறை நோக்கங்களுக்காக வேண்டி கஞ்சாப் பயிர்களை கட்டுப்படுத்தப் பட்ட முறையில் பயிரிடுவது குறித்து இரண்டு பல்கலைக்கழகங்கள் நடத்திய ஒரு சோதனை ஆய்விற்கு இமாச்சலப் பிரதேச மாநில அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- ❖ மத்தியப் பிரதேசம், ஜம்மு & காஷ்மீரில் ஏற்கனவே, அத்தகைய சாகுபடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தச் சோதனைத் திட்டம் வெற்றியடைந்தால், கட்டுப்படுத்தப்பட்ட கஞ்சாப் பயிர்ச் சாகுபடியை அனுமதிக்கும் நான்காவது மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் மாறும்.
- ❖ 2018 ஆம் ஆண்டில் கட்டுப்படுத்தப்பட்ட கஞ்சாப் பயிர் சாகுபடியை அனுமதித்த முதல் மாநிலம் உத்தரகாண்ட் ஆகும்.

## சாக்லேட் போர் - ஜார்க்கண்ட் காவல்துறை

- ❖ ஜார்க்கண்ட் மாநிலக் காவல்துறையானது, மாநிலத்தின் கிராமப்புற மக்களிடையே ஓபியம் சாகுபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை மிகவும் நன்கு சோதிப்பதற்காக வேண்டி ஒரு தனித்துவமான முன்னெடுப்பினை மேற்கொண்டு அதற்கு "சாக்லேட் போர்" என்று பெயரிட்டுள்ளது.
- ❖ இந்த முன்னெடுப்பின் கீழ், காவல்துறையினர் வாராந்திர கிராமச் சந்தைகளுக்குச் சென்று, ஓபியம் சாகுபடியின் சட்டரீதியான விளைவுகள் பற்றிய தகவல்கள் அடங்கிய உறைகளில் சுற்றப்பட்ட சாக்லேட்டுகளை விநியோகிக்கின்றனர்.
- ❖ மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், அந்த மாநிலத்தின் குந்தி மாவட்டம் ஆனது இந்த நடவடிக்கைகளால் மிக அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாகும் என்ற ஒரு நிலையில் அந்தப் பகுதியில் ஓபியம் 'முக்கியப் பயிராக' மாறியுள்ளது.

## டீபோர் பீல் பறவைகள் கணக்கெடுப்பு 2025

- ❖ 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வலசை போகும் மற்றும் உள்நாட்டுப் பறவைகளின் எண்ணிக்கையினை விட சமீபத்திய, 3வது வருடாந்திர டீபோர் பீல் குளிர்காலப் பறவைகள் (2025) கணக்கெடுப்பில் அதன் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- ❖ டீபோர் பீல் என்பது அசாம் மாநிலத்தில் உள்ள காம்ரூப் என்ற மாவட்டத்தில் உள்ள கௌஹாத்தியின் புறநகரில் அமைந்துள்ள ஒரு வற்றாத நன்னீர் ஏரியாகும்.

## My NREGA செயலி – பார்மெர், ராஜஸ்தான்

- ❖ 2020 ஆம் ஆண்டு பணித் தொகுதியைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சித்தார்த் பழனிச்சாமி, My NREGA செயலியை உருவாக்குவதற்கான முன்னெடுப்பினை மேற்கொண்டார்.
- ❖ இந்தச் செயலி MNREGA திட்டத்தின் பயனாளிகளாக உள்ள தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு கோரிக்கை செயல்முறையை எளிதாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இது அவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தே வேலைக்கு எளிதாக விண்ணப்பிக்க வழி வகை செய்கிறது.

## இராஜஸ்தான் மதமாற்ற எதிர்ப்பு மசோதா 2025

- இராஜஸ்தான் சட்டமன்றம் வலுக்கட்டாயமாக, மோசடி அல்லது தூண்டுதலால் மேற் கொள்ளப் படும் மத மாற்றங்களைத் தடுப்பதற்காக் என ஒரு மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த மசோதாவானது, சட்டவிரோதமாக மதமாற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு மிகவும் குறைந்த பட்சம் 15,000 ரூபாய் அபராதத்துடன் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று இந்த மசோதா கூறுகிறது.
- 18 வயதிற்குட்பட்ட ஒருவர், ஒரு பெண் அல்லது பட்டியலிடப்பட்ட சாதியினர் அல்லது பட்டியலிடப் பட்ட பழங்குடியினரை (SC/ST) இலக்காக வைத்து சட்டவிரோதமாக மத மாற்றம் செய்தால், இரண்டு முதல் 10 ஆண்டுகள் வரையில் தண்டனை விதிக்கப்படும் மற்றும் 25,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.
- சட்ட விரோதமானக் கூட்டு மத மாற்றத்திற்கு, குறைந்தபட்சம் ஆக 50,000 ரூபாய் அபராதத்துடன் மூன்று முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப் படும்.

## 'திம்சா' நடனம்

- ஆந்திரப் பிரதேசத்தின் அனகப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மலை உச்சியில் அமைந்த ஒரு மிகவும் குக்கிராமமான நீலபந்தாவைச் சேர்ந்தப் பழங்குடியினக் குடும்பங்கள் சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முறையாக மின்சார வசதியினைப் பெற்றன.
- திம்சா என்பது ஆந்திரப் பிரதேசத்தில் பகதா, வால்மீகி, போரஜா, கோண்ட், கடபா, கோண்டடோரா, முகடோரா மற்றும் கோட்டியா பழங்குடியினரால் நிகழ்த்தப்படும் ஒரு பிரபலமானப் பழங்குடியின நடனமாகும்.
- புராணங்கள், நாட்டுப்புறக் கதைகள், பொருளாதார நடவடிக்கைகள், உறவினர்கள் மற்றும் திருமண வாழ்க்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு கருப் பொருள்களுடன் கூடிய இந்த நடனம் ஆனது அவர்களது ஒற்றுமை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தினை அடையாளப்படுத்துகிறது.
- இதில் சுமார் 12 வகையான திம்சா நடனங்கள் உள்ளன என்பதோடு இதன் தோற்றுரு கோண்ட் பழங்குடியினரின் தாயகமான கோராபுட் பகுதியைச் சேர்ந்ததாகக் கூறப் படுகிறது.
- ஒரு குழுவில் 20 பேர்களை உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்படும் இந்த நடன முறையில் காற்று மற்றும் தாள வாத்தியங்களால் எழுப்பப்படும் இசைக்கு ஏற்ப அந்த நடனம் மாறுகிறது.

## பீகாரில் மக்கானா வாரியம்

- பீகார் மாநிலத்தில் "தாமரை / மக்கானா விதை வாரியம்" நிறுவப்பட உள்ளதாக ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- இது தாமரை விதையின் உற்பத்தி, பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டல் மற்றும் அதன் சந்தைப் படுத்தலை மேம்படுத்தும்.
- பீகார் மாநிலமானது இந்தியாவின் தாமரை விதை உற்பத்தியில் சுமார் 90% அளவில் பங்கினைக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், 'மிதிலா மக்கானா' ரகமானது புவிசார் குறியீட்டினை (GI) பெற்றது.

## மின்சார வாகன உள்கட்டமைப்பு நிலை 2025

- மிகவும் அதிக மின்சார வாகனங்கள் (EV) மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு எனத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.
- எண்ணெய்ச் சந்தைப்படுத்துதல் நிறுவனங்களால் நிறுவப்பட்ட மின்சார மின்னேற்ற நிலையங்களின் எண்ணிக்கையில் சுமார் 2,561 நிலையங்களுடன் உத்தரப் பிரதேசம் முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (1,595), கர்நாடகா (1,516), இராஜஸ்தான் (1,482) மற்றும் தமிழ்நாடு (1,448) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## பசால்ட் அகழ்வு – தியோச்சா பச்சாமி

- மேற்கு வங்காளத்தின் பிர்பும் மாவட்டத்தில் தியோச்சா பச்சாமி நிலக்கரி சுரங்கத் திட்டத்தின் பணிகள் சமீபத்தில் தொடங்கின.
- பசால்ட் அகழ்வுப் பணிகள் ஆனது, பசால்ட்டின் தடிமனான அடுக்கின் கீழ் நிலக்கரி இருப்பு ஆனது கண்டறியப்பட்டதால், அந்த நிலக்கரிச் சுரங்கத்தினைச் செயல்பட செய்வதற்கான முதல் முக்கிய படிநிலையாக கருதப்படுகிறது.

## ஆந்திரப் பிரதேசத்தில் கோபி மீன்

- ஆந்திரப் பிரதேசத்தில் காக்கிநாடாவிற்கு மிக அருகிலுள்ள கோரிங்கா வனவிலங்குச் சரணாலயத்தில் ஹெமிகோபியஸ் ஹோரவெனி & முகிலோகோபியஸ் டைக்ரினஸ் ஆகிய இரண்டு வகையான கோபி வகை மீன்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- அவை இதற்கு முன்னதாக ஆந்திரப் பிரதேசத்தில் கண்டறியப்பட்டதில்லை.
- இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் முதன்முறையாக M. டைக்ரினஸ் வகை இனம் கண்டுபிடிக்கப் பட்டதால் இந்த கண்டுபிடிப்பு குறிப்பிடத் தக்கதாகக் கூறப்படுகிறது.
- இந்த இரண்டு இனங்களும் பொதுவாக "கோபி மீன்கள்" என்று அழைக்கப்படும் மீன் இனக் குழுவைச் சேர்ந்தவையாகும்.
- பெரும்பாலான கோபி மீன்கள் கழிமுகப் பகுதிகளில், குறிப்பாக சதுப்புநிலங்களைச் சுற்றியப் பகுதிகளில் காணப்படுகின்றன.

## மொரண்ட்-கஞ்சல் நீர்ப்பாசனத் திட்டம்

- மத்தியப் பிரதேசத்தில் மொரண்ட்-கஞ்சல் என்ற நீர்ப்பாசனத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் ஆனது புலிகள் நடமாடும் வனப் பகுதிகளை மூழ்கடிக்கக் கூடும் என்று தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) எச்சரித்துள்ளது.
- இந்தத் திட்டத்தில், மாநிலத்தின் ஹோஷங்காபாத், பெதுல், ஹர்தா மற்றும் காண்ட்வா மாவட்டங்களில் நீர்ப்பாசனத்தை மேம்படுத்துவதற்காக மொரண்ட் மற்றும் கஞ்சல் நதிகளில் இரண்டு அணைகள் கட்டப்பட உள்ளது.

## நகோபா ஜடாரா 2025 - தெலுங்கானா

- தெலுங்கானாவின் இந்தர்வெல்லி மண்டலத்தில் உள்ள கெஸ்லாப்பூர் கிராமத்தில் 'நகோபா ஜடாரா' கொண்டாடப்படுகிறது.

- இது ராஜ் கோண்ட் மற்றும் பிரதான் இனப் பழங்குடியினரின் மெஸ்ராம் குலத்தின் போய்குட்டா கிளையின் புகழ்பெற்ற வருடாந்திரப் பழங்குடியின திருவிழா ஆகும்.
- இது தெலுங்கானா மாநிலத்தின் சம்மக்கா சரலம்மா ஜடாராவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது பெரியப் பழங்குடியின விழாவாகும்.
- கோண்ட் பழங்குடியினர் உலகின் மிகப்பெரிய பழங்குடியினக் குழுக்களில் ஒன்று என்பதோடு, இது நான்கு பழங்குடியினப் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி

- வடகிழக்கு மலை மாநிலமான மணிப்பூரில் சுமார் இரண்டு ஆண்டுகளாக வன்முறை நிலவி வந்ததால், அரசியலமைப்பு நெருக்கடியைக் குறிப்பிட்டுக் காட்டி குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ் அம்மாநிலம் கொண்டு வரப் பட்டுள்ளது.
- 1951 ஆம் ஆண்டிற்குப் பிறகு இம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப் படுவது இது 11வது முறையாகும்.
- மணிப்பூரில் கடைசியாக குடியரசுத் தலைவர் ஆட்சி 2001 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதி அன்று தொடங்கி, 277 நாட்கள் வரை நீடித்து 2002 ஆம் ஆண்டு மார்ச் 06 ஆம் தேதி அன்று முடிவடைந்தது.
- 1950 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு அமலுக்கு வந்ததிலிருந்து, குடியரசுத் தலைவர் ஆட்சி மொத்தம் 134 முறை விதிக்கப்பட்டுள்ளது.

## பாங்சாவ் கணவாய் திருவிழா 2025

- பாங்சாவ் கணவாய் சர்வதேசத் திருவிழாவானது, அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள நம்போங் எனுமிடத்தில் நடைபெற்றது.
- பாங்சாவ் கணவாய் அல்லது பான் சாங் கணவாய் ஆனது 3,727 அடி (1,136 மீ) உயரத்தில் அமைந்துள்ளது.
- இது இந்தியா-மியான்மர் எல்லையில் உள்ள பட்காய் மலையின் உச்சியில் உள்ளது.
- அசாம் சமவெளியில் இருந்து பர்மாவிற்கு செல்வதற்கான எளிதான வழிகளை இந்தக் கணவாய் வழங்குகிறது.
- இந்தோ-பர்மா பட்காய் மலைத்தொடரில் உள்ள மிகக் கடினமான நிலப்பரப்புகளின் காரணமாக இந்த பாங்சாவ் கணவாய் ஆனது "நரக வாசல்" அல்லது "நரகக் கணவாய்" என்று அழைக்கப்படுகிறது.

## சிலிகா ஏரி பறவைகள் கணக்கெடுப்பு 2025

- 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரக் குளிர்காலத்தின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப் படும் நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பில், 196 வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த சுமார் 11 லட்சத்துக்கும் அதிகமான பறவைகள் சிலிக்கா ஏரியில் குவிந்துள்ளன.
- இந்த ஏரிக்கு வருகை தரும் பறவை இனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
- கடந்த ஆண்டு சுமார் 11.37 லட்சமாக இருந்த பறவைகளின் எண்ணிக்கையினை விட தற்போது 10,000 குறைவு பதிவாகியுள்ளது.

- இந்தப் பருவத்தில் 109 வலசை போகும் பறவைகள் மற்றும் 87 உள்நாட்டுப் பறவைகள் சிலிக்கா ஏரியில் சுற்றித் திரிகின்றன.
- கடந்த ஆண்டு சுமார் 187 இனங்கள் (108 வலசை போகும் இனம் மற்றும் 79 உள்நாட்டுப் பறவைகள்) கண்டறியப்பட்டன.

## இந்தியாவின் முதல் முதியோர் ஆணையம்

- கேரளா இந்தியாவின் முதல் முதியோர் ஆணையத்தினை நிறுவ உள்ளது.
- இது மிக விரைவாக அதிகரித்து வரும் முதியோர் மக்கள்தொகையினால் ஏற்படும் பல சவால்களை நிவர்த்தி செய்வதையும், முதியோர்களின் உரிமைகள், நலன்புரி மற்றும் சமூக ஒருங்கிணைப்பை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2036 ஆம் ஆண்டில் கேரளாவின் முதியோர் மக்கள் தொகையானது 8.4 மில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## TrailGuard AI அமைப்பு

- ஒடிசா மாநிலத்தின் சிமிலிபால் புலிகள் வளங்காப்பகத்தில், அதன் காடுகளுக்குள் வேட்டையாடுபவர்கள் மற்றும் வன விலங்குகளின் நடமாட்டம் பற்றிய சில நிகழ்நேர எச்சரிக்கைகளை அனுப்புகின்ற, ஒரு செயற்கை நுண்ணறிவால் (AI) இயக்கப்பட்ட 100 முதல் 150 புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- அந்தப் புகைப்படக் கருவியானது பின்னர் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்டறிதலை மேற்கொள்கிறது அதாவது படத்தில் உள்ள 'விலங்குகள்', 'மனிதர்கள்' மற்றும் 'வாகனங்கள்' போன்ற பல்வேறு பொருள்களை வேறுபடுத்துவதற்காக என்று அதனுள் உள்ள சில்லுகளைப் பயன்படுத்துகிறது.
- செயற்கை நுண்ணறிவு தேவையான சூழலில் ஒரு ஒளிப்படக் கருவியுடன் இணைக்கப் பட்ட தகவல் தொடர்பு அமைப்பைப் பயன்படுத்தி சுமார் 30 - 40 வினாடிகளில் ஒரு புகைப்படத்தினை இறுதிப் பயனருக்குத் தன்னியக்கமாக அனுப்புகிறது.

## nPROUD முன்னெடுப்பு

- கேரள மாநிலம் nPROUD என்ற முன்னெடுப்பினை (பயன்படுத்தப்படாத மருந்துகளை அகற்றுவதற்கான புதிய திட்டம்) தொடங்க உள்ளது.
- இது காலாவதியான மற்றும் பயன்படுத்தப்படாத மருந்துகளைச் சேகரித்து அறிவியல் பூர்வமான முறைகள் மூலம் அப்புறப்படுத்துவதற்காக இந்தியாவில் மேற்கொள்ளப் பட உள்ள இது போன்ற முதல் வகையான முன்னெடுப்பாகும்.

## டெல்லியின் புதிய முதல்வர்

- முதல் முறையாக மாநிலச் சட்டமன்ற உறுப்பினரான ரேகா குப்தா டெல்லியின் புதிய முதல்வராக பதவியேற்றுள்ளார்.
- மொத்தம் 70 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் 48 இடங்களைப் பெற்று, 27 ஆண்டுகளுக்குப் பிறகு அவரின் கட்சியான பாஜக தேசிய தலைநகரில் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருகிறது.

- அவர் 2007 ஆம் ஆண்டு வடக்கு பிதாம்பூராவிலிருந்து கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## பத்தல் கிராமத்தில் ஆர்கனோபாஸ்பேட் நச்சு

- ஜம்மு-காஷ்மீரின் பத்தல் என்ற கிராமத்தில் பதட்ட நிலையை ஏற்படுத்திய 17 பேரின் உயிரிழப்பிற்கு ஆர்கனோபாஸ்பேட் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.
- இந்த இரசாயனங்கள் ஆனது தீங்குயிர்க் கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளில் பயன்படுத்தப்படுகின்றன.
- ஆர்கனோபாஸ்பேட்டுகள் என்பது மிகப் பொதுவாக பூச்சிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்கவும், பூச்சிகளால் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தச் செய்யவும் என்று பயன்படுத்தப் படுகின்றன.
- ஆர்கனோபாஸ்பேட்டுகள் என்பது செயற்கை இரசாயனங்கள் ஆகும்.
- ஆரம்பத்தில் நரம்புத் தூண்டுதல் முகவர் காரணியாக இராணுவப் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட இவை பின்னர் வேளாண் நோக்கங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப் பட்டன.

## உத்தரகாண்ட் நிலச் சட்டத் திருத்த மசோதா

- உத்தரகாண்ட் மாநில அமைச்சரவையானது பூ கனூன் (நிலச் சட்டத் திருத்த மசோதா) மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 11 மலைப்பாங்கான மாவட்டங்களைச் சேராத நபர்கள், அங்கு வேளாண்மை / தோட்டக் கலை மற்றும் குடியிருப்பு நிலங்களை வாங்குதல் மற்றும் அதை விற்பனை செய்தல் தொடர்பான கடுமையான விதிகளைக் கொண்டிருக்கும்.
- வேளாண் நிலங்களை வாங்குவதற்கான முழுமையான தடை மாநிலத் தலைநகரான டேராடூன் மற்றும் வேறு சில மாவட்டங்களில் பொருந்தும்.
- ஹரித்வார் மற்றும் உதம் சிங் நகர் போன்ற மாவட்டங்களில் வேளாண்/தோட்டக்கலை நிலங்களை வாங்க அனுமதிக்கப்படும்.

## மிசிங் பழங்குடியினர் - அலி ஐ லிகாங் திருவிழா

- அசாம் மாநிலத்தின் மிசிங் பழங்குடியினர், சமீபத்தில் அலி அய் லிகாங் என்ற ஒரு திருவிழாவைக் கொண்டாடினர்.
- அவர்கள் அசாமில் உள்ள மிகப் பெரியப் பழங்குடியினச் சமூகமாகும்.
- சில உள்ளார்ந்த வேளாண் மரபுகளைக் கொண்ட இந்தத் திருவிழாவானது, விதைப்புப் பருவத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- இந்தத் திருவிழாவில் ஆண்களும், பெண்களும் தாளத்திற்கு ஏற்றவாறு ஆடுகின்ற ஒரு பாரம்பரிய கும்ராக் நடனமும் அடங்கும்.
- அவர்கள் திபத்திய - பர்மிய மொழிகளைப் பேசும் தானி சமூகத்தின் ஒரு பகுதியினர் ஆவர்.

### பதௌயிசம் - அசாமின் BTR பகுதியில் காணப்படும் அதிகாரப்பூர்வ மதம்

- அசாமில் உள்ள போடோலாந்து பிராந்தியப் பகுதி (BTR) அரசாங்கம் ஆனது, பல்வேறு விண்ணப்பப் படிவங்களில் மதங்களுக்கான நெடுவரிசையில் 'பதௌயிசம்' என்ற மதத்தினை அதிகாரப்பூர்வ விருப்பத் தேர்வாக சேர்த்துள்ளது.
- அசாமின் மிகப்பெரிய சமவெளி வாழ பழங்குடியினரான போடோக்களின் பாரம்பரிய மத நம்பிக்கை பதௌயிசம் ஆகும்.
- இருப்பினும் போடோ சமூகம் காளிச்சரன் பிரம்மாவின் சீர்திருத்த இயக்கங்கள் போன்ற இயக்கங்களை எதிர் கொண்டிருந்தாலும் இது போடோக்களின் மூதாதையர் சார் நம்பிக்கையாக இருந்து வருகிறது.
- இந்த மத நம்பிக்கை அமைப்பு ஆனது, பார் (காற்று), சான் (சூரியன்), ஹா (பூமி), ஓர் (நெருப்பு) மற்றும் ஒக்ராங் (வானம்) ஆகிய ஐந்து கூறுகளை அடிப்படையாகக் கொண்டது.
- பதௌ மத நம்பிக்கை ஆனது சிஜோவ் தாவரத்தினை (யூபோர்பியா ஸ்ப்ளென்டென்ஸ்) அடிப்படையாகக் கொண்டது.

### பலமு புலிகள் சரணாலயம் 2025 நிலை

- ஜார்க்கண்ட் மாநிலத்தில் முதன்முறையாக, பலமு புலிகள் சரணாலயத்திலிருந்து (PTR) வெளியேறிய புலி ஆனது அதன் சொந்தப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டது.
- ஜாம்ஷெட்பூரில் அமைந்துள்ள டால்மா வனவிலங்கு சரணாலயம் (தங்குமிடம்) ஆனது யானைகளின் வாழ்விடத்திற்குப் பிரபலமானதாகும்.
- பலமு புலிகள் சரணாலயம் ஆனது, கால்தட எண்ணிக்கையின் அடிப்படையில் புலிகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட உலகின் முதல் சரணாலயமாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

| நபர்கள் | தொடர்புடைய துறைகள் | குறிப்பு |
|---|---|---|
| **ஹரிமன் ஷர்மா** | இந்திய விவசாயம் | இந்தியாவின் ஆப்பிள் மனிதன் |
| **லிபியா லோபோ சர்தேசாய்** | கோவா விடுதலை போராட்ட வீரர் | பத்மா பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது |
| **அணித் தலைவர் சுபன்ஷு சுக்லா** | | சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) பயணிக்க உள்ள முதல் இந்திய விண்வெளி வீரர் |
| **நிர்மலா சீதாராமன்** | நிதி அமைச்சர் | தொடர்ந்து எட்டாவது நிதிநிலை அறிக்கையினை தாக்கல் |
| **சுனிதா வில்லியம்ஸ்** | விண்வெளி வீரர் | விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் சுமார் 62 மணி நேரம் 6 நிமிடங்கள் நடந்து சென்ற பெண்மணி |
| **K. அலமேலு** | சாரணர் உறுப்பினர் | 75வது வைர விழா மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழாவின் போன்ற முக்கிய நபர் |

| | | |
|---|---|---|
| **ட்ஷெகோ கயிலே** | திருமதி உலக அழகிப் பட்டம் 2025 | போட்டியின் 40 ஆண்டுகால வரலாற்றில் இந்தப் பட்டத்தினை வென்ற முதல் கறுப்பினப் பெண்மணி |
| **முகமது ரஃபி** | பின்னணிப் பாடகர் | 100 ரூபாய் மதிப்பிலான நினைவு நாணயத்தினை வெளியிட அரசு முடிவு |
| **C. சுப்பிரமணியம்** | முன்னாள் மத்திய அமைச்சர் | NAF அறக்கட்டளையின் (NAF) நிறுவனத்தின் நிறுவனர் |
| **R.M. வாசகம்** | விண்வெளி அறிவியலாளர் | இந்தியாவின் பாஸ்கரா செயற்கைக் கோளின் திட்ட இயக்குநர் |

| **BCCI வருடாந்திர விருதுகள் 2025** | |
|---|---|
| **ஜஸ்பிரித் பும்ரா** | சிறந்த சர்வதேச ஆடவர் கிரிக்கெட் வீரருக்கான பாலி உம்ரிகர் விருது 2023-24. |
| **சச்சின் டெண்டுல்கர்** | கர்னல் C.K.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது |
| **ஸ்மிருதி மந்தனா** | சிறந்த சர்வதேசக் கிரிக்கெட் வீராங்கனை விருது 2023-24 |
| **இரவிச்சந்திரன் அஷ்வின்** | சிறப்பு விருது |
| **சர்பராஸ் கான்** | சிறந்த சர்வதேச அறிமுக வீரருக்கான விருது |
| **ஆஷா சோபனா** | சிறந்த சர்வதேச அறிமுக வீராங்கனை விருது |
| **மந்தனா** | ஒருநாள் போட்டிகளில் அதிக ரன்கள் எடுத்தவர் |
| **தீப்தி சர்மா** | ஒருநாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர் |
| **தனுஷ் கோட்டியன்** | BCCI உள்நாட்டுப் போட்டிகள் கோப்பையில் சிறந்த ஆட்டத்திற்கான விருது |
| **மும்பை கிரிக்கெட் சங்கம்** | BCCI உள்நாட்டுப் போட்டிகள் கோப்பையில் சிறந்த ஆட்டத்திற்கான விருது |
| **அக்ஷய் டோட்ரே** | உள்நாட்டுக் கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த நடுவர் |
| **2024 ஆம் ஆண்டிற்கான BBC விருது பெற்றவர்கள்** | |
| **மனு பாக்கர்** | 2024 ஆம் ஆண்டிற்கான BBC இந்திய விளையாட்டு வீராங்கனை விருது |
| **ஷீத்தல் தேவி (வில்வித்தை)** | BBCயின் வளர்ந்து வரும் வீராங்கனை விருது |
| **மிதாலி ராஜ் (கிரிக்கெட்)** | வாழ்நாள் சாதனையாளர் விருது |
| **அவனி லேகரா (துப்பாக்கி சுடுதல்)** | சிறந்த இந்திய மாற்றுத் திறனாளி விளையாட்டு வீராங்கனை விருது |

## 5 கின்னஸ் சாதனைகள் - ஆயுஷ் அமைச்சகம்

- ஆயுஷ் அமைச்சகத்தின் தேஷ் கா பிரகிருதி பரிக்சன் அபியான் என்ற ஒரு பிரச்சாரம் ஆனது, முன்னெப்போதும் இல்லாத வகையில் ஐந்து கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்துள்ளது.

- ஒரு வாரத்தில் ஒரு சுகாதாரப் பிரச்சாரத்திற்காக என்று பெறப்பட்ட மிகவும் அதிகபட்ச உறுதிமொழிகளின் எண்ணிக்கை சுமார் 6,004,912 ஆகும் என்ற ஒரு நிலைமையில் இது அதற்கான குறைந்தபட்சத் தேவையான 14,571 என்ற எண்ணிக்கையினை விட அதிகம் ஆகும்.
- ஒரு மாதத்தில் ஒரு சுகாதாரப் பிரச்சாரத்திற்காக பெறப்பட்ட மிகவும் அதிகபட்சமான உறுதிமொழிகள் எண்ணிக்கை 13,892,976 ஆகும்.
- இது சிக்னா & CMB லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (சீனா) நிறுவனம் கொண்டி இருந்த 58,284 உறுதிமொழிகளின் முந்தைய சாதனையை விட அதிகமாகும்.
- இந்த ஒரு சுகாதாரப் பிரச்சாரத்திற்காக பெறப்பட்ட அதிகபட்ச உறுதிமொழிகளின் எண்ணிக்கை 13,892,976 ஆக உள்ளது என்ற நிலைமையில் இது ஜிஃபி FDC லிமிடெட் (இந்தியா) வைத்திருந்த சுமார் 569,057 உறுதிமொழிகளின் முந்தைய சாதனையை விட அதிகமாகும்.
- 62,525 புகைப்படங்களுடன், ஒரு எண்ணிமச் சான்றிதழைக் கொண்டிருக்கும் மக்களின் மிகப்பெரிய இயங்கலை புகைப்படத் தொகுப்பினைக் கொண்டுள்ளது.
- இது அக்சென்ச்சர் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (இந்தியா) நிறுவனம் கொண்டு இருந்த 29,068 புகைப்படங்களின் முந்தைய சாதனையை முறியடிக்கிறது.
- சுமார் 12,798 புகைப்படங்கள் ஒளிப்படக் காட்சியுடன் ஒரே வாக்கியத்தைச் சொல்லும் மிகப்பெரிய இயங்கலை ஒளிப்படக் காட்சித் தொகுப்பு ஆகும்.
- இது கே பராரி, ராகுல் குல்கர்னி மற்றும் நீலம் எட்லபட்கர் (இந்தியா) கொண்டிருந்த 8,992 ஒளிப்படக் காட்சிகள் என்ற முந்தைய சாதனையை முறியடிக்கிறது.

### 14வது AFAF மன்றம் - 2025

- 14வது ஆசிய மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் தொழில்துறை மன்றம் (14AFAF) ஆனது "ஆசிய-பசிபிக் பகுதியில் கடல்சார் பொருளாதாரத்தின் மீதான பெரும் வளர்ச்சியை பசுமைமயமாக்குதல்" என்ற கருத்துருவில் புது டெல்லியில் நடைபெற்றது.
- AFAF ஆனது மலேசியாவின் கோலாலம்பூரைத் தலைமையகமாகக் கொண்ட ஆசிய மீன்வள சங்கத்தினால் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் நிகழ்வாகும்.
- 2007 ஆம் ஆண்டு கொச்சியில் நடைபெற்ற 8வது AFAF நிகழ்விற்குப் பிறகு, இந்த நிகழ்வு ஆனது இந்தியாவில் இரண்டாவது முறையாக நடத்தப்படுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

### மாற்றுத் திறனாளிகளுக்கான 23வது தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி 2025

- 23வது மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கான (2025) அதிகாரப்பூர்வ முத்திரைச் சின்னம் மற்றும் உருவச்சின்னம் ஆகியவை சென்னையில் வெளியிடப் பட்டன.
- இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் நாடு முழுவதிலுமிருந்து சுமார் 1,700க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளி தடகள வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) ஆனது, தமிழ்நாடு மாற்றுத் திறனாளி விளையாட்டுப் போட்டிகள் சங்கத்துடன் இணைந்து இப்போட்டிகளுக்கான ஆதரவினை அளிக்கிறது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய வில்வித்தை கோப்பைப் போட்டி 2025

- உலகத் தரவரிசையிலான ஒரு போட்டியான 2025 ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகளுக்கான வில்வித்தை ஆசியக் கோப்பை தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்றது.
- 27 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய வில்வித்தை அணியானது ஆறு தங்கப் பதக்கங்களை வென்று இந்தப் பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.
- ஒட்டு மொத்தமாக, இந்திய அணியானது ஆறு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் மூன்று வெண்கலம் உட்பட 12 பதக்கங்களை வென்றது.

## தேசிய விளையாட்டுப் போட்டிகள் 2025

- 38வது தேசிய விளையாட்டு போட்டிகள் ஆனது உத்தரகாண்டில் 28 மாநிலங்கள், எட்டு ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் இராணுவப் படைகளின் விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியம் (SSCB) ஆகியவற்றுடன் நடத்தப் பட்டது.
- இதில் ராணுவப் படைகள் கடந்த முறையை விட அதிகமாக மூன்று தங்கம் உட்பட ஒன்பது பதக்கங்களைப் பெற்று, மொத்தம் 121 பதக்கங்களை வென்றது (68 தங்கம், 26 வெள்ளி, 27 வெண்கலம்).
- கோவாவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டிற்கான போட்டியில் இது மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- அதற்கு முன்னதாக, அது தொடர்ச்சியாக நான்கு தேசிய விளையாட்டுப் போட்டிகளில் (2007, 2011, 2015 மற்றும் 2022) பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது.
- மகாராஷ்டிரா 198 (54 தங்கம், 71 வெள்ளி, 73 வெண்கலம்) பதக்கங்களுடன் இராணுவப் படைகளை விட அதிக பதக்கங்களை வென்றது ஆனால் அது மிகவும் குறைந்த ஒரு எண்ணிக்கையிலான தங்கப் பதக்கத்தினையே வென்றது.
- ஹரியானா 153 (48 தங்கம், 47 வெள்ளி, 58 வெண்கலம்) பதக்கங்களுடன் இராணுவப் படைகளை விட அதிக பதக்கங்களைப் பெற்றது.
- தமிழ்நாடு (27 தங்கம், 30 வெள்ளி, 34 வெண்கலம்), உத்தரகாண்ட் (24 தங்கம், 35 வெள்ளி, 43 வெண்கலம்), மேற்கு வங்காளம் (16 தங்கம், 13 வெள்ளி, 18 வெண்கலம்), பஞ்சாப் (15 தங்கம், 20 வெள்ளி, 31 வெண்கலம்) மற்றும் டெல்லி (15 தங்கம், 18 வெள்ளி, 29 வெண்கலம்) ஆகியவை இதில் முதல் 10 இடங்களைப் பிடித்தன.

## 9வது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2025

- 9வது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் ஹார்பின் எனுமிடத்தில் நடைபெற்றன.
- இப்போட்டிகளுக்கான அதிகாரப்பூர்வச் சின்னங்கள் ஆனது, "பின்பின்" மற்றும் "நினி" (புலிகள்), மற்றும் அந்தப் போட்டிக்கான ஒரு முழக்கமாக "Dream of Winter, Love among Asia" வெளியிடப்பட்டது.

- சீனா 85 பதக்கங்களுடன் (32 தங்கம், 27 வெள்ளி, 26 வெண்கலம்) பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.
- தென்கொரியக் குடியரசு 45 பதக்கங்களுடன் (16 தங்கம், 15 வெள்ளி, 14 வெண்கலம்) இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- ஜப்பான் 37 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- கஜகஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை இதன் முதல் ஐந்து இடங்களில் இடம் பெற்றன.
- இந்தியா 59 விளையாட்டு வீரர்களைக் கொண்ட மிகப்பெரியக் குழுவை அனுப்பியது, ஆனால் எந்த பதக்கங்களையும் வெல்லவில்லை.

## முக்கிய தினங்கள்

| தினம் | முக்கிய நாட்கள் | கருத்துரு |
|---|---|---|
| **ஜனவரி 30** | தியாகிகள் தினம் | |
| **ஜனவரி 30** | புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான உலக தினம் | Unite. Act. Eliminate |
| **பிப்ரவரி 02** | உலக ஈரநில தினம் 2025 | Protecting Wetlands for Our Common Future |
| **பிப்ரவரி 01** | இந்தியக் கடலோரக் காவல்படை தினம் | |
| **பிப்ரவரி 01/07** | உலக சமய நல்லிணக்க வாரம் 2025 | |
| **பிப்ரவரி 04** | உலகப் புற்றுநோய் தினம் | United by Unique |
| **பிப்ரவரி 02/08** | சர்வதேச மேம்பாட்டு வாரம் - பிப்ரவரி 02 முதல் 08 வரை | Building a better world together |
| **பிப்ரவரி 06** | சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் | Step up the Pace |
| **பிப்ரவரி 10** | சர்வதேச அரேபியச் சிறுத்தை தினம் | |
| **பிப்ரவரி 10** | சர்வதேச வலிப்பு நோய் தினம் | MyEpilepsyJourney |
| **பிப்ரவரி 10** | தேசியக் குடற்புழு நீக்க தினம் | Eliminate STH: Invest in a healthier future for children |
| **பிப்ரவரி 11** | அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் | Unpacking STEM Careers: Her Voice in Science |
| **பிப்ரவரி 11** | கடத்தல் எதிர்ப்பு தினம் | |
| **பிப்ரவரி 11** | உலக யுனானி தினம் 2025 | Innovations in Unani Medicine for Integrative Health Solutions |

| | | |
|---|---|---|
| **பிப்ரவரி 11** | பாதுகாப்பான இணைய தினம் 2025 | Together for a Better Internet |
| **பிப்ரவரி 12** | தேசிய உற்பத்தித் திறன் தினம் | From Ideas to Impact: Protecting Intellectual Property for Competitive Startups |
| **பிப்ரவரி 12** | மிகவும் வன்முறை மிக்க பயங்கரவாதத்தினைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் | |
| **பிப்ரவரி 12** | சர்வதேச டார்வின் தினம் 2025 | |
| **பிப்ரவரி 13** | உலக வானொலி தினம் 2025 | |
| **பிப்ரவரி 13** | தேசிய மகளிர் தினம் | |
| **பிப்ரவரி 14** | உலகப் பிறவி இதயக் குறைபாடு விழிப்புணர்வு தினம் | |
| **பிப்ரவரி 15** | சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் தினம் | |
| **பிப்ரவரி 20** | உலக சமூக நீதி தினம் | Empowering Inclusion: Bridging Gaps for Social Justice |
| **பிப்ரவரி 20** | மிசோரம் மாநில உருவாக்க தினம் | |
| **பிப்ரவரி 20** | அருணாச்சலப் பிரதேச மாநில உருவாக்க தினம் | |
| **பிப்ரவரி 21** | சர்வதேச தாய்மொழி தினம் 2025 | |
| **பிப்ரவரி 22** | உலக சிந்தனை தினம் 2025 | Our Story |
| **பிப்ரவரி 18** | சர்வதேச அஸ்பெர்கர் நோய்க்குறி தினம் | |
| **பிப்ரவரி 23** | உலக அமைதி மற்றும் புரிதல் தினம் | |
| **பிப்ரவரி 24** | மத்திய கலால் வரி தினம் | |
| **பிப்ரவரி 27** | உலக அரசு சாரா நிறுவனம் தினம் | Empowering Grassroots Movements for a Sustainable Future |
| **பிப்ரவரி 28** | தேசிய அறிவியல் தினம் 2025 | Empowering Indian Youth for Global Leadership in Science and Innovation for Viksit Bharat |
| **பிப்ரவரி 28** | அரிய நோய்கள் நோய் தினம் 2025 | More than you can imagine; an anthology of the rare experiences. |
| **பிப்ரவரி 24/28** | நிதி சார் கல்வியறிவு வாரம் 2025 | Financial Literacy: Women's Prosperity |

# இராணுவ பயிற்சிகள்

| பயிற்சி பெயர் | பதிப்பு | நாடுகள் | நடைபெற்ற இடம் |
|---|---|---|---|
| **போர்க்களச் செயல்பாட்டுத் தயார்நிலை பயிற்சி (TROPEX-25)** | 25வது பதிப்பு | இந்தியா | கார்வார், கர்நாடகா, இந்தியா |
| **'ஈகுவெரின்'** | 13வது பதிப்பு | இந்தியா, மாலத்தீவுகள் | மாலத்தீவு |
| **'விங்கட் ரைடர்'** | - | இந்தியா (இந்திய இராணுவம், இந்திய விமானப் படை) | கிழக்குப் படைத் தளம், இந்தியா |
| **பலதரப்பு கடற்படை பயிற்சி கோமோடோ** | 5வது பதிப்பு | ரஷ்யா, சீனா, இந்தியா, அமெரிக்கா | இந்தோனேஷியா |
| **தர்மா குவாரியன்** | 6வது பதிப்பு | இந்தியா, ஜப்பான் | மவுன்ட் புஜி, ஜப்பான் |
| **சாகர் கவாச்** | - | இந்தியக் கடலோரக் காவல்படை | மேற்கு வங்கம், இந்தியா |
| **சைக்ளோன் 2025** | மூன்றாவது பதிப்பு | இந்தியா மற்றும் எகிப்து | ராஜஸ்தான் |

# இதரச் செய்திகள்

## 30 கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பு – கர்நாடகா

- சுமார் 30 கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பு ஆனது உடுப்பி மாவட்டத்தின் கர்கலா தாலுக்காவின் அப்பன பெட்டு பசாதியின் மீது கவனத்தை ஈர்த்துள்ளது.
- அவற்றில், 29 கன்னட எழுத்து வடிவிலும், ஒன்று நாகரி எழுத்து வடிவிலும் உள்ளன என்ற நிலையில் இவை தீர்த்தங்கரரின் பெயரை மட்டுமே கொண்டுள்ளன.
- இந்த 16 வரி கொண்ட கல்வெட்டில், சாலுவ பைரராசரின் மனைவி இலட்சுமணாதேவி 24 தீர்த்தங்கரர்களின் பட்டியலை உருவாக்கி அதை பசாதிக்கு வழங்கியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கி.பி.1586 ஆம் ஆண்டு மார்ச் 25 என்ற தேதியிட்ட முற்காலக் கல்வெட்டு ஆனது, சாலுவ பைரராசரின் (இரண்டாம் பைரராசர்) சகாப்தத்தைச் சேர்ந்தது.
- அவர் சுமார் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கலச-கர்கல சமண வம்சத்தின் ஒரு ஆட்சியாளராக இருந்தார்.

## எட்டிகொப்பகா பொம்மைகள்

- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் அணி வகுப்புக் காட்சி வாகனமானது எட்டிகொப்பகா பொம்மைகள் எனப்படும் பண்டைய மர பொம்மைகள் உருவாக்கக் கலையினைச் சித்தரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது.

- இது சுற்றுச்சூழலுக்கு உகந்தப் படைப்பாற்றல் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கு ஒத்ததாக மாறியுள்ள 400 ஆண்டுகள் பழமையான கைவினைப் பொருளாகும்.
- தென்கிழக்கு ஆந்திரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு மிகவும் சிறிய கிராமமான எட்டிகொப்பகாவில், கைவினைஞர்கள் இந்தப் பொம்மை தயாரிக்கும் மிகப்பெரும் பாரம்பரியத்தை குறையின்றி முழுமை பெறச் செய்துள்ளனர்.
- மிகப்பெரும்பாலும் புராணக் கதைகள் அல்லது விலங்குகளைச் சித்தரிக்கும் இந்தப் பொம்மைகள், அவற்றின் குறையற்ற வளைவுகள், சிறப்பான நிறச் சாயல்கள் மற்றும் நுட்பமான வடிவமைப்பிற்காக / விவரங்களுக்காக நீண்ட காலமாகத் தனித்துப் புகழ் பெற்றுள்ளன.

## ரோடமைன் B

- ரோடமைன் B என்பது அதன் மிகப் பிரகாசமான இளஞ்சிவப்பு நிறத்திற்குப் பெயர் பெற்ற ஒரு செயற்கை சாயமாகும் என்பதோடு இது ஜவுளி, காகிதம் மற்றும் தோல் போன்ற தொழில் துறைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.
- அதன் ஒளிரும் பண்புகள் காரணமாக அதன் பயன்பாடு அறிவியல் ஆராய்ச்சி வரை உள்ளது.
- ரோடமைன் B ஆனது டிஎன்ஏ சேதத்தை ஏற்படுத்தி, பிறழ்வுகளுக்கு வழி வகுப்பதோடு, புற்றுநோய் வளர்ச்சியைத் தூண்டும் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.
- இதன் மீதான விலங்கு ஆராய்ச்சியானது, நீண்ட காலமாக சாயத்தின் பயன்பாட்டிற்கு உள்ளானதால் தொடர்ந்து கல்லீரல் மற்றும் சிறுநீர்ப்பை போன்ற சில உறுப்புகளில் கட்டிகள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், தமிழ்நாடு அரசானது பஞ்சு மிட்டாய் உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடை செய்தது.
- கர்நாடக மாநில அரசு, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், பிரபலமானத் தெருவோர உணவு விற்பனைக் கடைகளில் ரோடமைன் B பயன்படுத்துவதைத் தடை செய்தது.

## பாரத் புற்றுநோய் மரபணு தரவுத் தொகுப்பு

- இந்தியாவில் புற்றுநோய் ஆராய்ச்சியை முற்றிலும் மாற்றியமைப்பதற்காக வேண்டி அதன் முதல் வகையிலான புற்றுநோய் மரபணு தரவுத்தளமான பாரத் புற்றுநோய் மரபணு தரவுத்தொகுப்பினை (BCGA) சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது அறிமுகப்படுத்தியுள்ளது.
- 480 மார்பகப் புற்றுநோய்ப் பாதிப்புள்ள நோயாளிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட திசு மாதிரிகளிலிருந்து இது வரை மேற்கொள்ளப்பட்ட 960 முழு எக்ஸோம் (மரபணுவின் முழுமையான குறியீட்டுப் பகுதி) வரிசை முறை பற்றிய தரவு இதில் உள்ளது.

## இராணுவத்தின் கிழக்குத் தலைமையகம் - வில்லியம் கோட்டை

- கிழக்கு ராணுவப் படைப் பிரிவின் படைத் தலைமையகமான கொல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டைக்கு விஜய் துர்க் என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- மேலும், வில்லியம் கோட்டையில் உள்ள கிச்சனர் இல்லம் மானெக்சா இல்லம் எனவும், முன்னர் செயிண்ட் ஜார்ஜ் நுழைவு வாயில் என்று அழைக்கப்பட்ட தெற்கு வாயில் ஆனது தற்போது சிவாஜி நுழைவு வாயில் எனவும் மறுபெயரிடப்பட்டுள்ளன.

- இங்கிலாந்து நாட்டின் மூன்றாம் மன்னர் வில்லியமின் பெயரிடப்பட்ட வில்லியம் கோட்டையானது, 1781 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் கட்டமைக்கப்பட்டது.
- விஜய் துர்க் என்ற புதிய பெயர் ஆனது, மகாராஷ்டிராவின் சிந்துதுர்க் கடற்கரையில் உள்ள பழமையான கோட்டையிலிருந்து பெறப்பட்டது.
- இது சத்ரபதி சிவாஜி அவர்களின் கீழான மராட்டியர்களின் ஒரு கடற்படைத் தளமாகச் செயல்பட்டது.

## உள்நாட்டு விமானங்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

- இந்தியாவின் உள்நாட்டு விமானங்கள் ஆனது 2024 ஆம் ஆண்டில் சுமார் 86.4 சதவீத அளவில் பயணிகள் எண்ணிகையினை எட்டின என்பதோடு இது உலகளவில் மிகவும் உயர்ந்தபட்ச எண்ணிக்கை யாகும்.
- இது இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்த அமெரிக்கா (84.1 சதவீதம்) மற்றும் சீனாவை (83.2 சதவீதம்) விஞ்சியது.
- பிரேசில் சுமார் 81.9 சதவீதப் பயணிகள் எண்ணிக்கையுடன் நான்காவது இடத்தைப் பிடித்தது.
- அதைத் தொடர்ந்து 81.8 சதவீதத்துடன் ஆஸ்திரேலியாவும், 78 சதவீதத்துடன் ஜப்பான் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

## கேரளாவில் புருசெல்லோசிஸ் பாதிப்பு

- கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள கோட்டக்கல்லைச் சேர்ந்த எட்டு வயது சிறுமி புருசெல்லோசிஸ் பாதிப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.
- புருசெல்லோசிஸ் என்பது பெருமளவில் கால்நடைகள், பன்றிகள், ஆடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் நாய்கள் ஆகியவற்றினை மிகவும் பாதிக்கின்ற பல்வேறு புருசெல்லா இனங்களால் ஏற்படும் ஒரு பாக்டீரியா நோயாகும்.

## INCOIS மையத்தின் 26வது ஸ்தாபன தினம்

- இந்தியத் தேசியக் கடல் சார் தகவல் சேவை மையம் (INCOIS) ஆனது 1999 ஆம் ஆண்டில் தெலுங்கானாவின் ஐதராபாத் நகரில் நிறுவப்பட்டது.
- இது புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் (MoES) கீழ் செயல்படும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது இந்தியா மற்றும் 28 இந்தியப் பெருங்கடல் நாடுகளுக்கு, 10 நிமிடங்களுக்குள் சுனாமி எச்சரிக்கைகளை வழங்கச் செய்கின்ற இந்திய சுனாமி முன் எச்சரிக்கை மையத்தினை (ITEWC) நிறுவியது.
- இது யுனெஸ்கோ அமைப்பினால் சிறந்த சுனாமி முன்னெச்சரிக்கை சேவை வழங்கும் அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- கடலில் தொலைந்து போன தனிநபர்கள் அல்லது பொருட்களைக் கண்டுபிடிப்பதில் உதவுவதற்காக INCOIS நிறுவனமானது தேடல் மற்றும் மீட்பு உதவிக் கருவியை (SARAT) உருவாக்கியுள்ளது.
- இந்தத் தின நிகழ்வின் போது INCOIS மையமானது, ஹில்சா மீன்வள ஆலோசனை (HiFA) வழங்கீட்டு சேவைகள் மற்றும் INCOIS உலகளாவியப் பெருங்கடல் மறு பகுப்பாய்வு (IGORA) பதிப்பு 1 ஆகிய இரண்டு புதியத் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியது.

## கூடுதல் நீளம் கொண்ட தரமான இழை (ELS) கொண்ட பருத்தி

- 2025 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், "பருத்தி வேளாண்மையின் உற்பத்தித் திறன் மற்றும் அதற்கான நிலைத்தன்மையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கும், கூடுதல் நீளம் கொண்ட தரமான இழை (ELS) கொண்ட (ELS) பருத்தி வகைகளை ஊக்குவிப்பதற்குமான" ஐந்து ஆண்டு திட்டம் அறிவிக்கப்பட்டது.
- பருத்தியானது அதன் இழைகளின் நீளத்தின் அடிப்படையில் நீண்ட, நடுத்தர அல்லது குறுகிய இழையாக வகைப்படுத்தப்படுகிறது.
- இந்தியாவில் வளர்க்கப்படும் பருத்தி வகையில் தோராயமாக 96 சதவீதப் பங்கினைக் கொண்ட கோசிபியம் ஹிர்சுட்டம், நடுத்தர இழை வகையைச் சேர்ந்தது.
- அதன் இழை நீளம் 25 முதல் 28.6 மி.மீ வரை இருக்கும்.
- அதே சமயம், ELS வகைகள் ஆனது 30 மி.மீ மற்றும் அதற்கு மேற்பட்ட இழை நீளத்தைக் கொண்டுள்ளன.
- பெரும்பாலான ELS பருத்தி வகையானது, பொதுவாக எகிப்திய அல்லது பிமா பருத்தி என்று அழைக்கப்படும் கோசிபியம் பாரபடென்ஸ் இனத்திலிருந்து பெறப்படுகிறது.
- தென் அமெரிக்காவில் தோன்றிய ELS பருத்தி வகையானது, இன்று பிரதானமாக சீனா, எகிப்து, ஆஸ்திரேலியா மற்றும் பெரு ஆகிய நாடுகளில் வளர்க்கப்படுகிறது.
- இந்தியாவில், மகாராஷ்டிராவின் சாங்லி மாவட்டத்தில் உள்ள அட்பாடி தாலுக்காவின் மழைப்பொழிவு மிக்க பகுதிகளிலும், தமிழ்நாட்டில் கோயம்புத்தூரைச் சுற்றியும் சில ELS பருத்தி வகை வளர்க்கப்படுகின்றன.
- தற்போது, இந்தியாவில் ELS பருத்தி வகையின் ஒரு ஏக்கருக்கான மகசூல் அளவு மற்ற நாடுகளை விட கணிசமாகக் குறைவாக உள்ளது.
- உதாரணமாக, பிரேசில் ஒரு ஏக்கருக்கு சராசரியாக 20 குவிண்டால் மகசூல் கொண்டு உள்ள அதே நேரத்தில் சீனா 15 குவிண்டால் மகசூலைக் கொண்டுள்ளது.

## டெல்லி ஒன்றியப் பிரதேசச் சட்டமன்றத் தேர்தல் 2025

- சட்டமன்றத் தேர்தலில் 70 இடங்களில் 48 இடங்களைக் கைபற்றியதன் மூலம் 26 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு பா.ஜ.க டெல்லியில் வெற்றி பெற்று உள்ளது.
- ஆம் ஆத்மி கட்சி (AAP) ஆனது 22 இடங்களில் வெற்றி பெற்ற நிலையில் காங்கிரஸ் தொடர்ந்து மூன்றாவது முறையாக தோல்வியடைந்தது.
- மதியா மஹால் தொகுதியில் ஆம் ஆத்மி வேட்பாளர் ஆலே முகமது இக்பால் 42,724 வாக்குகள் வித்தியாசத்தில் அதிக வெற்றியைப் பெற்றார்.
- பாஜக கட்சியின் வேட்பாளர் சந்தன் குமார் சௌத்ரி என்பவர், சங்கம் விஹார் என்ற தொகுதியில் மிகவும் குறைந்தபட்சமாக 344 வாக்குகள் என்ற வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.
- பிப்ரவரி 05 ஆம் தேதி முடிவடைந்த இந்தத் தேர்தலில் ஒட்டு மொத்தமாக 60.39% அளவு வாக்குகள் பதிவானது.
- அதிகபட்ச வாக்குப்பதிவு ஆனது முஸ்தபாபாத்தில் (69%) பதிவானது.
- கரோல் பாக் தொகுதியில் மிகக் குறைந்தபட்ச வாக்குகள் (47.40%) பதிவானது.

- சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முறையாக, டெல்லி மற்றும் அதை ஒட்டிய அனைத்து மாநிலங்களிலும் பாஜக இப்போது ஆட்சியைக் கொண்டிருக்கும்.

## 'Art in Prison' முன்னெடுப்பு

- நாட்டுப்புறக் கலை, நாடகம், தாவரவியல் சார் நீல அச்சுப்படிவக் கலை மற்றும் இசை போன்ற கலைகளை சென்னை மத்திய சிறைச்சாலைக்குள் (புழல்-1) அறிமுகப் படுத்த வேண்டியது பற்றிய 'Art in Prison' முன்னெடுப்பானது, தற்போது ஓராண்டு காலத்திற்குத் தொடரப்பட உள்ளது.
- இந்த முன்னெடுப்பினை சுமனாசா அறக்கட்டளை மற்றும் திட்டம் 39A ஆகியவை நம் வீடு நம் ஊர் நம் கதை அமைப்புடன் இணைந்து மேற்கொள்கின்றன.
- இந்த முன்னெடுப்பில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள புத்தக இயக்கத்திற்காக ஏற்கனவே சுமார் 500 புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ஒரு சேகரிப்பு இயக்கத்திற்குப் பிறகு, இந்தப் புத்தகங்கள் ஆனது புழல் மத்திய சிறைச் சாலையின் கைதிகளுக்கு அனுப்பப்படும்.

## NSS அமைப்பின் 75வது ஆண்டு விழா

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் (NSS) 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.
- 1950 ஆம் ஆண்டில், நிதி அமைச்சகத்தில் தேசிய மாதிரி ஆய்வு இயக்குநரகம் ஆனது நிறுவப்பட்டது.
- 1957 ஆம் ஆண்டில், இந்த இயக்குநரகமானது அமைச்சரவை செயலகத்திற்கு மாற்றப் பட்டது.
- 1970 ஆம் ஆண்டில், இது திட்டமிடல் அமைச்சகத்தின் புள்ளிவிவரத் துறையின் தேசியப் புள்ளிவிவரப் பணியின் ஒரு பகுதியாக மாறியது.
- இது 1999 ஆம் ஆண்டு முதல் புதிதாக உருவாக்கப்பட்ட புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் (MOSPI) கீழ் உள்ளது.
- இந்த அமைச்சகம் ஆனது இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது, அவற்றுள் ஒன்று புள்ளியியல் தொடர்பானது மற்றும் மற்றொன்று திட்ட அமலாக்கம் தொடர்பானது ஆகும்.
- தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) எனப்படுகின்ற புள்ளியியல் பிரிவு ஆனது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது.
    - மத்தியப் புள்ளியியல் அலுவலகம் (CSO),
    - கணினி மையம் மற்றும்
    - தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSSO).

## டோக்ரா கலைப் பொருட்கள்

- இந்தியப் பிரதமர் அவர்கள், பிரான்சின் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் மற்றும் அவரது மனைவி பிரிஜிட் மக்ரோனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் கைவினைப் பொருட்களைப் பரிசாக வழங்கினார்.
- 4000 ஆண்டுகளுக்கும் மேலான ஒரு நுட்பமான டோக்ரா கைவினைப் பொருள் ஆனது, சத்தீஸ்கரைச் சேர்ந்த ஒரு பாரம்பரிய உலோக-வார்ப்பு நுட்பமாகும்.

- இந்தக் கலை வடிவத்திற்கு மிகவும் துல்லியமான மற்றும் ஒரு சிக்கலான கைவினைக் கலைத் திறன் தேவைப்படுகிறது என்பதோடு மேலும் இந்தக் கைவினைப் பொருட்கள் பொதுவாக பித்தளை, நிக்கல் மற்றும் துத்தநாக உலோகக் கலவைகளால் ஆனவை ஆகும்.
- செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டிற்காக அவர் அந்த நாட்டிற்கு விஜயம் செய்த போது பிரான்சு நாட்டு அதிபரின் மனைவிக்கு, மிகுந்த வேலைப்பாடுகள் கொண்ட ஒரு வெள்ளிக் கண்ணாடியையும் பரிசாக வழங்கினார்.
- இது இராஜஸ்தானைச் சேர்ந்த கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட நேர்த்தியான கை வேலைபாடுகள் கொண்ட கண்ணாடி ஆகும்.

## தோல் தடிப்பு நோய் தடுப்பூசி – பயோலம்பிவாக்சின்

- பாரத் பயோடெக் குழுமத்தின் நிறுவனமான பயோவெட் என்ற நிறுவனம், பயோலம்பி வாக்சின் தோல் தடிப்பு நோயானது (LSD) தடுப்பூசிக்கான மத்திய மருந்து தரநிலைகள் கட்டுப்பாட்டு அமைப்பின் (CDSCO) உரிமத்தைப் பெற்றுள்ளது.
- இது கறவை மாடுகள் மற்றும் எருமைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த தோல் தடிப்பு நோய் (LSD) ஆனது முதன்முதலில் இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் ஜூலை மாதத்தில் ஒடிசா மாநிலத்தில் கண்டறியப்பட்டு பின்னர் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 20 மாநிலங்களுக்குப் பரவியது.
- இந்த நோயானது கால்நடைகள் மற்றும் ஆசிய நீர் எருமைகளைப் பாதிக்கிறது.
- பூச்சிகளால் பரவுகின்ற இந்த நோயானது, பால் உற்பத்தியில் மிகவும் குறிப்பிடத்தக்க குறைவினை ஏற்படுத்துகிறது.

## ரத்னகிரி பௌத்த அகழ்வாராய்ச்சிகள்

- இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) ஆனது, ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டத்தில் உள்ள ரத்னகிரி தளத்தில் மேற்கொள்ளப்படும் புதிய அகழ்வாராய்ச்சியின் போது முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த/புத்த மத எச்சங்களைக் கண்டெடுத்துள்ளது.
- அவர்கள் மிகவும் சமீபத்தில் மூன்று பிரம்மாண்டமான புத்தர் தலைகள், ஒரு பெரிய உள்ளங்கை, ஒரு பழங்கால சுவர் மற்றும் சில கல்வெட்டுகளைக் கண்டெடுத்துள்ளனர்.
- "ரத்தின மலை" எனப் பொருள்படும் ரத்னகிரி ஆனது பிராமணி மற்றும் அதன் துணை நதியான பிருபா ஆகிய இரண்டு நதிகளுக்கு இடையே அமைந்துள்ளது.
- உதயகிரி மற்றும் லலித்கிரி ஆகியவற்றுடன் கூடிய ஒடிசாவின் புகழ்பெற்ற ஒரு வைர முக்கோணப் பகுதியின் மூன்று முனைகளில் இதுவும் ஒன்றாகும்.
- நரசிம்மகுப்த பாலாதித்யா (கி.பி. 495-530) என்பவரின் ஆட்சியின் போது, இந்த வைர முக்கோணப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் ஒரு ஆரம்பகால வரலாற்றுக் கட்டமைப்புகள் கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.
- ரத்னகிரி மடம்தான் இந்தியாவில் வளை கோட்டுக் கூரையுடன் கூடிய ஒரே பௌத்த மடாலயம் ஆகும்.
- 1958 மற்றும் 1961 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட முதல் அகழ்வாராய்ச்சிகள் ஆனது பின்னாளில் இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையத்தின் முதல் பெண் தலைமை இயக்குநராக (1981-83) பணியாற்றிய டெபாலா மித்ராவால் மேற்கொள்ளப்பட்டன.

## ஃபுலானி சமூகம் - ‘பசுமை சஹாரா’ காலம்

- ஆப்பிரிக்காவின் மிகப்பெரியதொரு இடையர்/ஆயர் பிரிவினரில் ஒன்றான ஃபுலானி, 'பசுமை சஹாரா' காலத்தினைச் சேர்ந்ததற்கான (தற்போதைய காலக் கட்டத்திற்கு 12,000 - 5,000 ஆண்டுகளுக்கு முன்பு) ஒரு வரலாற்றைக் கொண்டுள்ளது.
- சுமார் 40 மில்லியன் என்ற எண்ணிக்கையினைக் கொண்ட ஃபுலானி மக்கள், மேற்கு ஆப்பிரிக்காவின் அட்லாண்டிக் கடற்கரையிலிருந்து மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள சாட் ஏரி வரையிலான பகுதிகளில் காணப்படுகின்றனர்.
- அவர்கள் பிரதானமாக நைஜீரியா, மாலி, கினியா, செனேகல் மற்றும் நைஜர் ஆகிய நாடுகளில் அதிகமாக உள்ளனர், ஆனால் பல நாடுகளிலும் காணப்படுகின்றனர்.
- இவர்கள் ஃபுலானிகள் மகியாயா (மேய்ப்பர்கள்), ஃபுலானின் சோரோ (நகரங்களில் வசிப்பவர்கள்) மற்றும் காடுகளில் வாழும் ஃபுலானியைக் குறிக்கின்ற பராரோ என மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

## பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பச் சேவை தர வரிசை 2025

- இந்த அறிக்கையில் மொத்த நிறுவன மதிப்பில் 36 சதவீத பங்களிப்பினைக் கொண்டு இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- அமெரிக்காவைத் தொடர்ந்து, மொத்த நிறுவன மதிப்பில் சுமார் 40 சதவீதப் பங்குடன், தகவல் தொழில்நுட்பச் சேவைகளின் நிறுவன மதிப்பில் இந்தியா தனது முன்னணி நிலையைத் தக்க வைத்துள்ளது.
- முதல் 25 இடங்களில் உள்ள நிறுவனங்களில் 15 நிறுவனங்களின் நிறுவன மதிப்புகள் அதிகரித்துள்ளன.
- அக்சென்ச்சர் நிறுவனத்தின் நிறுவன மதிப்பு ஆனது சுமார் 2 சதவீதம் உயர்ந்து 41.5 பில்லியன் டாலராக உள்ளது.
- இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் மதிப்பு 15 சதவீதம் உயர்ந்து 16.3 பில்லியன் டாலராக உள்ளது.
- இது தொடர்ந்து நான்காவது ஆண்டாக உலகின் முதல் மூன்று மதிப்புமிக்க தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவங்களில் ஒன்றாக உள்ளது.
- இன்ஃபோசிஸ் நிறுவனமானது, கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறுவன மதிப்பில் (சுமார் 18 சதவீதம்) மிகவும் விரைவான ஒரு கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை (CAGR) அடைந்துள்ளது.
- HCL டெக் நிறுவனம் ஆனது (இந்நிறுவன மதிப்பு சுமார் 17 சதவீதம் அதிகரித்து 8.9 பில்லியன் டாலராக உள்ளது) 2025 ஆம் ஆண்டில் உலகின் மிகவும் வேகமாக வளரும் தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

## கல்யாணச் சாளுக்கியர் சகாப்த கன்னட கல்வெட்டுகள்

- தெலங்கானாவின் விகாராபாத்தில் உள்ள புதூர் மண்டல் எனுமிடத்தில் உள்ள கண்கல் கிராமத்தில் முதன்முறையாக கல்யாணச் சாளுக்கியச் சகாப்தத்தின் மூன்று புதியக் கன்னட கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.
- கல்யாணச் சாளுக்கிய வம்சத்தின் பேரரசர் மூன்றாம் சோமேஸ்வரப் பூலோகமல்ல தேவரின் 4, 5 மற்றும் 6 ஆம் ஆட்சி ஆண்டுகளில் அவை வழங்கப் பட்டன.
- அவை முறையே கி.பி. 1129 ஆம் ஆண்டு டிசம்பர் 25, கி.பி. 1130 ஆம் ஆண்டு அக்டோபர் 05 மற்றும் கி.பி. 1132 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் தேதிகளைச் சேர்ந்தவையாகும்.

## C40 சிட்டீஸ் மற்றும் UN-வாழ்விடங்கள்

- பசுமை மற்றும் தகவமைப்பு மிக்க ஒரு நகர்ப்புற மாற்றத்திற்கான ஆப்பிரிக்க மன்றம் ஆனது கென்யாவின் நைரோபி நகரில் நடைபெற்றது.
- C40 சிட்டீஸ் மற்றும் UN-வாழ்விடங்கள் ஆகியவை ஒரு நகர்ப்புறத் திட்டமிடலை மாற்றி அமைப்பதற்கான ஒரு முக்கியக் கூட்டாண்மையை அறிவித்துள்ளன.
- 2050 ஆம் ஆண்டிற்குள் உலக நகரங்கள் தனது உமிழ்வை சுமார் 25% குறைக்க உதவும் வகையில் இந்தக் கூட்டாண்மை ஆனது ஒரு புதிய நகர்ப்புறத் திட்டமிடல் ஊக்கத் திட்டத்தினை உருவாக்கும்.

## நியோதெதிஸ் பெருங்கடல் தட்டு

- ஒரு காலத்தில் அரேபிய மற்றும் யூரேசியக் கண்டங்களுக்கு அடியில் அமைந்திருந்த நியோதெதிஸ் பெருங்கடல் தட்டானது கிடைமட்டமாக உடைந்து வருவதை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த மாபெரும் கட்டமைப்பு மாற்றம் ஆனது ஜாக்ரோஸ் என்ற மலைகளுக்கு அடியில் நடைபெற்று வருகிறது.
- இது தென்கிழக்குத் துருக்கி, வடமேற்கு ஈரான் மற்றும் ஈராக்கின் குர்திஸ்தான் பகுதி முழுவதும் பரவியுள்ள ஒரு பரந்த மலைத்தொடராகும்.
- மில்லியன் கணக்கான ஆண்டுகளாக, அரேபிய மற்றும் யூரேசியத் தட்டுகள் மோதிக் கொள்கின்றன என்ற நிலையில் இந்த ஒரு நிகழ்வானது இந்தப் பெருங்கடல் தட்டினை பூமியின் மூடகத்தினுள் கீழ் நோக்கித் தள்ளியுள்ளது.
- இந்தச் செயல்முறை தொடர்ந்து நிகழ்ந்த போது, கீழிறங்கும் ஒரு கடல் தட்டானது ஒரு நங்கூரம் போல செயல்பட்டு, பூமியின் மேலோட்டினை நன்கு இழுத்து, சில மில்லியன் கணக்கான ஆண்டுகளாகக் குவிக்கப்பட்ட வண்டலைக் கொண்ட ஒரு மாபெரும் பள்ளத்தை உருவாக்குகிறது.
- அரேபிய மற்றும் யூரேசியத் தட்டுகள் மோதி, ஜாக்ரோஸ் மலைகளை மேலே தள்ளி, காலப் போக்கில் அரிக்கப்பட்டு வண்டல்கள் படியும் போது மெசொப்பொத்தேமிய சமவெளிகள் உருவாகின்றன.

## குய்லின்-பாரே நோய் பாதிப்பு (GBS)

- மகாராஷ்டிராவின் புனே நகரத்தில் தொடர்ந்து அதிகரித்து வரும் உயிரிழப்புகளின் எண்ணிக்கைக்கு குய்லின்-பாரே நோய்ப் பாதிப்பு / நோய்க்குறி (GBS) ஒரு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.
- இந்தப் பகுதிகளில் கோலிஃபார்ம், E. கோலை, நோரோவைரஸ் மற்றும் C. ஜெஜூனி ஆகிய பாக்டீரியாக்கள் இருப்பதை ஒரு பகுப்பாய்வு உறுதிப்படுத்தியது.
- குய்லின்-பாரே நோய்க்குறி என்பது நோயெதிர்ப்பு அமைப்பு ஆனது நரம்புகளைத் தாக்கி, பலவீனம், உணர்வின்மை அல்லது பக்கவாதத்தை ஏற்படுத்தும் ஒரு நிலை ஆகும்.

## AIMC அமைப்பு

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம் (MoRTH) ஆனது, தானியங்கி மற்றும் நுண்ணறிவு சார் இயந்திர உதவியுடன் கூடிய கட்டுமான (AIMC) அமைப்பின் பயன்பாட்டைத் துரிதப்படுத்தியுள்ளது.

- இது சாலை அமைக்கும் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் கட்டுமானத்துடன் சேர்த்து ஆய்வும் மேற்கொள்ளப்படுவதால், ஒவ்வொரு சாலையமைப்புத் திட்டத்தின் நிலை குறித்த நிகழ்நேரத் தரவை வழங்கும்.
- இவ்வாறு உருவாக்கப்பட்ட தரவு ஆனது, பங்குதாரர்களுக்கு நிகழ்நேர அடிப்படையில் அனுப்பப்படும்.
- கட்டுமானத்தில் உள்ள 63 கி.மீ நீள லக்னோ-கான்பூர் விரைவுச் சாலைத் திட்டத்தில், NHAI ஆனது, AIMC அமைப்பினை ஒரு சோதனை முயற்சியாக செயல்படுத்தி வருகிறது.
- இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பில் சுமார் 1.46 லட்சம் கி.மீ. நீள சாலைக் கட்டமைப்பு உள்ளது.
- இந்த வலையமைப்பில், சுமார் 3,000 கி.மீ. ஆனது மிகவும் அதிவேக வழித்தடங்களைக் கொண்டுள்ளது.
- 2047 ஆம் ஆண்டு வரையில் மேலும் 45,000 கி.மீ. நீள சாலைகளை அமைப்பதற்கான ஒரு தொலைநோக்குத் திட்டத்தினை இந்தியா கொண்டுள்ளது.

## வேலைவாய்ப்பு தொடர்பான செயல்பாடுகளில் செலவிடப்படும் நேரம்

- இந்தியர்கள் ஏற்கனவே ஒரு நாளைக்கு எனச் சராசரியாக 422 நிமிடங்கள் - வாரத்திற்கு சுமார் 42 மணிநேரம் – ஊதியம் பெறும் வேலைவாய்ப்பில் செலவிடுகிறார்கள்.
- இதில் நகர்ப்புறத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 469 நிமிடங்கள் (7.8 மணிநேரம்) செலவிடுகிறார்கள் என்ற நிலையில் கிராமப்புறத் தொழிலாளர்களில் சராசரியாக 399 நிமிடங்கள் (6.65 மணிநேரம்) ஆக உள்ளது.
- டாமன் & டையூ மற்றும் தாத்ரா & நகர் ஹவேலி போன்ற ஒன்றியப் பிரதேசங்களின் மக்கள் தினசரி வேலைகளில் 600 நிமிடங்களுக்கு மேல் ஈடுபடுகின்றனர்.
- இதற்கு நேர்மாறாக, கோவா மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் மிகச் சராசரியாக 360 நிமிடங்களுக்கும் குறைவாகவும் டெல்லி 8.3 மணிநேரமும், கோவா 5.5 மணிநேரமும் மட்டுமே செலவிடுகின்றன.
- நகர்ப்புறப் பெண்கள் ஆண்களை விட தினமும் இரண்டு மணி நேரம் குறைவாக வேலை செய்கிறார்கள் அதே நேரத்தில் கிராமப்புற பெண்கள் ஆண்களை விட 1.8 மணி நேரம் குறைவாக வேலை செய்கிறார்கள்.
- வேலை நேரத்தில் சுமார் 1% அதிகரிப்பு ஆனது, தனிநபர் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியில் (NSDP) பதிவான 1.7% அதிகரிப்புடன் தொடர்பு கொண்டுள்ளது.
- பெரிய மாநிலங்களுக்கு, இந்த தாக்கம் ஆனது இன்னும் வலுவானது, அதாவது வேலை நேரங்களின் ஒவ்வொரு 1% அதிகரிப்புக்கும் 3.7% நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு பதிவாகிறது.
- தற்போது, குஜராத் ஆனது வாரத்திற்கு சுமார் 70 மணி நேரத்திற்கும் மேலாக வேலை செய்கின்ற மிகவும் அதிகபட்ச மக்கள் தொகை விகிதத்தினை (7.21%) கொண்டுள்ளது என்ற ஒரு நிலையில் இது பீகாரில் வெறும் 1.05% ஆக மட்டுமே உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★